www.padippakam.com

# மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

## நூற்றாண்டு விழா (1910-2010)



நூற்றாண்டு விழா சிறப்பிதழ்

# மண்ணிறம்

14.11.2010

மகாஜனா பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மண்ணிறம்

மண்ணின் வகைகள் பல. மண்ணின் நிறங்கள் பல. ஒவ்வொன்றும் ஒரு விதம். செம்மண்ணிற்கு பிரத்தியேகமான சிறப்புண்டு. எந்தப்பயிரும் அதில் சிறப்பாக வளரும்.

மண்ணின் நிறம் பொதுவாக மண்ணிறமாகவே கொள்ளப்படுகிறது. இது செம்மையும் மஞ்சளும் கலந்த ஒரு வகை நிறம். மனிதப் பார்வைக்கு நிறங்கள் அடிப்படையில் ஏழு. அந்த ஏழிற்குள் பலஆயிரம் வர்ணங்கள் - ஆயிரமாயிரம் மிகநுண்ணிய அழகியல் வேறுபாடுகளுடன்.

நாம் தடம் பதித்த மண்ணின் நிறம் மண்ணிறம். இது மகாஜனனாக எமைத் திரும்பிப் பார்க்க வைக்கும் நிறம்.
இந்த மண்ணிறத்தை எங்கள் கல்லூரியின் நிறமாக அடையாளப்படுத்தியவர் எப்பேர்ப்பட்ட கனவுகளுடன் இருந்திருப்பார்! நூற்றாண்டுவேளையில் அந்த மனிதரை நினைத்துப் பார்க்கையில் மலைப்புடன் பெருமையுறுகிறோம். அவரது கனவின் நினைவாக இம்மலருக்கு மண்ணிறம் என்று பெயரிட்டு மகிழ்கிறோம்.

எப்போதுமே தனதுபாட்டில் ஓடிக் கொண்டே இருக்கும் காலச் சக்கரச் சுழற்சியில், மகாஜனாவின் நூற்றாண்டு நிதானமாகத்தான் வந்தது. தனது சொந்த மண்ணில் பாடசாலை நிர்வாகம் நூற்றாண்டுவிழாவை சிறப்பாக நடாத்தி மலரொன்றினையும் வெளியிட்டிருக்கிறது. புலம்பெயர்ந்த பழைய மாணவர் சங்கங்களாக ஏற்கனவே கனடா கிளையினர் பாரிய அளவில் மிகநீண்டகால தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். லண்டன் கிளையினர் நூற்றாண்டு நினைவாக சிறிய அளவிலான மலர் ஒன்றினை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வரிசையில் பிரான்சு கிளையினராகிய நாம் இம்மலரினைத் தொகுத்திருக்கிறோம். ஆனால் இதன் தயாரிப்புக்கு எடுத்த காலம்தான் மிகக்குறுகியது.

மகாஜனாவின் நூற்றாண்டு மலர்களாக பல வெளிவந்துள்ள நிலையில், பிரான்ஸ் சங்கம் பதிவாக்கும் இம்மலரில் கூறியன திரும்பக்கூறாமை தொடர்பாக அதிக கவனங்கொள்ள வேண்டியதாயிற்று. பெரியளவில் ஒருங்கிணைந்த திட்டமெதுவுமிருக்காததால் அச்சில் ஏறாதவை தொடர்பாக அறிய முடியவில்லை. இதற்கமைவாக எமது சக்திக்குட்பட்டவகையிலும், நினைவுகள் மூலமும் ஒரு காலத்தைப் பதிவாக்க மட்டும் விரும்பினோம். ஆயினும் கடைசிநேரத்தில் கனடா மலர் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்போடப்பட எமது மலரும் தன்னியல்பாக விரிந்துபோக திணறிப்போனோம். இப்படியாக சூழ்நிலைத் தாக்கங்களை உள்வாங்கித் தகவமைத்தவாறு இம்மலர் அச்சேறுகிறது.

இந்த நூற்றாண்டு மலரினை நாம் தொகுத்தபோது பத்து தசாப்தங்களில் மகாஜனாவுடன் வாழ்ந்த பல தலைமுறையினரது நினைவுகளின் பதிவுகளாக விரவிக்கிடக்கின்றன. உடல் - உள ஆரோக்கியத்தைப் பெரிதும் ஊக்குவித்த பாடசாலையின் நினைவுகளை மனந்திறந்துள்ளார்கள் பதிவர்கள். மகாஜனாவின் கலை இலக்கிய பாரம்பரியத்தையும் அதன் செழுமையையும் இம்மலரில் வெளிவந்த நினைவுக்குறிப்புகளும், ஆக்கங்களும் நிரூபிக்கவே செய்கின்றன. நன்றி மறவாமை மானிடத்தின் உயரிய பண்பு. இதனை பழைய மாணவர்களாக மனங்கொண்டு நாடு விட்டு தொலை தூரத்தில் வந்திருந்தும் தொலைந்து போகாமல் சமூக அசைவியக்கத் தேரில் வடம்பிடிக்கும் அனைத்து மகாஜனன்களின் பதிவுச் சான்றுதான் இம்மலர். இதுதான் மண்ணிறம்.

உலகெங்கும் பரவி வாழும் மகாஜனன்களுடன் இந்த நூற்றாண்டு மலர் வழியாக நேசக் கைகுலுக்கலைத் தந்து நன்றி தெரிவித்து மகிழ்வு கொள்கிறது மண்ணிறம்.

எதற்கும் முகம்கொடுத்தவாறு மீளெழும் மகாஜனாவின் கல்விசார் செயற்பாடுகளும் அதன் சாதனைகளும் கிராமத்தில் அமைந்த பாடசாலை என்று வைத்துப்பார்த்தால் அது இமாலயசாதனைதான். யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட எமது பாடசாலை மீண்டும் தலை நிமிரத்தொடங்கியிருக்கிறது.

பாவலர் விதைத்த விதை ஒரு நூற்றாண்டு காலம் தனக்குரிய பணியினை செவ்வனே செய்திருக்கிறது. விதை விருட்சமாகி விழுதுகள் பரப்பி உலகெலாம் விரிந்து செழித்துக் கிடக்கிறது. இப்போது அடுத்த நூற்றாண்டுக்குள் காலடி வைக்கிறது. அடுத்த நூற்றாண்டுக்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்டுச் செயற்படவேண்டுகிறார் மகாஜனனும் பேராசிரியருமான பொ. ரகுபதி. அதற்கான காலமிது. அதுவே பாவலருக்கு நாம் தரும் காணிக்கை.

வெல்லுக வெல்லுக மகாஜன மாதா!

மகாஜனா ப.மா.ச.-பிரான்ஸ்

மண்ணிறம்

நூற்றாண்டுவிழா
சிறப்பு மலர்

❀

இம்மலரினை
ஆக்கியோர் :

சி. மனோகரன்
நா. வரதராஜா
க. முகுந்தன்

❀

வெளியீடு
மகாஜனக்கல்லூரி
பழையமாணவர் சங்கம்
பிரான்ஸ்
14.11.2010

தொடர்பு முகவரி :
Mahajana O.S.A.
3, Square Jodulet
93420 Villepinte, France
www.mahajanaosaparis.com

வடிவமைப்பு,
அச்சுப்பதிப்பு
சங்கீதா அச்சகம், பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

## கல்லூரிக்கீதம்


ஜய ஜய மாஜன ஜயசுப மாதா
ஜய ஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத்தினம் பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜனத் தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

புலவர் நா.சிவபாதசுந்தரனார்



## கொடிக்கீதம்

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோலமுற்ற கோலில் எங்கள்
கொடிபறக்குது பாரடா
(கொடி)

(அநுபல்லவி )
தீரமுற்றுத் திருவடைந்த
தெய்வத்துரை யப்பரது
தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மாஜனாவின்
(கொடி)

(சரணம்)
மலர்மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர்விரித்து
தவம்பொலிந்த மாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள்பணிவோம்
(கொடி)

தனமளித்து தவம்மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மனமகிழ்ந்து மலர்கள் தூவி
வாழியென்று வணங்குவோம்
(கொடி)

புலவர் நா. சிவபாதசுந்தரனார்



படிப்பகம்

www.padippakam.com

கல்லூரி ஸ்தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்



மகாஜனக்கல்லூரியின் ஸ்தாபகர்
**பாவலர். தெ. அ. துரையப்பாபிள்ளை**
*1872 - 1929*



படிப்பகம்

www.padippakam.com

மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத்தினம் பணி நினைவோம்



மகாஜனாவின் "சிற்பி"
**அமரர். தெ. து. ஜெயரத்தினம்**



படிப்பகம்

www.padippakam.com

# மகாஜனக்கல்லூரியின் வரலாறு




இலங்கையில் மேற்குலகக் காலனித்துவ ஆட்சிக்காலப்பகுதியில், காலனித்துவ அரசாங்கத்தினால் மிஷனரிப்-பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அப்பாடசாலைகள் கல்வியில் முன்னிலைப் படுத்தப்பட்டதுடன் அப்பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியினைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டதுடன் சைவத்தமிழ் மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது. இக்காலகட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிவந்த பாவலர் தெ. துரையப்பாப்பிள்ளை அவர்கள் சைவத்தமிழ் மக்களும் ஆங்கில மொழிப் புலமை பெற்று அவர்களும் வேலை வாய்ப்புக்களைப் பெறவேண்டும் என்ற நற்சிந்தனையோடு, தனது ஆசிரியப் பதவியினையும் துறந்து, போதிய பண வசதியோ இட வசதியோ அற்ற நிலைமையிலும் தனது அறிவாற்றலையும் தன்னம்பிக்கையையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு தெல்லிப்பழையிலுள்ள அவரது வீட்டில் 1910 ஆம் ஆண்டு மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரியை நிறுவி, அரச உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையிலும், தமிழ் மக்களின் நிதியுதவியுடன் அமெரிக்க மிசன் பாடசாலைகளுக்கு நிகராக கல்லூரியை திறம்பட நடாத்திவந்தார்.

இரண்டு வருடங்கள் பாவலர் இல்லத்தில் இயங்கிவந்த மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி, 1912 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நல்லுள்ளம் கொண்டோரது நிதியுதவியுடன் தற்போது கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கும் இடமான அம்பனை, தெல்லிப்பழை என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. பல தடவைகள் அரச உதவி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், 1919 ஆம் ஆண்டிலேயே முதல் அரச உதவி கிடைக்கப்பெற்றது. தொடர்ந்து, மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி வளாகத்தினுள் இயங்கிவந்த சரஸ்வதி தமிழ் பாடசாலை, மகாஜனக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தர வகுப்புவரை நிறுவப்பட்டது.

மகாஜனக் கல்லூரி ஸ்தாபகரான பாவலர் தெ. துரையப்பாப்பிள்ளை அவர்கள், 24.06.1929 அன்று காலமானார். அவரை நன்றியுடன் நினைவுகூரும் முகமாக ஆண்டுதோறும் அவர் இறந்த தினமான ஆனி 24 ஆம் திகதி ஸ்தாபகர் தினம் நினைவுகூரப்பட்டு வருகின்றது. ஸ்தாபகரின் மறைவைத் தொடர்ந்து, கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிவந்த திரு. சின்னப்பா அவர்கள் அதிபராகக் கடமையேற்று, பாவலர் வழியில் பாடசாலையைத் திறம்பட வழிநடாத்தி வந்தார். 1936 ஆம் ஆண்டு கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதுடன், 1943 ஆம் ஆண்டு கல்லூரியில் பெண்கள் கல்விகற்பதற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் செல்வி. இராஜமலர் சின்னையா அவர்கள் கல்லூரியின் முதலாவது ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். அதிபர் திரு. சின்னப்பா அவர்கள், 1941 ஆம் ஆண்டு நவீன விஞ்ஞானக் கல்வி கற்பிக்கும் வசதியினை கல்லூரியில் ஏற்படுத்தினார். இதுவரை 160 ஆகவிருந்த கல்லூரி மாணவர் தொகை, இவரது காலப்பகுதியில் 300 ஆக உயர்வடைந்தது. தொடர்ந்து, 17.07.1945 அன்று திரு. சின்னப்பா அவர்கள் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டார்.

அவரைத்தொடர்ந்து, கல்லூரியின் பழைய மாணவரும், 1932 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பாப்பிள்ளையின் புதல்வருமான திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் 03.09.1945 அன்று கல்லூரி அதிபராகக் கடமையேற்றுக்கொண்டார். இவரது காலப்பகுதியே மகாஜனக் கல்லூரியின் பொற்காலமாகும். கல்லூரி சகல துறைகளிலும் அபார வளர்ச்சி பெற்று 2000 மாணவர்கள் வரை கல்விகற்கக்கூடிய வசதிகொண்ட கல்லூரியாக வளர்ச்சி கண்டதுடன் இலங்கைத்தீவின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

நிர்வாகக் கட்டமைப்பு, கல்வி, விளையாட்டு, கலை, கலாச்சாரம் போன்றவற்றில் கல்லூரி சிறப்புற்றது. அத்துடன் புதிய வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டுமைதானம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நூலகம், கைவினை, மனையியல் மற்றும் நடனம் ஆகிய பாடங்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், தேனீர்ச்சாலை மற்றும் புத்தகசாலை என கல்லூரியின் வளர்ச்சி பார்ப்போர் வியக்கும் வண்ணமிருந்தது. அதுமட்டுமன்றி, மகாஜனன் என்ற வருடாந்த மலர் வெளியீட்டினையும் தொடக்கி வைத்தவர் அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களேயாவார். இதன்காரணமாக அதிபர். திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் மகாஜன சிற்பி எனப் போற்றப்படுகின்றார்.

மகாஜன சிற்பி, அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் காலப்பகுதியின் முக்கிய நிகழ்வுகள்.

1945 Mahajana College எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.
1946 மகாஜனக் கல்லூரி சுலோகம் ' உன்னை நீ அறிவாய் ' (Know theyself) பதிவாகியது.
1947 மகாஜனக் கல்லூரி விளையாட்டுப்பிரிவு, யாழ் விளையாட்டுக் கழகத்தில் (JSSA) பதிவு செய்யப்பட்டது.
1947 மகாஜனக் கல்லூரிக்கு இரண்டாந்தரப் (Grade 2) பாடசாலைக்குரிய அரச நியமனம் கிடைத்தது.
1948 உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் (HSC) ஆரம்பிக்கப்பட்டன.
1949 மகாஜனக் கல்லூரிக்கு முதற்தர (Grade 1) பாடசாலைக்குரிய அரச நியமனம் கிடைத்தது.
1951 கல்லூரிக்கீதம் மற்றும் கொடிக்கீதம் என்பன ஆசிரியர் வித்துவான் சிவபாதசுந்தரனார் அவர்களால் இயற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.
1952 புதிய நவீன பௌதீக ஆய்வுகூடம் திறக்கப்பட்டது.
1953 புதிய நவீன இரசாயன ஆய்வுகூடம் திறக்கப்பட்டது.
1954 இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மகாஜனக் கல்லூரியை நாடிவர ஆரம்பித்ததைத் தொடர்ந்து மாணவர் தங்குவிடுதி கட்டப்பட்டது.
1955 ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை நினைவு மண்டபம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
1956 மாவிட்டபுர கந்தசுவாமி கோவில் பூசை ஒன்று மகாஜனக் கல்லூரியின் பெயரில் வருடாந்தம் செய்வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.
1958 விளையாட்டு மைதானம் மறுசீரமைக்கப்பட்டது.
1958 நடனம், மனையியல், கைவினை மற்றும் மரவேலை போன்ற பாடங்களுக்கான பிரத்தியேக வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் அமைக்கப்பட்டன.
1960 கல்லூரியின் 50 ஆவது வருடப் பூர்த்தியினை முன்னிட்டு பொன்விழா கொண்டாடப்பட்டது.
ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.
சிவகாமி சமேத நடராஜர் ஆலயம் அமைக்கப்பட்டது.
1961 மகாஜனக் கல்லூரி 'Super Grade' பாடசாலையாக அரசாங்கத்தினால் தரமுயர்த்தப்பட்டது.
1963 38 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று யாழ் மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையினை கல்லூரி பெற்றது.

1970 வைர விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.
மகாஜன சிற்பி அதிபர் திரு. தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1971-1972 வரை திரு. எம். மகாதேவன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார்.

1972-1973 வரை திரு. பி. எஸ். குமாரசாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார்.

1972 இல் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்களது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

1973-1976 வரை திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார்.

1976-1979 வரை கல்லூரியின் நீண்டநாள் ஆசிரியரான திரு. பொ. கனகசபாபதி அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார்.

1976 இல், ஓய்வு பெற்றபின்னரும் கல்லூரியின்பால் மிகவும் கரிசனையுடன் இருந்துவந்த அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் 29.10.1976 அன்று காலமானார். தொடர்ந்து, ஆண்டுதோறும் ஐப்பசி 29 அன்று மகாஜன சிற்பி ஜெயரத்தினம் நினைவு நாள் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

1979.12.01 அன்று கல்லூரியின் அதிபராக திரு. கே. எஸ். இரத்தினேஸ்வர ஐயர் கடமையேற்றார்.

1980.07.01 அன்று திரு. பொன். சோமசுந்தரம் அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றார்.
1983.06.12 அன்று திரு. ரி. சண்முகசுந்தரம் அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றார்.

1984.08.01 அன்று திரு. வி. கந்தையா அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றார்.

1985.12.04 அன்று திரு. கெ. நாகராஜா அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றார்.

1990 ஆம் ஆண்டு கல்லூரி போரினால் இடம்பெயர்ந்து அருணோதயாக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கியது.

1991 ஆம் ஆண்டு மீண்டும் அருணோதயாக் கல்லூரியிலிருந்து இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரியில் இயங்கியது.

1994-1999 வரை மருதனார் மடத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு கல்லூரி இயக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டு, அதிபர் திரு. கெ. நாகராஜா அவர்களின் ஓய்வினைத் தொடர்ந்து, கல்லூரியின் உப அதிபராகவிருந்த திரு. பி. சுந்தரலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார்.

15.10.1999 அன்று கல்லூரி மீண்டும் சொந்த இடமான தெல்லிப்பழைக்கு கொண்டுவரப்பட்டு சொந்த இடத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

2006 ஆம் ஆண்டு திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்று, கல்லூரியின் முதல் பெண் அதிபர் என்ற பெருமையினைப் பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

# எனது தந்தையாரின் ஞாபகங்கள்

- தெ. து. தர்மராஜா
துணைப்பதிவாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்,
கட்டுபெத்தை வளாகம்.

எனது பன்னிரெண்டாம் வயதில் எனது தந்தையார், பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் காலமானார்கள். அவரைப்பற்றிய எனது நினைவுகள் சிறுபராய ஞாபகங்களாகவே அமையும்.
அவருடைய பல்வேறுபட்ட ஈடுபாடுகளின் பிரதிபலிப்பாக இவை எத்துணையிருக்க முடியுமென்பது ஒரு கேள்விக்குறி. இது எப்படியானாலும், வாழ்க்கையின் விருப்பு வெறுப்புக்கள் முதலியவற்றாற் பாதிக்கப்படாத எனது சிறிய உள்ளத்திற் பதிந்த நினைவுகள் பின் நோக்கிப் பார்க்கும்போது தெளிவாகவும் சார்பற்றவையாகவும் இருப்பதைக் காண்கிறேன். ஆகவே, அவை சிலவற்றை இங்கே தர முயல்கிறேன்.

எனது தந்தையாரின் நினைவுகள் என்றவுடனே அவருடைய கம்பீரமான தோற்றம், அகன்ற நெற்றி, கூரிய ஊடுருவிப்பாயும் கண்கள், வரிசையாயமைந்த வெண் பற்கள் இவைதான் மனக்கண் முன் எழுகின்றன. அவரணிந்திருக்கும் சரிகைத் தலைப்பாகையை எடுத்துவிட்டால், ஒருபோதும் எண்ணெய் தேய்த்து வாரிவிடப்படாத வரண்ட தலைமயிர் கெம்பி மேல் நோக்கி வளர்ந்திருப்பதைக் காணலாம். இந்த மாதிரி முரட்டுத் தலைமயிருள்ளவர் பெரும் பிடிவாதக்காரராயிருப்பார் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது உண்மையே. தாம் நினைத்ததைச் சாதிக்கும் குணமுடையவராயிருந்தார். ஆனால் அவருடைய பிடிவாதமே அவர்தம் சாதனைகளை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்குக் காரணமாயிருந்ததையும் காண்கிறோம்.

அவருடைய காலத்தில் மோட்டார் வண்டிகள் தெல்லிப்பழையிற் சிலரிடம் சொந்தமாகவும், அநேகமாக வாடகைக்கும் உபயோகத்துக்கு வந்துவிட்டன. ஆனால் எனது தந்தையாரோ இனிஇல்லை என்ற அவசர காரணத்துக்கல்லாமல் மோட்டார் வண்டிகளில் ஏறுவதில்லை. தாம் வைத்திருந்த மாட்டு வண்டிகளிலே தான் போய் வருவதுண்டு. அவற்றுள் ஒன்று "பல்லக்கு" வண்டி என்று கூறுவோம். பெட்டிவடிவாய், பார்ப்பதற்கு அழகாகவும் பாவனைக்கு வசதியாகவுமிருந்தது. இது விசேக்ஷ தினங்களிலேதான் உபயோகிக்கப்பட்டது. இதில் நாங்கள் போகும்போது சிறுவர்களும், பெரியவர்களும் வியப்புடன் பார்ப்பார்கள். மாட்டுவண்டிகளை நினைக்கும்போது அவைகளில் நாங்கள் அவருடன் செல்லும்போது ஏற்படும் ஒரு சிக்கலான நிலையும் நினைவுக்கு வருகிறது.
எங்களுக்கு வீட்டில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நன்னெறி, நல்வழி போன்ற நூல்களைப் படிப்பித்து அச்செய்யுள்களை மனப்பாடமாக்கச்செய்வது அவரின் வழக்கம். அவர் படுத்திருக்கும் சாய்மனைக் கதிரையைச் சுற்றி நின்று அகரம் முதல் அகேனம்வரை இச்செய்யுள்களை வரிசை தவறாமல் சொல்லுதல் வேண்டும்.



பாவலர். தெ. அ. துரையப்பாபிள்ளை

...கொழும்பிலே 1906ஆம் வருடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடந்தேறியது. அவ்வாண்டு ஆகஸ்டுமாதம் 13ஆம் திகதி ஐயாயிரம் மாட்டுவண்டிக்காரர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அக்காலத்தில் துறைமுகத்திலிருந்து பண்டங்களை ஏற்றிச் செல்லவும் துறைமுகத்துக்கு ஏற்றுமதிப் பொருட்களைக் கொண்டு செல்லவும், நகரில் வர்த்தகப் பொருட்களை எடுத்துச் செல்லவும் மாட்டு வண்டிகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. 1910ஆம் ஆண்டளவில் சுமார் இருபத்து மூவாயிரம் வண்டிகள் இருந்தன என்று 1911ஆம் ஆண்டுக் குடிசன மதிப்புப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. முனிசிப்பல் சபை புதிதாக விதித்த போக்குவரத்துச்சட்டம் ஒன்றினை எதிரத்தே ஐயாயிரம் வணடிக்காரர் வேலைநிறுத்தஞ் செய்தனர். அப்பொழுது 'உதயதாரகை' ஆசிரியராக இருந்தவர் பிள்ளையவர்கள். 23.08.1906 இதழிலே, 'வண்டிக்காரர் குழப்பம்' என்னும் தலைப்பில் '13ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கமாய் வேலைக்குப் போகவில்லை.... ஒருவரினுதவி மற்றவர்க்கு அகத்தியம் தேவையாயிருக்கு' என்று எழுதினார். பத்திராதிபர் என்ற வகையில் பிள்ளை பாரபட்சமற்றமுறையில் இவ்வாறு எழுதினார் என நாம் கொள்ளலாம். எனினும் தீவிரவாதியாக விளங்காவிடினும் வாழ்நாள் பரியந்தம் 'தொழிற்சங்கங்கள்' நிறுவுவதிலும் அவற்றை வளர்ப்பதிலும் அவருக்கு நிரம்பியநாட்டம்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது: 'இவரது சங்கங்கள் தேசியம் வாய்ந்தனவாக இருக்கும்.' யாழ்ப்பாணத்திலே பல சங்கங்களை நிறுவியதில் பெரும்பங்கு கொண்ட பெருமை துரையப்பாபிள்ளை அவர்களுக்கு உண்டு. அவை யாவற்றுள்ளும் 'உபாத்திமார் சங்கம்' நிறுவியதிலேயே அவருக்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டது எனலாம்.

'உபாத்திமாரை முகாமைக்காரர்களும் அரசாங்கமும் கவனியாதிருப்பதேனோ?.... உபாத்திமார் எல்லோரும் ஒருங்குகூடிச் செய்ய வேண்டிய விஷயங்கள் எவையென்று யோசிக்க ஓர் உபாத்திமார் சங்கம் இருத்தல் அவசியம்'.9

'உயர்ந்த சம்பளம் பெறுபவர்களுக்கே வயோதிப காலத்திலும் உபகாரச்சம்பளம் கொடுத்தற்கேற்ற ஒழுங்குகளுண்டு. அற்ப சம்பளம் பெறும் உபாத்திமார்க்கு அவ்வித ஒழுங்கில்லை... உபாத்திமார் ஒருங்குகூடி அரசாட்சியாருக்கு முறையிடுவதற்கும் போதிய நியாயங்களிருக்கின்றன.'10

தொழிற்சங்கம் என்று நேரடியாய்க் கூறாவிடினும், 'ஒருங்குகூடிச் செய்யவேண்டியதன் அத்தியாவசியத்தை மேற்காட்டிய கருத்துரைப்பகுதிகள் ஐயத்துக்கிடமின்றித் தெளிவாக்குகின்றன. இத்தகைய பிரசாரத்தின் பயனாகவும் முயற்சிகளின் விளைவாகவும் அவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் உபாத்திமார் சங்கம் ஒன்று உருவாகியது.

23ஜூன் 1906 சனிக்கிழமை பகல் பதினொரு மணியளவில் உபாத்திமார் சங்கக்கூட்டம் அடைக்கலமாதாவின் பாடசாலையில் நடைபெற்றது. அமெரிக்க, உவெஸ்லிய, சேட்சு, கத்தோலிக்க மிஷன் சங்கங்களின் கீழும் சுதேச முகாமைக்காரர்களின் கீழுமுள்ள ஆசிரியர் நிறைந்தனர். தலைவர்: தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்கள், தெல்லிப்பழை ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர். லிகிதர்: ஏ.தோமஸ், கொழும்புத்துறை போதனா வித்தியாசாலை ஆசிரியர்.11

Brother Philip என்பவர் இம்முயற்சிகளில் முக்கிய பங்கு வகித்ததாகத் தெரிகிறது. இச் சங்கத்தின் பிறிதொரு கூட்டத்திலே, உயர் சம்பளம், உபகாரச் சம்பளம் கோரல் முதலியனவற்றை உள்ளடக்கிய பல நிர்ணயங்கள் (தீர்மானங்கள்) கொண்டுவரப்பட்டன. இம்முயற்சிகளின் முக்கியத்துவத்தை இதற்குமேலும் இவ்விடத்திலே விளக்குதல் வேண்டா. தென்னிலங்கையிலும் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்த பலர்

இதில் பிழைவிட்டோ, மறந்தோ போனவர்கள் சில மனக்கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இது சிறுவர்களாகிய எங்களுக்கு எவ்வளவு கசப்பாயிருக்குமென்பது ஊகிக்கக்கூடியதே. இவ்விதமான இக்கட்டான நிலை வண்டியிற் போகும்போது தொடங்கிவிடும். ஊர்ப்புதினம் பார்த்து உல்லாசமாய்க் காலம் கழிக்கலாமென்று எதிர்பார்த்து வண்டியில் ஏறினால் அது முட்டாள்தனமாகும். ஆத்திசூடி, அகரவரிசை வண்டியிலும் தொடங்கிவிடும். இதனால் ஏற்படும் மனக்கஷ்டங்களும் விரைவிலே தொடரும்.

எங்கள் வீட்டில் கிராமிய நிகழ்ச்சிகளுக்குக் குறைவில்லை. உடுக்குத் தட்டிப் பாடும் கலைஞர்கள் வந்து பாடுவார்கள். அல்லி அரசாணி மாலை, காத்தவராயன் கதை போன்ற கதைகளை, இந்தக்கலைஞருக்குரிய தனிப் பாணியில் பாட்டுடன் வசனமும், கேள்வியும் மறுமொழியும், பகிடியும் சிரிப்பும் கலந்து வழங்குவார்கள். நிகழ்ச்சி முடிந்ததும் இவர்களுக்கு எனது தந்தையார் உபசாரங்கள் செய்து அனுப்புவார். மாதகல், பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலிருந்து செல்லச் சந்நிதிக்கு ஆட்டக்காவடிக்கூட்டங்கள் இரவிரவாய்ப் போய்க்கொண்டிருக்கும். இக் கூட்டங்களில் அநேகர் எங்கள் வீட்டு முற்றத்தில் ஆடி, தாகசாந்தி செய்து சன்மானமும் பெற்றுப் போவார்கள். இது போலவே கரகமாடுகிறவர்கள், கம்பங் கூத்தாடிகள் வந்து தங்கள் கலைத்திறனைக் காட்டிச் செல்வார்கள்.

எனது தந்தையாரைச் சுற்றியிருந்தவர்கள் கல்விமான்களாகவும் புலமை படைத்தவர்களாகவும் இருந்ததில் வியப்பேதுமில்லை. இவர்களில் ஒருசாரார் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிக்னெல் ஐயர் அவர்கள், உபஅதிபர் திரு யே.வீ. செல்லையா அவர்கள், அர்ச். யோவான் கல்லூரி உபதலைவர் குறோசெற் அவர்கள் போன்றோர். எனது தகப்பனாரை இவர்கள் அடிக்கடி வந்து பார்த்துச் செல்வார்கள். கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களும் அவ்விதமே அவருடன் நெருங்கிப் பழகினார். இவர் தாயுமான சுவாமிகளின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து «Psalms of a Saiva saint» என்ற பெயருடன் அச்சேற்றினார். இந்த நூலின் முகவுரையில் எனது தந்தையார் இந்நூல் வெளியீட்டில் செய்த உதவிக்கு நன்றி கூறியிருக்கிறார். இதிலிருந்து இத்தகைய கல்விமான்கள் ஏன் அவருடன் பழகினார்கள் என்பது புலனாகும்.

பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்களின் வருகை எனது தந்தையாரால் மிகவும் மதிப்புடன் எதிர்பார்க்கப்படுவதொன்றென்பது அவருக்கு நடக்கும் உபசாரங்களிலிருந்து தெரியும். விசேடமாக எனது தந்தையார் "சிவமணி மாலை' பாடி எழுத்துப் பிரதியாயிருந்தபொழுது ஐயரவர்களுடன் அநேக மணிநேரம் கலந்தாலோசிப்பார். அப்பொழுதெல்லாம் வீட்டில் நிசப்தம் நிலவவேண்டும். இல்லாவிட்டால் எங்கள்பாடு ஆபத்துத்தான். இருட்டிவிட்டால் ஐயரவர்களைத் தனிவழி போகவிடாமல், விளக்குடன் ஒரு ஆளை அனுப்பி வறுத்தலை விளானிலுள்ள அவரின் வீடுமட்டும் அனுப்பிவைப்பார். பன்னாலை முத்துரிகூஷி, பண்டத்தரிப்பு மோசெஸ் கந்தையாபிள்ளை, தெல்லிப்பழை சோமுப்பிள்ளை உபாத்தியாயர் போன்றோர் வருவதுண்டு. இவர்கள் அகடவிகடமாகப் பேசி எங்களையும் தந்தையாரையும் மகிழவைப்பார்கள். முத்துரிகூஷி அவர்கள் "கள்ளி முதுகாட்டின் ஆடி கண்டாய்' என்ற தேவாரச் சொற்றொடருக்கு, கள்ளி மரங்கள் தங்கள் முதுகுகளை ஆட்டினால் அது ஆடிமாதமென்று அறிவாயாக என்று பயன்சொல்லி எனது தந்தையாரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பர். "ஊரூருடுப்பிட்டி', "ஔவை', "வௌவால்' போன்ற சொற்களை எழுதச்சொல்லி நாங்கள் திணறுவதைப் பார்த்துப் பெரிதும் திருப்தி அடைவார். மோசெஸ் கந்தையாபிள்ளை அவர்கள் "ஆனா அறிந்த அந்தோனியார்' என்ற விகட கவிதையின் பாகங்களைப் பாடிக் காட்டிச் சிரிக்க வைப்பார். சிறப்பாக ஆட்டுக்குட்டி குண்டானுக்குள் தலையை வைத்துத் தன் சிறிய கொம்புகள் தடை செய்ததால் எடுக்க முடியாமற் தவிக்கும்போது 'தலையை வெட்டு' என்று புத்திமதி கூறிய அந்தோனியார், பின் வெட்டுண்ட தலை குண்டானுக்குள் விழுந்து எடுக்கமுடியாத நிலையில் 'குண்டானை உடை' என்று ஆலோசனை



படிப்பகம்

www.padippakam.com

கூறிய கட்டத்தைப் பாடும்போது சிரிப்பினால் வீடு கொந்தளிக்கும். சோமுப்பிள்ளை உபாத்தியாயரை நினைக்கும்போது எனது தந்தையார் இறந்ததினம் ஞாபகத்துக்கு வருகிறது. அவரது சடலத்துக்கருகே நின்று புலம்பிக்கொண்டிருந்த என்னைப்பார்த்து 'தம்பி வெம்பி, வெம்பி அழாதே, நம்பியிரு எம் பெருமானை' என்று 'பளிச்'சென்று கூறி ஆறுதலளித்தார். இவர் எனது தந்தையார் இருந்த காலத்தில் வந்து அவருடன் பலமணிநேரம் பேசிப்போவதுண்டு.

எனது தந்தையாருக்குச் சேர் பொன்னம்பலம் இராமநாதன் பிரபு என்றால் தனி மதிப்பு. அவரைப் பற்றிய பேச்சு வீட்டில் அடிக்கடி எழும். இராமநாதன் பிரபுவை எனது தந்தையார் இடைக்கிடை போய்ப் பார்த்து வருவார். அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பின்போது தாம் பாடிய பாட்டொன்றை எனது தந்தையார் எங்களுக்குச் சொல்லித் தருவார். 'சீருறுமிச் சபை மீதினில் மேவிய திவ்ய குணசீலா' என்ற ஆரம்பித்த பாடல் காவடிச் சிந்து மெட்டில் அமைந்திருந்தது. அதைப் பாடுவதிலும், நாங்கள் அதைப்பாடக் கேட்பதிலும் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தார். விழாக்கள், பரிசளிப்புகள், விவாகங்கள் இவைகளுக்கு ஆசிப்பாக்கள் பாடுவிப்பதற்காக அநேகர் வருவார்கள். அவர்களை இருக்கச்சொல்லி, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற பாட்டுக்களை உடனே பாடிக் கொடுத்தனுப்புவார். பரிதிமாற் கலைஞர் என்னும் சூரிய நாராயண சாஸ்திரிகள் இதனை அறிந்து போலும் 'விரையப் பாடும் சீர் மிகப் படைத்த தேவர் துரையப்பாபிள்ளையெனும் தோன்றல்' என்று அவர் இயற்றிய கீதரச மஞ்சரியை முன்னிட்டுப் பாடிய சாற்றுகவியிற் பாடியிருக்கிறார்.

எனது தந்தையார் சைவத்துக்கும் கல்விக்கும் மகாஜனக் கல்லூரியை நிறுவித்தொண்டாற்றினாரென்று பலர் கூறுவர். இப்படிப்பட்டவரின் சமய சீவியம் எப்படியிருந்ததென்று பின்நோக்கிப்பார்க்கும் போது, அவர் யாத்திரைகளுக்குச் சென்றாரென்றோ, நாள்தோறும் அல்லது வாரந்தோறும் கோவில் குளங்களுக்குப் போனாரென்றோ எனக்கு ஞாபகமில்லை. அமாவாசை, பூரணை விரதங்களைத் தவிர வேறு விரதங்கள் அனுட்டித்தாரென்றோ எனக்கு நினைவில்லை. ஆனால் வீட்டில் தேவாரம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியன பாராயணம் பண்ணினார். குளிக்கும்போது கிணற்றடியில் நின்று 'அடலருணைத் திருக் கோபுரத்தே அந்த வாயிலுக்கு வடவருகிற் சென்று கண்டுகொண்டேன்' என்று பாடினால் வீட்டுக்குக் கேட்கும். ஊரிலுள்ள கோவில்களுக்கு அபிஷேகங்கள் திருவிழாக்கள் செய்வித்தார். ஆனால் அநேகமாக அவர் ஒரு கர்மயோகியாகத்தான் இயங்கினாரென்று ஊகிக்கக் கூடியதாயிருக்கிறது.

எனது தந்தையாரின் சரித்திரமும் மகாஜனக் கல்லூரியின் சரித்திரமும் ஒன்று என்று கூறின் அது மிகையாகாது. அவர் தமது நேரத்தில் மிகக்கூடிய பங்கைக் கல்லூரி விஷயங்களுக்கே செலவிட்டார். அதன் பராமரிப்பு, உபாத்திமார்களைத் தெரிவு செய்தல், நிதி திரட்டல், பிள்ளைகளைச்சேர்த்தல் முதலியன அவருடைய தனிக் கவனத்தைப் பெற்றிருந்தன. அவருடைய பழைய மாணவர்களான சிலர் மகாஜனக் கல்லூரியில் உபாத்திமாராகக் கடமை பார்த்துத் தொண்டாற்றினர். இவர்களிற்தலைசிறந்து விளங்கியவர் கா.சின்னப்பா அவர்களாவர். ஓர் உருவமும் அதன் நிழலும் போல் எனது தந்தையாரும் திரு.சின்னப்பா அவர்களும் அமைந்தார்கள். அவர் நினைக்க இவர் செய்து முடிப்பார்.

எனது தந்தையாரின் பிற்காலத்தில் திரு. சின்னப்பா அவர்களே பள்ளிக்கூட அலுவல்களைக் கவனித்து வந்தார். இதன் காரணமாக அவர் காலமானவுடன், பள்ளிக்கூட விடயங்களைத் தன் கையிலெடுத்துத் தொடர்ந்து நடத்தவும் அவர் செய்த சாதனைகளைப் பேணிக் காத்துப் பிற் சந்ததியாருக்குக் கையளிக்கவும் திரு.சின்னப்பா அவர்களுக்கு முடிந்தது. திரு சி.தம்பு அவர்களும் அடுத்தபடியாக எனது தந்தையாருக்கும் அவர் பின் வந்த அதிபர்களுக்கும் வலக்கைபோல் உதவினார்கள். இவர்களிருவருடைய நினைவுகளும் எனது தந்தையாரின் நினைவுகளுடன் பின்னிக் கிடக்கின்றன.

சிங்களப்பத்திரிகை எழுத்தாளராயும், ஆசிரியர்களாயும், இலக்கிய கர்த்தாக்களாயும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரிய சங்கங்களில் மட்டுமன்றி, யாழ்ப்பாணம் தமிழ்க் கழகம், யாழ்ப்பாணம் சனசங்கம் போன்ற பல நிறுவனங்களிலும் இடையீடற்ற அக்கறை கொண்டிருந்தார் துரையப்பாபிள்ளை அவர்கள். வாய்ச்சொல் வீரராக அன்றிச் செயல் வீரராகவும் விளங்கினார். அதேவேளையில், தான் வாழ்ந்த பிரதேசத்து விவகாரங்களில் மட்டுமல்லாது அனைத்திலங்கைப் பிரச்சினைகளிலும் அவ்வப்போது அபிப்பிராயம் தெரிவித்தார். இந்திய அரசியல் விவகாரங்களையும் கூர்ந்து கவனித்துப் பல கட்டுரைகளை எழுதினார்.

இவையெல்லாவற்றையும் நோக்கும்பொழுது, இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக எழுச்சிபெற்றுவந்த தேசியம் நாடு முழுவதற்கும் பொதுவான சிலகூறுகளையும் அம்சங்களையும் கொண்டிருந்தது என்பதும், அவை பிரதேச அடிப்படையில் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் செயற்பட்டன என்பதும், வடபகுதியில் அவை நடந்தேறியவற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குக் கல்விமானும், சீர்திருத்தவாதியும், தேசியவாதியுமான தெ.அ.துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையையும் பணியையும் எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் கொள்ளுதல் சாலப் பொருந்தும் என்பதும் ஒருவாறு துணியப்படும்.

. க. கைலாசபதி.

(க.கை. அவர்களுடைய கட்டுரை பாவலர் நூற்றாண்டுவிழா மலர், நூலிலிருந்து..(1972) தொகுக்கப்பட்டது. அருகிலுள்ள - தெ. து. தர்மராஜா அவர்களின் கட்டுரையும் இதேநூலிலிருந்தே பெறப்பட்டது)



படிப்பகம்

www.padippakam.com


அதிபர். திரு.சின்னப்பா

மேற்கூறியவைகளிலிருந்து எனது தந்தையாரைக் காண அநேகர் வந்துகொண்டிருப்பார்கள் என்பது புலனாகும். இப்படி வருபவர்கள் தங்கள் தங்களுக்கு வசதியான நேரங்களில் வந்து கொண்டிருப்பார்கள். இதனால் வீட்டில் சாப்பாடு முதலியன நேரத்துக்கு நடப்பது அரிதாயிருக்கும். குறிப்பாக இது இராச் சாப்பாட்டைப் பாதிக்கும். எனது தந்தையார் வந்தவர்களுக்குச் சமாதானம் கூறித் தாம் சாப்பிட இரவு பதினொரு பன்னிரெண்டு மணியாகிவிடும். அவ்வளவு நேரமும் காத்திருந்து தனது கணவனுக்கு ஆகாரம் பரிமாறிப் பின், தான் உண்டுறங்கும் எனது தாயாரின் நினைவு நெஞ்சில் என்றும் நிலவுவதொன்றாகும். எனது தந்தையார் வணங்காமுடியன். சற்று முற்கோபி.

ஆனால் எனது தாயாரோ, தாழ்மையும் தாய்மையும் உருவெடுத்தாற்போல் சாந்த மூர்த்தியாக விளங்குவார்.

எனது தந்தையாரின் திடீர்க்கோபத்துக்கும் சூடுபறக்கும் சொற்பிரயோகத்துக்கும் எதிர்மறையாய்ச் சிரித்த முகத்துடன் அன்புடன் பேசிப்பழகும் சுபாவமுடையவராயிருந்தார் எனது தாயார். எனது தந்தையாரின் கோபத்துக் கிரையானோர் சிலர் எனது தாயாரைக் கண்டுபேசிச் சாந்தி பெற்றுப் போவார்கள்.

எனது தந்தையாரிடம் வருபவர்களுக்கு விருந்துபசாரம் செய்தல் எனது தாயாரின் கடமையாயிருந்தது. தாமாகச் சமையல் செய்து பரிமாறி விருந்தினர்களை உபசரித்து அனுப்புவார். எனது தந்தையாருக்கு இது மிகத் திருப்தியைக் கொடுக்கும். விருந்தினர்கள் போனதும், "கேட்டீரே, இன்றைக்கு உம்முடைய சமையல் திவ்யம்' என்று கூறி உசார் போடுவதைக் கேட்டு நாங்கள் இரகசியமாகச் சிரிப்போம்.

இவைகளைப்போல் எத்தனையோ ஞாபகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு வருகின்றன.ஆனால் அவைகளெல்லாவற்றையும் எழுதினால் வாசிப்பவர்களுக்கு அலுப்புத்தட்டுமென்று அஞ்சி விடுகிறேன். அதுவுமன்றி, எப்பொழுது ஒருவன் தன் பழைய ஞாபகங்களில் மனதைப் பதிய விடுகிறானோ அப்போது அவன் வயோதிபத்தை அடைந்துவிடுகிறான் என்று சில மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். வயோதிபத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கும் நான் வயோதிபத்தைச் சுவைக்க விருப்பமில்லாதவனாயிருக்கிறேன். ஆகவே ஞாபக உலகிலிருந்து திரும்பிவிடுவதே நலன் ஆகும்.



இது எப்பிடி இருக்கு?
(முன்னாள் ஆசிரியர்கள் கிரிக்கற் அணி)



படிப்பகம்

www.padippakam.com



# அவர் கனவு, நினைவு அத்தனையும் மகாஜனாவின் வளர்ச்சி, எழுச்சி

— பொ. கனகசபாபதி

நான் ஆசிரியப் பதவி ஏற்ற சமயத்தில் யாழ்பாணப் பாடசாலைகளில் அதிபர்களாயிருந்தவர்களை நினைவில் நிறுத்துகிறேன். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வராக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யூனியன் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி எனப் பட்டியல் நீள்கிறது. என் கண்முன்னே தோன்றும் இப்பாடசாலைகளின் அதிபர்கள் அத்தனை பேரும் பெரும்பாலும் தேசிய உடையில் காட்சி தருபவர்களாகவே உள்ளனர். அது ஏன்? எனது அதிபர் மாத்திரம் அந்த வகையறாவில் இல்லை? சிந்தித்தேன். பதில் காணக் காலம் எடுத்தது. உண்மை தெரிந்தது.

அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் அக்காலத்து அதிபர்கள் பெரும்பாலானவர்களில்இருந்து வேறுபட்டவராகவே எனக்குத் தெரிகிறார். ஸ்கந்தவரோதயா அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம், யாழ் மத்திய கல்லூரி அதிபர் A.E தம்பர், யூனியன் கல்லூரி அதிபர் ஜீ. துரைரத்தினம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் செல்லையா, யாழ் இந்துக்கல்லூரி அதிபர் சபாரத்தினம் மற்றும் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் அம்பிகைபாகன் போன்றவர்கள் 1930களில் திரு ஹண்டி பேரின்பநாயகத்தின் வழிகாட்டலில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தவர்கள். இவர்களில் பெரும்பாலோர் தமது பட்டதாரிக் கல்விக்காக யாழப்பாணக் கல்லூரியை நாடி அங்கு திரு ஹண்டி பேரின்பநாயகத்தின் அரவணைப்புக்கு ஆளானவர்கள். அவரது அறிவாற்றல், பேச்சாற்றல் மற்றும் கொள்கை நெறியினால் ஈரக்கப் பட்டு அவர் வழி சென்றனர். அதிபர் அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டவில்லை. தந்தையார் மறைவுக்குப் பின் இளம் வயதிலேயே ஆசிரியராகி மஹரகம ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று மகாஜனாவின் அதிபராகும் வாயப்புக் கிட்டியது. ஹண்டி அவர்களின் ஆளுமை எமது அதிபர் மேல் ஆதிக்கம் செலுத்துற்கான வாய்ப்பு ஏற்படவில்லை.

அக்கால கட்டம் அதிபர்களின் பொற்காலம் என்றே கணிக்கப் படவேண்டும். பாடசாலைகள் அரசுடமையாக்கப் பட்டிருக்கவில்லை. பாடசாலைகள் தனியார் சொத்து. ஒவ்வொரு பாடசாலையின் நடைமுறையும் அதிபர் அல்லது அதிபரதும் முகாமையாளரதும் வழிநடத்தலின் பிரகாரமே செயற்பட்டது எனலாம். கல்வி அமைச்சு கல்வித் திட்டத்தை வகுத்துக் கொடுத்தது. மாணவர் வரவினுக்கேற்ப மானியத்தை வழங்கியது. இடையிடையே கல்வி அமைச்சினது பரிசோதகர்கள் பாடசாலைகளுக்குச் சென்று அங்கே கற்பித்தல் எங்ஙனம் செயற்படுகிறது என்பதைக் கண்காணிப்பர். ஆகவே பாடசாலைக் கொடி உயர உயரப் பறப்பதற்கோ அல்லது கீழே இறங்குவதற்கோ அதிபரது நிர்வாகமே முழுமையான காரணியானது.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார் எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார் கருமமே கண்ணாயினார்",

என்பது ஒரு பழைய இலக்கியப் பாடல். எமது அதிபருக்கு இது மிகப் பொருத்தமான பாடல். அவர் சிந்தனை, செயல் அத்தனையும் மகாஜனாவின் எழுச்சி,வளர்ச்சி,உயர்ச்சி. இளைஞர் காங்கிரஸ் இயக்கத்திலே அவர் பெரிதாக நாட்டம் காட்டியதாகத் தெரியவில்லை. இளைஞர் காங்கிரஸ் சார்ந்த அதிபர்களில் பெரும்பாலோர் தேசியஉடையினையே உடுத்தி வந்தனர். ஹண்டி பேரின்பநாயகம் போன்றோர் கதர் உடையினையே வாழ்க்கை பூராவும் உடுத்தி வந்துள்ளனர். அதிபர் அவர்கள் மேலைத் தேய நாகரிகத்தைப் பெரிதும் மதித்தவர் ஆகவே அவர் தேசிய உடையினை ஆரம்ப காலங்களில் உடுத்தியதை நான் காணவில்லை. மேற்கத்திய நாகரிகம் அவரைக் கவர்ந்தது உண்மை. பாடசாலை என்றதும் அவரது கண்முன்னே தெரிந்தது இங்கிலாந்தின் கல்வி முறையும் பாடசாலை அமைப்பும் மாத்திரமே. அவரது சிந்தனை வேறு எதிலுமே போனதாகத் தெரியவில்லை. அவரது கனவிலும் நனவிலும் பாடசாலையின்உயர்ச்சியைத் தவிர வேறு சிந்தனை இருந்ததாகத் தெரியவில்லை. தமது பாடசாலையினையும் இங்கிலாந்திலே காணப்படும் புகழ் பெற்ற Grammar Schools போன்ற சாயலில் மாற்றிட வேண்டும் என்ற அபிலாசையுடனேயே உழைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

இளைஞர் காங்கிரஸ் தனது பிரதான கொள்கையாக நான்கு அம்சங்களை வலியுறுத்தியது.

1. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு இலங்கை பூரண சுதந்திரம் பெற்ற நாடாக விளங்க வேண்டும்
2. தமிழ்ச் சமூகத்தின் புற்று நோயாகப் பீடித்திருக்கும் சாதிபேதம் முற்றாகவே ஒழிக்கப் படவேண்டும.
3. ஏழை மக்களது வாழ்க்கைத் தரம் கௌரவமான நிலைக்கு உயர்த்தப் பட வேண்டும். தொழில் மகத்துவம் பேணப்பட வேண்டும்.
4. பாடசாலைகளில் மாணவர்களுக்கு அவரவர் தாய் மொழியிலேயே கற்பித்தல் நடைபெற வேண்டும்.

இளைஞர் காங்கிரஸ் மிகத் தீவிரமாக இயங்கிய சகாப்தமான 1928 முதல் 1942 வரை ஆண்டு தோறும் இலங்கையின் தென்பிராந்தியத்திலிருந்தும் இந்தியாவில் இருந்தும் அறிஞர்களை அழைத்து வந்து கொள்கைப் பிரசாரம் செய்து வந்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கந்துடனும் ஏன் சமூகப் பிரமுகர்களுடனும் கூட மோதவேண்டிய நிலை ஏற்பட்டது. அதிபர் அவர்கள் இளைஞர் காங்கிரஸ் உடன் நெருக்கமான தொடர்பினை வைத்திருக்காவிட்டாலும் மனதளவில் இளைஞர் காங்கிரசின் கொள்கைகளை அங்கீகரித்துள்ளார். ஆனால் எந்த விதமான படாடோபமும் இல்லாமல் அதன் கொள்கைகளை நடைமுறைப் படுத்தியுள்ளார் எனத் தெரிகிறது. உதாரணமாக ஸ்கந்தவரோதயா அதிபர் ஒறேற்றர் அவர்கள் சாதி பேதத்தினை ஒழிப்பதற்காக எடுத்த முயற்சியில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய எதிர்ப்பு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது என அவர்களே கட்டுரை ஒன்றினில் வெளியிட்டுள்ளார்கள். ஆனால் அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் எந்த வித எதிர்ப்போ பிரச்சினையோ இல்லாமல் மிகச் சுலபமாகவே சிறுபான்னமை இனத்தவர்களைத் தனது பாடசாலையில் சேர்த்துள்ளார்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே ஆங்கிலத்தினை ஒரு பாடமாகக் கற்றுத் தேறிய பட்டதாரிகளாகவே முதல், இரண்டாவது ஏன் மூன்றாவது தலைமுறை அதிபர்களாக இருந்துள்ளனர். என் போன்ற விஞ்ஞானப் பட்டதாரிகள் அதிபர்களாக நியமனம் பெற்றது நான்காவது ஐந்தாவது தலைமுறை பாடசாலை அதிபர்கள் நியமனக் காலத்திலே தான். ஆகவே ஆங்கில மொழி பாடசாலைகளில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. அரசாங்க உத்தியோகம் பெறவேண்டுமாயின் ஆங்கிலத்தில் அதிக திறமை காட்ட வேண்டிய தகமை தேவையாயிற்று. இளைஞர் காங்கிரஸ் கொள்கை அளவிலே தாய் மொழியிலேயே கல்வி புகட்ட வேண்டும் என்று வலியுறித்திய போதும் 1945ஆம் ஆண்டினிலே அமரர் C.W. W கன்னங்கரா இலவசக் கல்வி மற்றும் தாய்மொழிக் கல்வி என்ற சட்ட மூலத்தினைக் கொண்டு வரும் வரைக்கும் ஆங்கில மொழி பாடசாலைகளிலே ஆதிக்கம் புரிந்தது. வகுப்புகளில் மாணவர்களுடன் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும், தமிழில் பேசினால் தண்டம் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கூட சில பாடசாலைகளில் இருந்தது.

அதிபர் அவர்கள் ஆசிரியர் கூட்டங்களில் வலியுறுத்துவதுண்டு. இது அதிபரின் ஆங்கில மோகத்தின் காரணமாக அல்ல, மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும் திறன் பெற வேண்டியவர்களாக இருக்க வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டே இத்தகைய அறிவுரைகளை எமக்கு எடுத்துரைத்தார்கள். ஆனால் இளைஞர் காங்கிரசின் கொள்கையில் ஒன்றான தாய்மொழிக் கல்வியை எமது அதிபர் அங்கீகரித்தார் என்பது அவரது நிறுவியவர் நாள் அறிக்கைகள் சிலவற்றிலிருந்து அறிய முடிகிறது. ஏற்கனவே நான் குறிப்பிட்டது போன்று அவர் தனது கொள்கையினைப் பத்திரிகைகள் வாயிலாகவோ அல்லது தனிப்பட்ட அறிக்கைகள் மூலமாகவோ பிரகடனப் படுத்தவில்லை. தனது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கான களமாக வருடாவருடம் நடைபெறும் நிறுவியவர் நினைவு நாள் அறிக்கையில் மாத்திரம் எடுத்துக் கூறியுள்ளார். அதிபர் ஹண்டிப் பேரின்பநாயகம், ஒறேற்றர் சுப்பிரமணியம், A.E தம்பர் போன்றவர்கள் ஓரளவு அரசியலிம் தீவிரம் காட்டியமையால் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டினார்கள். அதன் விளைவாக வடமகாண ஆசிரியர் சங்கத்தின் பிரபல உறுப்பினர்களாகவும், அதன் காரணமாக அகில இலங்கை ஆசிரிய சம்மேளத்தில் தலைமை ஏற்கின்ற அளவுக்கு தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனால் நமது அதிபர் அவர்களோ தான் உண்டு தனது பாடசாலை உண்டு என்ற எண்ணத்திலே வடமாகாண ஆசிரியர் சங்க நடவடிக்கைகளில் அத்தனை தீவிரமாக உழைத்ததாக நான் அறியவில்லை. அவர்களில் பலர் பல நாடுகளுக்கு, சம்மேளனங்களில் பங்கு பற்றுவதற்காகப் பலமுறைகள் பாடசாலையை விட்டே சென்றுள்ளார்கள். அதனை எங்கள் அதிபர் அவர்கள் விரும்பியதில்லை. ஒரேயோரு சமயம் மாத்திரம் மலேசியாவுக்கு அதுவும் பாடசாலை விடுமுறைக்காலத்தில் சென்றுள்ளார்கள். அது கூட பாடசாலை வளர்ச்சி நிதி சேகரிப்புக்காகவே. இதைத் தவிர அவர் ஒரு நாளேனும் பாடசாலைக்குச் சமூகம் கொடுக்காமல் இருந்ததில்லை என உறுதியிட்டுச் சொல்ல முடியும். ஆனால் வடமாகாண அதிபர்கள் சங்கத்திலும், வடமாகாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திலும் பிரதான பதவிகளை வகித்துள்ளார்கள். அவை இரண்டும் பாடசாலை சார்புடையவை என்பதாலும் அங்கே எடுக்கப்படும் தீர்மானங்கள் பாடசாலையின் நாளாந்த நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்பதாலும் அந்த இரு அமைப்புகளிலும் பிரதான பங்கினை அதிபர் அவர்கள் ஏற்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

1970ஆம் ஆண்டு இளைஞர்கள் ஒருமித்து ஏற்படுத்திய புரட்சி அரசாங்கத்தினை வித்தியாசமான முறையிலே சிந்திக்க வைத்தது. பாடசாலைக் கல்வி வெறுமனே அரசாங்க அலுவலகங்களில் வேலை பெற்றுக் கொடுப்பதற்கோ அல்லது தொழில்சார் விற்பன்னர்களை உருவாக்குவதற்கோ மாத்திரம் அல்ல. நாளாந்தம் தமது வாழ்வியலை செம்மையாக நடத்துதற்கு வேண்டிய ஆதாரக் கல்வியாகவும் அமைய வேண்டும் என்ற புதிய சித்தாந்தத்தினை அரசினை மனதிற் கொள்ள வைத்தது. கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒஸ்மண்ட் ஜெயரத்தினா அவர்கள் மூலமாக தயாரிக்கப்பட்ட அறிக்கை உடனடியாக அமுலாக்கப் பட்டது. அவசர அவசரமாகச் செய்யப் பட்டாலும் அதில் நல்ல அம்சங்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இந்தப் புதிய கல்வித்திட்டத்தின் விளைவாக ஏற்பட்ட மாற்றமே தொழில் முன்னிலைப் பாடக்கல்வி. நடுநிலை வகுப்பு மாணவன் ஒவ்வொருவரும் இரண்டு தொழில் முன்னிலைப் பாடங்கள் கற்க வேண்டும். அதில் ஒன்று பாரம்பரியமான தொழிற் பாடம் மற்றையது உள்ளூரில் மக்கள் செயற்படுத்தும் ஏதாவது தொழில் பற்றியது. இதன் மூலமாக மாணவர்களுக்குத் தொழில் மகத்துவம் பேணலுடன், பாடசாலைக் கல்வி முடிவுறும் போது ஏதாயினும் ஒரு தொழில் செய்யக் கூடிய தகமையும் இருக்கும். பாடசாலைக் கல்வி முடிந்ததும் அவன் ஏதாயினும் தொழில் செய்து தன்னைத் தான் காப்பாற்றுதற்கு வேண்டிய அடிப்படைத் திறன்களை கொண்டிருப்பான். இத்தகைய ஒரு செயற்றிட்டத்தினைக் கல்வியில் அரசு கொண்டு வந்தது 1970ஆம் ஆண்டினிலே. ஆனால் எமது அதிபர் 1960ஆம் ஆண்டிலேயே எமது பாடசாலையில் இதனைப்புகுத்தி வெற்றியும் கண்டார். Concrete works, Plywood cutting போன்ற தொழிற்பாடங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கான வழி வகுத்தார். எத்தனை தீர்க்கதரிசனம்.

எமது அதிபர் நிறைந்த பக்திமான். அவர் மறைகின்ற போது தெல்லிபழை துரக்காதேவி ஆலயத்தின் நிர்வாகசபையினது தலைவராக இருந்தார். அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு அதிபர் அவர்களும் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக் குட்டியும் ஆற்றிய பணி அளப்பரியது. ஆனால் எமது அதிபரின் சமய வாழ்வினை அவதானித்த பொழுது அவர் துர்க்கா தேவி ஆலய நிர்வாகத்தில் ஈடுபட்டது தனது ஒய்வுபெறும் காலத்திற்கு அண்மையாகவே. அதுவரை அவரால் பாடசாலை தவிர வேறு எதனைப் பற்றியும் சிந்திக்க முடியாமையே காரணமாயிருந்தது. மாணவர்கள் சைவச் சூழலிலே வளர்க்கப்படவேண்டும் என்பதில் மிகவும் தீவிரமான கொள்கை உடையவராகவிருந்த அதிபர் அதற்காகவே பாடசாலை வளாகத்திலேயே ஆலயம் ஒன்றினை நிறுவினார். சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயத்திற்குத் தினசரி காலை வேளைகளில் ஆராதனை நடந்தது. மாணவர்கள் ஆலய தரிசனத்துடனேயே வகுப்பறைக் கல்வியினை ஆரம்பித்தனர். இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி தவிர்ந்து ஏனைய பாடசாலைகளில் பாடசாலை வளாகத்திலே ஆலயத்தினை முதல் முதலாக அமைத்த பெருமையை அதிபர் அவர்கள் பெறுகிறார்கள். ஏனைய மதத்தினரையும் அதிபர் மறந்தவரல்லர். கிறிஸ்தவர்கள் அந்த நேரத்தில் பிரார்த்தனை நடத்த ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். நான் அதிபராக இருந்த சமயத்தில் அதிபர் அடியினைப் பின்பற்றி இஸ்லாமிய மணவர்களுக்கும் பிரார்த்தனை செய்வதற்கென இடம் ஒதுக்கிக் கொடுத்தோம்.

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திலும், திருக்கேதீஸ்வரத்திலும் மகாஜனக் கல்லூரி திருவிழாக்கள் நடத்தியது. அங்கு மாணவர்கள் பெருமளவில் சென்று ஆராதனையில் பங்கு பற்றினார்கள். தெல்லிப்பழையினில் முதல் முதலாக LIONS CLUB INTERNATIONAL தொடக்கப் பட்டது 1976ஆம் ஆண்டினிலே. அதன் முதல் தலைவராய் இருக்கலாம் என நான் சொல்லத் தேவையில்லை. ஆம் அதிபர் அவர்களே தான். இதனை எப்படி ஏற்றார்? அதிபர் அப்போது பாடசாலையில் இருந்து ஒய்வு பெற்றுள்ளமையால் அப்பதவியை எற்றார். தொடர்ந்து அவர் மறைவுவரை அந்த அமைப்பின மூலமாக அளப்பரிய தொண்டாற்றினார். ஆனால் அக்காலம் மிகக் குறுகியதாகி விட்டது.

தன்னைக் கண்டு தானம் வழங்கு என்பார்களே. அதிபர் அவர்களுக்கு தான் என்பது தனது பாடசாலையாகிவிட்டது. ஆகவே அதற்காகத் தான் செய்யக் கூடிய அத்தனையையும் செய்த பின்னரே தான் ஏனைய சிந்தனைகள். அப்படிப் பார்க்கும் பொழுது அவரது குடும்பம் கூட இரண்டாம் இடம் தான். அவரது வாழ்க்கை தவ வாழ்க்கை. அவரைப் போன்று இன்னொருவரைக் காண்பது அரிது.



படிப்பகம்

www.padippakam.com

# தெல்லிப்பழை

- பொன்னம்பலம் இரகுபதி



திரு. தம்பு சண்முகசுந்தரம்
**30.11.1925 - 28.07.1986**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் படித்தகாலத்தில், தெல்லிப்பழையை 'மவ்வழவு' போட்டுத்தான் மேனை எழுதவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லித்தந்தவர், அன்று எங்களுக்கு ஆசிரியராகவும் பிறகு மகாஜனாவின் அதிபராகவும் இருந்த சண்முகசுந்தரம் மாஸ்டர்.

சொற்பிறப்பையும் ஊர்ப்பெயர்களின் மூலங்களையும் அறியும் ஆர்வத்தை எனக்குள் தூண்டியவரும் அவரே. வரலாறு, அரசியல், இலக்கியம், நாட்டாரியல், மொழியியல், பத்திரிகைத்துறை, பதிப்புத்துறை என்று பள்ளிக்கூடப் பாடத்திட்டத்திற்கு அப்பால் அவர் சொல்லித்தந்தவை பல.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் முதன்மாணாக்கராகவும், பின்னர் ஆய்வு, எழுத்து, நாளிதழ் என்றும், அவர் பெற்றுக்கொண்ட அறிவொளியையும் அநுபவத்தையும் மாணவர்களுக்கு வஞ்சகமின்றி வாரிவழங்கிய தருமவான் அவர்.

புலவர் என்ற சொல்லுக்கு அவர் கொடுத்த விளக்கம், புலம் போன்ற பரந்த அறிவுபடைத்தவர் என்பது. சண்முகசுந்தரம் மாஸ்டர் பெரும்புலவர்.

ஏறத்தாழ அறுபதாண்டுகால வாழ்க்கையில், நாடகம், நாவல், சிறுகதை, பன்முகப்பட்ட ஆய்வு என்று அறுபதுக்கும் மேற்பட்ட படைப்புக்களைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய ஆய்வுகளும் பதிப்புக்களும் மூல-ஆக்கங்கள். அவரைக் குறிப்பிடாமல் இன்று ஈழத்தமிழ் நாட்டாரியலை ஆய்வுசெய்துவிட முடியாது.

"மலையைக் காண்பதற்குத் தூரம் வேண்டும், சம்பவங்களையும் மனிதர்களையும் மதிப்பிடுவதற்குக் காலம் வேண்டும்", என்று ஆட்சியியல் பாடவகுப்பில் அவர் கூறியதொரு மேற்கோள் அவருக்கும் பொருத்தமானது. சண்முகசுந்தரம் மாஸ்டரும் ஒரு மலையைப் போன்றவர். அவரது நினைவுக்கு இச் சிறு கட்டுரை:

மவ்வழவுடன் எழுதப்பட்ட தெல்லிப்பழையை 17ம் நூற்றாண்டு இலக்கியமான தண்டிகைக் கனகராயன் பள்ளுவில் காணலாம்.

பழை என்ற இடப்பெயர்ச்சொல் ஈழத்தமிழுக்குத் தனித்துவமானது. நீர்நிலை என்று பொருள்தரக்கூடியது.

முள்ளியவளையிலுள்ள வற்றாப்பழையும், பச்சிலைப்பள்ளியிலுள்ள அல்லிப்பழையும், வடமராட்சியிலுள்ள வரத்துப்பழையும் (வரத்து நீரால் நிரம்பும் குளம்) பழை என்ற சொல் நீர்நிலையைக் குறிப்பதை உறுதிசெய்பவை. மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவர் பாடிய தண்டிகைக் கனகராயன் பள்ளு "வாவி மேவிடு தெல்லிப்பழை", என்று மேலும் உறுதிசெய்கிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் பழனம் என்ற சொல்லுக்கு பொய்கை என்றும் பொருளுண்டு:

"கழனி மாஅத்து விளைந்து உகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்" *(குறுந்தொகை 8:1-2)*

தமிழ்நாட்டில் பழநி என்ற இடப்பெயரும் அதன் மறுபெயரான ஆவினன்குடியும் ஒருபொருள் தருபவை. ஆவி (வாவி) என்பது நீர்நிலை.

ஈழத்து இடப்பெயர்களில் வரும் மேலுஞ்சில எடுத்துக்காட்டுகளையும் கவனிக்கவும்:

பெரியபழை (பெரியகுளம், பச்சிலைப்பள்ளி), புலோப்பழை (வயற்குளம், பச்சிலைப்பள்ளி), விடத்தல்பழை (விடத்தல் செடிகள் அண்டிய குளம், தென்மராட்சி), வீமுபழை (வீழிச்செடிகள் அண்டிய குளம், எழுதுமட்டுவாள்), பழை - வீமன்காமம் (இரு இடப்பெயர்களின் சேர்க்கை, வலிகாமம் வடக்கு), மருக்காரம்பழை (மருக்காரைச்செடிகள் அண்டிய குளம், வவனியா), பட்டிப்பழை (கால்நடைப்பட்டி பயன்படுத்தும் குளம், மண்முனை, மட்டக்களப்பு).

17ம் நூற்றாண்டின் நடுப்பாகத்தில் பேதுருப்புலவர் பாடிய சந்தியோகுமையர் அம்மானை தெல்லிப்பழையை தெல்லிக்கிராமம் என்று குறிப்பிடுகிறது (இ. பாலசுந்தரம்).

தெல்லிக்கு இருவகையாகப் பொருள்கொள்ளலாம்.

பழையகாலத்து நெடுஞ்சாலைகளில் பல்லக்குத் தூக்கிச்செல்வோர் ஆள்மாற்றிக்கொள்வதற்கு வசதியாக ஆங்காங்கே இளைப்பாறும் இடங்களையும் தங்கள் இனத்தவர்களின் குடியிருப்புக்களையும் அமைத்திருந்தார்கள். சுமந்துவந்த குழுவினர் இங்கு தங்கிவிட இன்னொரு குழுவினர் அங்கிருந்து தொடர்ந்து அடுத்தகட்டம்வரை செல்வர்.

இவ்வாறான பயணக்கட்டங்கள் தெல் அல்லது தெல்லு என்று அழைக்கப்பட்டன. பல்லக்குக் காவிகளும் அஞ்சல் கொண்டுசெல்வோரும் தெல்லுக்காரர் என அழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தவரான சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் அகராதியும், யாழ்ப்பாணத்



படிப்பகம்

www.padippakam.com

தமிழைச் சேர்த்துக்கொண்ட உவின்சுலோ பாதிரியாருடைய தமிழ் அகராதியும் தரும் விளக்கங்கள் இவை.

ஏமாற்று நிறைந்த ஒருவகையான விளையாட்டும் அதற்குப் பயன்படுத்திய கருவியுங்கூட தெல் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. விளையாட்டு மறந்துபோய்விட்டது. ஆனால், மாறாட்டம் பண்ணுபவர்களைக் கண்டிக்கும்பொழுது 'தெல்லாட்டம்' என்று சொல்லி ஏசுவதை நாம் மறக்கவில்லை.

ஒரு கோடியில் இருந்து இன்னுமொரு கோடியில் (தொலைவில்) இருக்கும் இடத்தை தெல்லி என்பது ஈழத்தமிழ்ப் பேச்சுவழக்கு. பல்லக்குக்காவிகளின் நடையை தொடர்ந்து முடுக்குவதுபோல, யாரையாவது ஒரு வேலையைச்செய்ய தொடர்ந்து முடுக்கவேண்டியிருப்பதை 'தெல்லோட்டுதல்' என்று சொல்வதும் ஈழத்தமிழ்ப் பேச்சுவழக்கு.

தெல் அல்லது தெல்லு என்ற சொல்லுக்கு முற்கூறிய அகராதிகள் தரும் இன்னொரு விளக்கம் நெடும்பாத்தி என்பது. வரம்பு குறுகியதாகவும் பாத்தி நீளமாகவும் இருக்கவேண்டிய பயிர்நில அமைப்புக்குப் பெயர் இது. இப்படி, நீளமாகப் பாத்திவிட்டு வரம்பு கட்டுவதற்குத் 'தெல்லுக்கட்டுதல்' என்று பெயர். இது இன்றும் வழக்கிலிருக்கும் சொற்பதம்.

யாழ்ப்பாணத்தின் வரண்டநில நெற்பயிர்ச்செய்கை மழையையும் வெள்ளவாய்க்கால்களையும் சிறுகுளங்களையும் கிணறுகளையும் நம்பியிருப்பது. மழை போதாவிட்டால் இறைப்பு நீர்மட்டத்தை ஒழுங்குபண்ண வயற்பரப்பின் குறிப்பிட்டசில இடங்களில் முன்னேற்பாடாக வரம்புகள் கட்டுவது 'தெல்லுப்போடுவது' என்றும், புழுதிவிதைப்பு விதைத்த ஒருசில நாட்களுள் வயற்பரப்பின் நிலமட்டம்பற்றிய முன்-அநுபவம் உள்ளவர்களால் செய்யப்படவேண்டிய முக்கியவேலை இது என்றும் கூறுகிறார் மாதகல் வீ. சிறீகதிர்காமநாதன்.

தெல், தெல்லு, தெல்லி ஆகிய சொற்கள் தரும் இருவகையான பொருள்களும் ஒரு மூலத்திலிருந்து வந்தவையாகவே தோன்றுகிறது.

ஈழத்தமிழில் பொருள்செறிந்து வழங்கும் இச்சொற்கள் பழந்தமிழ் நிகண்டுகளிலோ இலக்கியவழக்கிலோ இல்லை. இவ்வாறாகப் பொருள்தரும்வகையில் சிங்களமொழி வழக்கிலும் இச்சொற்கள் இல்லை.

பழந்தமிழ் வழக்கிலிருந்த தெற்றி என்ற சொல்லின் ஈழத்தமிழ் வடிவங்களே இச்சொற்கள்.

சங்க இலக்கிய வழக்கில் தெற்றி என்பது உயர்த்திக்கட்டப்பட்ட திண்ணை, மேடை போன்றவை (புறநானூறு 53:3, 283:11-12). தெற்றுவது என்பது தடைப்படுத்துவது (அகநானூறு 387:17). பிங்கல நிகண்டின்படி தெற்றி என்பது அம்பலம் போன்ற பொது இடம் (4:207, 4:211). தெற்று என்பது அடைப்பு என்கிறது உவின்சுலோ அகராதி.

திண்ணையை அல்லது முற்றத்து மேடையைக் களமாகவைத்து மகளிர் விளையாடிய ஒருவகை விளையாட்டை 'தெற்றி ஆடுதல்' என சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன:

"முதிர் வார் இப்பி முத்த வார் மணல்,
கதிர் விடு மணியின் கண் பொரு மாடத்து,
இலங்கு வளை மகளிர் தெற்றி ஆடும்" (புறநானூறு 53:1-3).

இந்த ஆட்டம் திண்ணையில் ஆடியதால் தெற்றி ஆட்டமா அல்லது மறித்து ஆடியதால் தெற்றி ஆட்டமா என்பது தெரியவில்லை. இருப்பினும், தெல்லாட்டம் என்ற ஈழத்தமிழ் வழக்கும் தெற்றியாடுதல் என்ற சங்கத்தமிழ் வழக்கும் தெல்லி, தெற்றி என்ற இருசொற்களின் தொடர்பைக் காட்டுகின்றன.

வரம்பிற்கும் வழிப்போக்கர் இளைப்பாறும் மடத்திற்கும் பொதுவாக, மேடை என்ற பொருளுடைய, தெற்றி என்ற சொல் திராவிட மொழிகளுக்குரியது என வரைவுசெய்கிறது திராவிட சொற்பிறப்பு அகராதி (3444).

ரகர - றகரமும் லகரமும் மாறுபடுதல் மொழிகளின் தன்மைகளுள் ஒன்று. உலகமொழிகள் பலவற்றிலும் காணப்படுவது. தெற்றி - தெல்லி போல இன்னொரு எடுத்துக்காட்டு, தமிழ்நாட்டுச் சம்பாரமும் ஈழத்தமிழ்ச் சம்பலும்.

வழிச்செலவுக்கட்டம், நீள்பாத்தி வரம்பு, என்ற இரு பொருளிலுமே தெல்லி சார்ந்த இடப்பெயர்கள் ஈழத்தில் வழங்குவது குறிப்பிடத்தக்கது:

கற்பிட்டி தலைவில்லுவில் இருக்கும் தெல்லியடி, பொதுக்கிணறு இருக்கும் இடம். முன்னர், அம்பலமும் இருந்திருக்கவேண்டும். மன்னாரில் இருக்கும் தெல்லியான் குடியிருப்பும், கிளிநொச்சி மாவட்ட தெல்லிச்சி வாய்க்காலும், பல்லக்குக்காவிகளின் சமூக அடையாளங்களில் இருந்து வந்தவை. பச்சிலைப்பள்ளி புல்லாவெளியில் இருக்கும் தெல்லியாய் குளம் இருவகையாகவும் வந்திருக்கலாம். ஆனால், வல்வெட்டியில் இருக்கும் தெல்லுழுவை, மிகத்தெளிவாக, தெல்லுக்கட்டி உழப்பட்ட நிலத்தைச் சுட்டுகிறது.

தெல்லிப்பழையும் இருவகையாகவும் வந்திருக்கலாம்.

வழுக்கையாறு வெள்ளவாய்க்காலாக ஓடும் தெல்லிப்பழையில் நீள்பாத்திப் பயிர்ச்செய்கை இருந்திருக்கக்கூடியது. தெல்லிவயல் குளம் என்பதோ அல்லது வரம்புக்குளம் என்பதோ ஒருபொருள். வழிச்செலவில் இளைப்பாறும் இடத்துக் குளம் என்பதோ அல்லது சிவிகையர் குடியிருப்புக் குளம் என்பதோ மற்றொரு பொருள்.

மரபாகவே தெல்லிப்பழை ஊர்களை இணைக்கும் சந்தி இடமாக இருந்ததையும், இதன் முக்கியம் காரணமாகவே 1816 இல் அமெரிக்க மிசனரிகள் இலங்கைத் தீவில் தங்கள் முதல் இருப்பிடத்தை இங்கு, இன்றைய யூனியன் கல்லூரி வளாகத்தில், அமைத்துக்கொண்டதையும் இங்கு குறிப்பிடவேண்டும். அங்கு, அதற்குமுன்னர், ஒல்லாந்தருடைய பள்ளிக்கூடமும் தேவாலயமும் இருந்தன.

சிங்கள தீர்த்தயாத்திரை இலக்கியமான நம்பொத, தெமளபட்டனமவில் (தமிழர் பட்டினம்) இருந்த இடங்களுள் ஒன்றாகக் குறிப்பிடும் தெலிபொல, தெல்லிப்பழையின் திரிபடைந்த வடிவமென்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com



அதிபர் உள்ளத்திலிருந்து...

# வெல்லுக மகாஜன மாதா



எனக்கும் மகாஜனாவுக்கும் உள்ள பிணைப்பு 21.03.1977 இருந்து தான். மகாஜனக் கல்லூரியே எனக்கு நிரந்தர நியமனம் எடுத்து வாருங்கள், மாணவர்கள் உங்களைத் தான் தேவை என்கிறார்கள் என்று அதிபர், ஆசிரியர்கள் வரவேற்ற பிணைப்பு அது. இன்னும் கூறப்போனால் என்னுடைய தாவரவியல் பாடத்தை அதுவரை சில மாதங்களாகச் செய்து கொண்டிருந்த செல்வி. அ. இராஜதுரை (திருமதி. அ. வேலுப்பிள்ளை, முன்னாள் அதிபர், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி) இதய சுத்தியோடு என்னை வரவேற்றதும் இன்றுவரை உள்ளார்ந்த அன்போடும் மதிப்போடும் இருக்கின்ற பிணைப்பு அது.

ஏன் இந்த ஆலாபரணம் என நீங்கள் எண்ணுவது புரிகிறது. மகாஜனக் கல்லூரியில் அன்றைய காலகட்டத்தில் ஆசிரியத்துவம், கல்விப்பாரம்பரியம் எத்துணை சிறப்பாக இருக்கிறது என்பதை என்னுடைய நினைவுகளில் மீட்டிப்பார்க்கின்றேன். ஆரோக்கியமான போட்டிகள், நேர்ப்பாங்கான விமர்சனங்கள், ஆசிரியர் - அதிபர் உறவு, ஆசிரியர் - ஆசிரியர் உறவு, ஆசிரியர் - மாணவர் உறவு, பாடசாலை – சமூக உறவு வெளிப்படையான விரிசல்கள் இல்லாமல் பாடசாலையின் வளர்ச்சியை மாத்திரம் இலக்காக கொண்ட காலகட்டம் அது. இவ்வகையான மனப்பாங்கு பாடசாலையை எல்லோரும் வளர்ப்பதற்கு போதுமானதாக இருந்தது. மாணவர்கள் தொல்லை கொடுப்பார்கள், அதிபர், ஆசிரியர்களிடம் அடி வாங்குவார்கள் தண்டனைக்குப் பின்னர் தாம் மகாஜனக் கல்லூரி மாணவர்கள் என்ற உணர்வுடன் மீண்டு வருவார்கள்.

கால ஓட்டத்தில் மனித நாகரீகம் உன்னதமான லட்சியங்களை, இலக்குகளை சிதறடிக்கத் தொடங்கியது நிஜம். அதற்கு நாட்டின் அசாதாரண சூழலும் வழிவகுத்தது எனலாம். ஆயினும் அசாதாரண சூழலில் கட்டுக்கோப்புடன் இருந்த எங்கள் விழுமியங்கள், பண்பாடுகள், எல்லாம் கடந்த ஏழு, எட்டு வருடங்களுக்குள் சீர்குலைந்து விட்டது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. எந்த ஒரு நிறுவனமும் எந்த ஒரு தனிமனிதனும் சாதனைகளை படைக்கும் போது தான் அந்நிறுவனம் / அவன் அடையாளப்படுத்தப்படுகின்றான். அவன் உன்னிப்பாக அவதானிக்கவும் படுகிறான். நேர்மனப்பாங்கோடு அவதானிப்பவன், சாதனையாளன் இன்னும் உயர்வதற்கு தட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பான். இன்னொருவர் வெற்றியை தன் வெற்றியாக கொண்டாடும் மனப்பாங்கு உன்னதமானது. துரதிஷ்டவசமாக எமது சமுதாயத்தில் சாதிக்கத் தெரியாதவனும் இருக்கிறான். அவனால் பொறாமைப்பட்டு சாதனையாளனை நசுக்கத் தான் முற்பட முடியும். **'சாதிக்கத் தெரியாதவன் ஒரு போதும் சாதனையாளனை ஏற்றுக் கொள்ள மாட்டான்.'** என்று சொல்லுவார்கள்.

மீண்டும் பாடசாலை என்கின்ற நிறுவனத்திற்கு வருவோம்.. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்கின்ற கட்டமைப்பில் அதிபர் என்கின்ற தலைமைத்துவமே பாடசாலை ரீதியான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பு கூறுபவராகவும் வகை கூறுபவராகவும் இருப்பார். இதை வழி நடத்துவது திணைக்களமாக இருக்கும் ஒரு ஆசிரியரோ அல்லது ஒரு அதிபரோ தனது ஆசிரியத்துவத்துக்கு பங்கம் வராமல் பாடசாலையில் செலவழிக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் பாடசாலையின் வளர்ச்சிக்காகவே செலவிடுகின்றார் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளும் வரையில் ஆசிரியர் சேவை ஒரு வருடமாக இருந்தாலென்ன 25 வருடங்களாக இருந்தாலென்ன அவர் பாடசாலைக்காக உழைத்திருக்கின்றார்., பாடசாலையின் இறைமையைப் பேணியிருக்கின்றார், பாடசாலைக்கு விசுவாசமாக இருந்திருக்கிறார் என்பது நிதர்சனம். மாணவர்கள் பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களின் வழிகாட்டலில் **தம்மை வளர்ப்பதற்கு பாடசாலையை ஒரு களமாக பாவிக்கிறார்கள்.** இது பல மாணவர்களால் ஜீரணிக்க முடியாத உண்மை. அந்த களத்தின் முடிவு மாணவருக்கு எதிர்கால நன்மைகளைத் தேடித்தருகின்றது. பாடசாலை சமூகத்தில் இனம் காட்டப்படுறது. ஆசிரியர்கள் இனம் காட்டப்பட்டாலும் அவர்கள் வெறும் ஏணிபடிகளே. ஏனென்றால் தங்களால் பாடசாலை ஏதோ நன்மையடையப் போகின்றது. ஆசிரியர்களும் அதிபரும் தமக்கு புகழ் தேடிக் கொள்ளப் போகிறார்கள் என்பது தான் இன்றைய கால கட்ட மாணவர்களினது மனப்பாங்கு.

தன் வாழ் காலத்தில் ஆகக் கூடியது 13 வருடங்கள் மட்டுமே பாடசாலையில் தன் கல்விக்காக செலவழிக்கும் மாணவன் 20, 25 வருடங்களாக பாடசாலைக்காக தன் நேரத்தை, உழைப்பை செலவிட்ட ஆசிரியர்களை, நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்களா? ஆம் நினைத்துப் பார்க்கின்றோம். பாடசாலையின்



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக்காக எங்களால் இயன்றதைச் செய்கின்றோம் என்றும் கூறும் ஒரு சமூகம் இருக்கத் தான் செய்கின்றது. பாடசாலை வளர்கின்றதென்றால் அங்குள்ள ஆசிரியர்கள் எத்துணை உழைப்பை கொடுத்திருப்பார்கள் என்ற சிந்தனை எத்தனை பேருக்குள்ளது என்பது இன்றைய உலகில் ஐயத்துக்குரியது.

இம்மடலை நான் பழைய மணாவர் சங்கத்திற்கு எழுதுவதனால் இந்த இடத்தில் துணிவுடன் ஒரு யதார்த்தத்தை கூறவிரும்புகின்றேன். பாடசாலையில் கற்றால் மாத்திரம் தான் பாடசாலையில் விசுவாசம் உள்ளவர்களாக இருக்க முடியும் என பல பழைய மாணவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கு கற்ற காலத்திலும் 2 மடங்கு 3 மடங்கு காலம் ஆசிரியர்களாக, அதிபர்களாக பாடசாலையை வளர்த்தெடுத்தவர்களின் விசுவாசத்தை எந்தக் கண்ணோடு பார்க்கின்றார்கள்.. அவர்களை நாம் ஒதுக்கித் தள்ளப்போகிறோமா அல்லது கேலி செய்யப் போகின்றோமா? வரலாறு தெரியாதவர்கள், புரியாதவர்கள் இப்பாடசாலையின் சாதனைகளை, சாதித்தவர்களை மறுத்தாலும், வரலாறு ஒருபோதும் மறக்காது என்பது தான் நூறுவருடங்கள் தங்கள் நலன்களை, வசதிகளை தியாகம் செய்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் காலம் செய்யும் கைமாறு.

மகாஜனாவை விட்டு வெளியேறி, மீண்டும் வந்து, இடம் பெயர்ந்து................ என்றெல்லாம் எனது ஆசிரிய வாழ்கையில் 15 வருடங்கள் மகாஜனாவில் கழித்திருக்கின்றேன். 17 வருடங்கள் வெளி மாவட்டங்களில் கழித்திருக்கின்றேன். அதிபர். திரு.பொ.கனகசபாபதிக்குப் பின் அதிபர் என்று மனத்தில் நிலைத்தவர் அருட்சகோதரி யூட் மடுத்தின். என்னிடம் எனக்குத் தெரியாமல் இருந்த அல்லது வெளிப்படுத்த முடியாமல் இருந்த பல ஆளுமைத்திறன்களை வெளிக் கொணர்ந்து சவால்களை எதிர் கொள்ளும் மனப்பாங்கை வளர்த்தவர். அவர்களுடைய தியாக சிந்தனை ஓட்டங்கள் தான் அவர்களால் வளர்க்கப்பட்டவர்களுக்கூடாக சமுதாயத்தை அடைகின்றது என்று நான் நம்புகின்றேன்.

நூற்றாண்டுக்காக 2008, 2009 களில் மாணவர்களின் பௌதீக வளம் பாடசாலையில் மிக உச்சமாக அதிகரிக்கப்பட்டது கண்கூடு. நூற்றாண்டை கொண்டாடுவோம் எனும் போது நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கேளிக்கை நிகழ்வுகள் பக்கம் சிந்திக்கவேயில்லை. ஏனெனில் 40, 50 வருடங்களுக்கு முன் எல்லா மக்களும் மன நிறைவுடன் இருந்தார்கள். இயற்கையான இழப்பைத் தவிர வேறு இழப்புகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கவேயில்லை. அத்தகைய நாட்களில் கொண்டாட்டங்கள் என்றால் கேளிக்கை விழாக்கள் தான். நாங்கள் அன்று ஆடினோம், பாடினோம் என்பது உண்மை தான்.

இன்று கல்விக்கலைத்திட்டத்தில் கூட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை, உணர்வு பூர்வமான கொண்டாட்டங்களை, மற்றவரை மதிக்கத் தெரிந்த மனப்பக்குவத்தை வெளிப்படுத்துவோம் என்பது தான் முனைப்பான விழாக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**மகாஜனாவில் நூற்றாண்டை ஒட்டி நாங்கள் சில ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தோம். ஒவ்வொரு செயற்றிட்ட வெளிப்பாடும் அன்னைக்கு ஒவ்வொரு விழாவாக அமைந்தது. அறிஞர்கள் பலர் இந்நூறாவது ஆண்டில் பாடசாலைக்கு வந்தார்கள். புத்தக வெளியீடுகளை, புத்தகக் கண்காட்சிகளைக் கண்டு மலைத்தார்கள். பாடசாலைகள் பல உள்ளே வந்தன. கணித நுண்ணறிவு, தமிழறிவு, பொது அறிவு போட்டிகளைக் கண்டு சிந்தித்தன. விளையாட்டில் முன்னணியில் நிற்கும் ஏறக்குறைய 20 பாடசாலைகள் வந்தன. எங்களோடு சேர்ந்து நூற்றாண்டைக் கொண்டாடின. ஏழை விவசாயிகளின் பிள்ளைகளுக்காக ஆரம்பித்த பாடசாலைக்கு மன்னார், வவுனியா போன்ற இடங்களிலுள்ள விவசாயிகளின் மாட்டு வண்டிகள் உட்பட வடமாகாணமே மாட்டு வண்டிச் சவாரியில் ஒன்று கூடி நூற்றாண்டைக் கொண்டாடின. எல்லாவற்றுக்கும்**







படிப்பகம்

www.padippakam.com

**சிகரம் வைத்தாற் போல் வன்னியிலுள்ள கல்விக்காக ஏங்கும் தாய் தந்தையற்ற பிள்ளைகளுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்த்த பணத்தை வழங்கி இதுவரை ஒரு கல்விச் சமூகம், இன்னொரு கல்விச் சமூகத்திற்கு வழங்கிய பணத்தில் ஆகக் கூடிய பணம் மகாஜன அசிரியர்களினதும் மாணவர்களினதும் தான் என்று கருணைப்பால இயக்குனர் அறிவித்து பத்திரிகையில் முதற்பக்க செய்தியாக கொடுத்த அந்த நாள் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் தியாகத்தின் வலிமை பூரணத்துவம் பெற்றிருக்கும்..** சீரழிந்து கொண்டிருக்கும் இளைஞர்களை மேலும் சீரழிய தூண்டுவதை விடுத்து சேவை மனப்பாங்கான நூற்றாண்டு கொண்டாட்டங்களையே உண்மையான விசுவாசமான மகாஜனன்கள் விரும்புகிறார்கள்.

தன்னம்பிக்கை, சுய ஒழுக்கம் உள்ளவன் எப்போதும் நேர்ப்பாங்கான விமர்சனங்களைப் பற்றித்தான் சிந்திப்பான். மகாத்மா காந்தி கூட விமர்சனத்திற்குட்பட்டவர்தான். ஒரு இலக்கை நோக்கி தேடல் ஆரம்பிக்கும் போது பல தடைகள் வரும். விமர்சனங்கள் எகிறிப்பாயும். ஆனால் தன்னம்பிக்கையோடு அவற்றை எதிர் கொள்ள வேண்டும்.

'உனக்குத் தெரியாமலே உன் உடம்பில் அடுத்தவனால் காயங்களை ஏற்படுத்த முடியும். ஆனால் உனக்குத் தெரியாமல் உனது ஒத்துழைப்பின்றி உன் உள்ளத்தை யாராலும் காயப்படுத்த முடியாது.' (எங்கோ இதை வாசித்த ஞாபகம்) நீ தன்னம்பிக்கையுடன் இருக்கிறாய். சுய ஒழுக்கம் உன்னிடம் உண்டு என்றால் உன்னால் தடைகளை தாண்ட முடியும். இதை மறுதலையாக நாம் சிந்தித்தால் நான் ஏன் இன்னொருவனின் மனத்தைக் காயப்படுத்த வேண்டும், எனக்குத் தான் ஒன்றுமே சாதிக்கத் தெரியவில்லை, சாதிக்கமுடியவில்லை, இன்னொருவன் சாதிக்கிறான், சந்தோஷப்படுவோமே எனச் சிந்திக்கலாமே. எங்கெல்லாம் தவறு கண்டு பிடிக்கலாம். அதை வைத்து என்னை பெரியவனாக காட்டிக் கொள்ளலாம் என நினைப்பவன் உண்மையில் உள நலம் குன்றியவனே. ஏற்றுக் கொள்வது கஷ்டம் தான். ஆனால் யதார்த்தமான உண்மை அது தான்.

நான் களவு செய்தால் பார்ப்பவன் எல்லாம் திருடன் போல் தான் தெரியும். நான் நன்மையே நினைப்பவன் நல்லதையே செய்பவன் என்றால் என்னால் பார்க்கப்படுபவர்களும் நல்லவர்களாகவே தெரிவார்கள். இது தான் எமது எண்ணங்கள் மூலமே நாம் எம் மனத்தை ஆளுவது. என்னிடம் நல்ல எண்ணங்கள் இருந்தால் என்னோடு நேர் கொண்ட பார்வையுடன் பேசுபவனுக்கும் அவ்வெண்ணங்களே செல்லும். (Vibrations of thoughts) எதை நாம் நினைக்கின்றோமோ எண்ண அதிர்வலைகளினால் அந்த எண்ணங்களே எம்மை வழிநடத்தும். அன்றொரு நாள் ஒரு அதிபருடன் கலந்துரையாடும் போது பின்வருமாறு கூறினார். 'எங்களோடு சேர்ந்திருக்கும் நல்லவர்கள் எம்மைப்பற்றிய நல்ல எண்ணங்களோடு இருப்பார்களானால் அவர்களுடைய அந்த நம்பிக்கையின் மனோசக்தி கூட்டாக எமக்கு ஒரு பலத்தைக் கொடுக்கும். எங்களை யாராலும் கெடுக்க முடியாது'.. சத்தியமான வார்த்தைகள் அவை. ஏனென்றால் மகாஜனக் கல்லூரியின் முதற் பெண் அதிபராகிய நான், அதிபர் வாழ்க்கையிலிருந்து விடைபெறும் கால கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மேலே குறிப்பிட்ட அந்த வார்த்தைகளை ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொண்டிருக்கின்றேன். அந்த நல்லுள்ளங்களின் வாழ்த்துக்களோடு மகாஜன அன்னயின் வாழ்த்துக்களையும் கூறி விடை பெறுவதில் பெருமையடைகின்றேன்.

வெல்லுக மகாஜன மாதா

திருமதி.சிவமலர் அனந்தசயனன்
யா/மகாஜனக் கல்லூரி



படிப்பகம்

www.padippakam.com



பொ. கனகசபாபதி
(முன்னாள் அதிபர், மகாஜனக்கல்லூரி)

# என்னால் முடிந்தது

எனது வாழ்வின் ஒரு முக்கிய தினம் 1976 மே மாதம், 25 ந் தேதி. எனது பதவி உயர்ச்சியுடன் கூடிய இடமாற்றல் கடிதம் 23ந்தேதி கிடைத்ததும் முதல் பிரச்சினையாக எழுந்தது புத்தூர் வாசிகளினதும், அப்பாடசாலை மாணவர்களினதும் இடமாற்றத்துக்கெதிரான போராட்டம். அது நியாயமானதும் கூட. புத்தூரில் அதிபராக இருந்த பொழுது பல சந்தரப்பங்களில் கல்வித் திணைக்களத்தினர் என்னை அழைத்து வேறு பாடசாலைகளுக்கு போகுமாறு வேண்டிய பொழுது மறுத்துள்ளேன். ஆனால் எனக்கு இடமாற்றம் என ஒன்று வந்தால் அதனை நான் கட்டாயம் ஏற்பேன் என்று பல சந்தர்ப்பங்களில் பாடசாலையின் பெற்றோர்களுக்கும் பழையமாணவர்களுக்கும் எடுத்துக் கூறியுள்ள போதிலும் இதனை அவர்களால் ஏற்பது கஷ்டமாகவே இருந்தது. எப்படியோ சமாளித்தேன். மகாஜனா போவதாகத் தீர்மானித்தேன். அதை அவர்களிடமும் சொன்னேன்.

கல்வித் திணைக்கள பணிப்பாளரை அணுகி நான் மகாஜனாவுக்குப் போவதாயின் அங்கே அப்பொழுது அதிபராகக் கடமையாற்றும் அதிபர் கதி என்ன என வினவினேன். அவர் கல்வித் திணைக்களத்திற்கு கல்வி ஆலோசகராக இடமாற்றம் பெற்று வருகிறார் எனவே கவலை இல்லாது நீ அங்கே போ என்றார் பணிப்பாளர் அப்துல் மஜீத் அவர்கள்.

இடமாற்றக் கடிதத்துடன் எனது இதய தெய்வம் அதிபர் ஜெயரத்தினத்தின் இல்லம் சென்றேன். அவர் ஆசி பெற்றபின்னர் அடுத்தாக அப்போதைய பாடசாலை அதிபர் சிவசுப்பிரமணியத்தின் இல்லம் சென்றேன். எனது இடமாற்றம் அவருக்கு ஏற்கனவே தெரிந்த விசயம். மறு நாள் விட்டு 25ந் தேதி காலை 9:00 மணிக்குப் பாடசாலைக்கு வந்து பொறுப்பேற்குமாறு வேண்டினார்.

25ந்தேதி காலை அதிபர் ஜெயரத்தினத்தின் இல்லம் சென்று அவரது ஆசி பெற்றபின்னர் சரியாக 9:00 மணிக்குப் பாடசாலை உள்ளே புகுந்தேன். சொர்க்கபுரியுள் புகுவது போன்ற மனக் கிளர்ச்சி. மாணவ மாணவியர் ஆலயத்தில் பிரார்த்தனை முடித்துக் கொண்டு தத்தம் வகுப்புகட்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர். அதிபர் தனது அலுவலகம் வந்தார். நானும் புகுந்தேன். அவர் அதிபர் ஆசனத்தில் அமர்ந்தார். நான் அதிபர் மேசைக்கு முன் உள்ள ஆசனத்தில் அமர்ந்தேன். அடுத்த இரண்டு நாட்களும் இதே ஆசனம் தான் எனக்கு இருக்கையாக இருந்தது. அதிபருக்கு இன்னும் இடமாற்றக் கடிதம் வரவில்லை. ஆகவே அடுத்த இரண்டு நாட்களும் பாடசாலையை இரு அதிபர்கள் நிர்வகித்தனர். அதுவும் ஒரு வகையினில் நல்லதாகவே இருந்தது. அவரது நிர்வாகத்தில் பாடசாலை நடைபெறுகின்ற முறையினை அவதானிக்க முடிந்தது. என்ன என்ன சீர் திருத்தங்களை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்று திட்டமிட முடிந்தது.

இன்னொரு விதத்திலும் அனுகூலமிருந்ததை அதிபரது மூத்த மகளின் கூற்று விளக்குகிறது, "இப்பொழுதுதான் பாடசாலை, பாடசாலை போல் உள்ளது. நீங்கள் அலுவலகத்தின் உள்ளே இருந்து செயற்பட அவர் வெளியே உலவி ஒழுங்காட்சியைக் கவனிக்கப் பாடசாலை மிகச் செம்மையாக நடைபெறுகிறது. இப்படித்தான் பாடசாலை இயங்க வேணும்" என அவர் தன்னிடம் சொன்னதாக அதிபர் சிவசுப்பிரமணியம் என்னிடம் கூறினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## பழைய தொடர்புகள் புதுப்பிக்கப் பட்டன:

அதிபர் தனது அலுவலகத்தினில் உட்கார்ந்திருந்தமையால் எனது காலம் பாடசாலையை வலம் வருவதில் தான் கழிந்தது. பாடசாலையின் வாயிற் படலைகள் பாடசாலை தொடங்கியதும் பூட்டப் பட்டிருந்தன. காலை இடைவேளை மதிய போசன வேளயில் திறந்து மாணவர் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப் பட்டனர். பாடசாலையின் வாயிற்படலைகள் பூட்டப்படுவதை எனது மனது அங்கீகரிக்கவில்லை. அதே போன்று இடைவேளையின் போது மாணவர் வெளியே செல்வதையும் என்னால் ஏற்க முடியவில்லை. மகாஜனாவில் நான் ஆசிரயராக இருந்தபோது பாடசாலையின் முற்புறத் திடலினைச் சுற்றி வர சுருள் குரோட்டன் செடிகள் நட்டிருந்தேன். திடலின் பின் மையப் பகுதியில் பாவலர் துரையப்பா பிள்ளை சிலை அழகோச்சிக் கொண்டிருந்தது. சுருள் குறோட்டன் செடிகள் அதிகம் வளர்ந்து பாவலரின் சிலையின் தளத்தினை ஓரளவு மறைத்தபடி காணப்பட்டன. ஏதாயினும் செய்ய வேண்டும். உடைந்த தளபாடங்கள் அறை ஒன்றினை நிரப்பி அதற்கு வெளியேயும் குவிந்து காணப்பட்டன. அவற்றினை என்ன செய்யலாம்? வகுப்பறைகளிலோ தளபாடம் பற்றக்குறை எக்கச் சக்கமாக. ஓரளவாவது நிவர்த்தி செய்ய வேண்டும். நினைவுக்கு வந்தனர் இருவர். ஒருவர் இளையவி மற்றவர் நடேசு. இளையவி மகாஜனாவில் அதிபர் ஜெயரத்தினம் காலத்தில் விளையாட்டு மைதானப் பொறுப்பாளராக இருந்தவர். மிக்க திறமைசாலி. எமது ரென்னிஸ் மைதானம், கிறிக்கட் ஆடுதளம் யாவும் அவரது கைவண்ணம். அத்துடன் மிகவும் கலைத்துவம் நிரம்பியவர். எதனைச் செய்தாலும் அதனை அழகுமிளிரச் செய்யவல்லவர். அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுப் போய்விட்டார். தெல்லிப்பழையில் தான் வசிப்பதாக அறிந்தேன். ஆளைவிட்டு அவரை வரவழைத்தேன். குறோட்டன் செடிகள் மறுநாள் அவர் கைவண்ணத்தால் ஒழுங்கு பெற்றன. பாவலர் சிலை முழுமையாக காட்சியளித்தது. நடேசு மாவிட்டபுரத்தில் விசுஷ்வகர்ம கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை நடத்தி வருபவர். எமது கல்லூரியின் எந்த விதமான செப்பனிடு வேலை என்றாலும் அவர் ஆலோசனை கேட்டே அதிபர் ஜெயரத்தினம் செய்வது வழக்கம். அதிபர் வீட்டின் செல்லப் பிள்ளை போலவே வலம் வருவார். என்றுமே புன்முறுவல் பூத்த முகத்தினராய் நெற்றி நிறைந்த திருநீற்றுப் பூச்சுடனும் மார்பின் குறுக்கே பூனூலுடனும் பாடசாலையில் காட்சி தருவார். ஏதோ தெரியவில்லை. அதிபரின் ஓய்வுக்குப் பின்னர் நடேசுவுக்கும் பாடசாலைக்குமிடையே இருந்த தொடர்பு அத்தனை சுமுகமாக இருக்கவில்லை. அதிபர் காலத்திலே நான் பலபொறுப்புக்கள் ஏற்றிருந்தமையால் நடேசுவுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு இருந்தது. ஆகவே அவரை அழைத்தேன் வந்தார். அடுத்த சில நாட்கள் அவரின் செயற்பாடுகள் விடுதிச் சாலையின் சமையல் அறையின் விறகுப் பிரச்சினையைத் தீர்க்க உதவின.

## பழைய நடைமுறைகள் புத்துயிர் பெற்றன:

ஆசிரியர் கூட்டம் மாதத்தில் ஒரு முறை நடைபெறுவதுண்டு. அதிபர் காலத்தில் பாடசாலை முடிந்த பின்னரே அக்கூட்டம் நடைபெற்று வந்தது. எப்படியோ அதில் மாற்றம் ஏற்பட்டு இப்போ அன்றைய தினம் ஒரு பாடவேளை முன்னர் பாடசாலை மூடப்பட்டு அந்த வேளையில் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. இதனை நான் விரும்பவில்லை. பாடசாலையின் மாணவர்கள் பலர் பேருந்தினில் பிரயாணம் செய்பவர்கள். பேருந்து பாடசாலை முடியும் நேரமான 3:45 மணிக்கே வரும். ஆகவே பேருந்தில் பிரயாணம் செய்கின்ற மாணவர்கள் அத்தனை பேர்களும் ஒரு பாடவேளை காத்திருக்க வேண்டும். ஆகவே நான் முதல் ஆசிரிய கூட்டத்திலேயே இதனைக் கூறி மாதத்தில் முதல் திங்கட்கிழமை ஆசிரியர் கூட்டம் நடைபெறும். அது பாடசாலை முடிந்த பின்னரே நடைபெறும், ஆசிரியர்கள் யாபேரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என வேண்டினேன். சம்மதித்தார்கள். எனது நன்றியைக் காட்டு முகமாக எல்லோருக்கும் என்செலவிலேயே தேனீரும் சிற்றுண்டியும் வழங்கினேன். மகாஜனாவில் ஆண்களுக்கான கழிப்பிடம் பற்றாக்குறை நீண்டகாலமாக இருந்து வந்தது என்பதை மறுப்பதற்கில்லை. இதனைச் சமாளிக்கும் நோக்கிலே தான் அப்போதைய அதிபர் அவர்கள் இடைவேளையின் போது மாணவர்களை வெளியே அனுமதித்தார். என்னைப் பொறுத்த மட்டிலே இது அசிங்கமாகத் தெரிந்தது. மாணவர்கள் தெரு ஓரத்திலே வரிசையாய் நின்று சிறுநீர் கழிப்பது அனாகரிகமாக இருந்தது. மேலும் வெளியே செல்கின்ற மாணவர்கள் வீதியோரக் கடைகளிலேயே காலைத் தேனீரையும் முடித்துக் கொண்டு வந்தார்கள். ஆகவே மாணவர்கள் தேனீர் இடைவேளையில் வெளியே போகப்படாது என்ற அறிவித்தலை விடுத்தேன். எப்படியோ சமாளித்தார்கள். மாணவர்கள் என் வேண்டுதலுக்குப் பணிந்தார்கள்.

பாடசாலையின் வாசல் படலை சாத்தப் படுவதையும் நான் ஏற்காமையால். அதற்கான அறிவிப்பினையும் செய்தேன். காலையில் நான் எப்பெழுதுமே 7:45 மணிக்கு முன்னர் பாடசாலை வந்துவிடுவேன். அதே போன்று மாலை 6:00 மணிக்குப் பின்னர் தான் வீடு செல்வது வழக்கம். ஆகவே காலையில் நான் வரும் பொழுது திறக்கப்படும் வாசல் படலை மாலையில் நான் சென்ற பின்னர்தான் பூட்டப்படும்.ஆனால் பாடசாலைக்கு வந்த மாணவர் எவரும் பாடசாலை நேரத்தில் பாடசாலையை விட்டு வெளியேறுவதாயின் அனுமதி பெற்றேதான் செல்ல வேண்டும் என மாணவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தேன். ஒத்துழைத்தனர். பாடசாலை சீராக ஓடியது. பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. எனது முதல் கூட்டம். அதிபர் ஜெயரத்தினம் அவர்களும் வந்திருந்தார். தேனீர்ச்சாலை வாடகை கடந்த ஒன்றரை ஆண்டுகட்குத் தரப்படவில்லை என்றார்கள். சங்கரப் பிள்ளயைப் பார்த்தேன். இடைவேளையின் போது மாணவர்களை வெளியே விட்டால் எனக்கு எங்கே வியாபாரம் நடக்கும். நான் எப்படி வாடகை கட்டுவது என்றார். ஆனால் இந்த மாதம் தொடக்கம் முழுமையாக வாடகை செலுத்துவேன். இப்போ மாணவர்கள் தேனீர்ச் சாலைக்கு வருகிறார்கள் என்றார். அவரது கோரிக்கையில் நியாயம் உள்ளதாக அதிபர் அவர்களும் ஒப்புக் கொண்டார். சங்கரப் பிள்ளை 6 மாத வாடகை தருவதற்கும் ஒப்புதல் அளித்தார். நான் ஆசிரியனாக மகாஜனக் கல்லூரியில் கால் வைத்தபோது உயர்தர வகுப்பு மாணவிகள் அரைத்தாவணி உடுத்தியபடியேதான் பாடசாலைக்கு வந்தனர். காலக் கிரமத்தில் அது தாவணி சேலையாக மாறியது. வைரவிழாக் காலத்தில் அதிபர் அவர்கள் பாடசாலைக்கென பிரத்தியேக அணிஉடையினைப் புகுத்தினார். அதன்படிக்கு பெண்பிள்ளைகள் முழங்கால் வரை நிற்கும் வெள்ளைச் சட்டையும் கழுத்துப் பட்டியும் அணிந்தனர். ஆண்கள் வெள்ளைக் காற்சட்டை சேட் அணிந்தனர். அதிபரது ஓய்வுக்குப் பின்னர் மெல்லமெல்ல இந்தப் பாடசாலை அணிஉடையென்பது கற்பனையாகி விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்தேன். அவர்கள் அங்கீகாரத்துடன் மீண்டும் பாடசாலை அணியுடையினை நடைமுறைக்குக் கொண்டு வந்தேன். மாணவர்கள் மனப்பூர்வமாக ஒத்துழைத்தனர். மகாஜனாவின் அணியுடை மற்யை பாடசாலைகளையும் அப்படிச் செய்தால் என்ன எனச் சிந்திக்க வைத்தது. அதில் எனக்கு உறுதுணையாக நின்றவர்கள் திருமதி. கனகேஸ்வரன், திருமதி. அனந்தசயனன், திருமதி. வேலுப்பிள்ளை மற்றும் திரு. செல்வகுணச்சந்திரன் ஆகியோர்

## பழைய கடன் ஈடுசெய்யப்பட்டது:

நான் பதவியேற்ற ஒரிரு நாட்களில் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதன் படிக்கு துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா மலர் அச்சேற்றியதன் செலவுகாரணமாகப் பாக்கிப் பணம் ரூபா 5000-00 நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதாகவும் அதனை விரைவில் தந்துதவின் நன்றியுடையவர்களாக இருப்போம் எனவும் குறிப்பிட்டருந்தார்கள். துரையப்பாபிள்ளை நூற்றாண்டு நடைபெற்றது 1972ல். ஆகவே அழுத்தகத்திற்கான பாக்கி நிலுவையாகி ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டன. எனது அபிமானத்துக்குரிய ஆசிரியர் மயிலங்கூடலூர் நடராசனை அழைத்து என்ன செய்யலாம் என ஆலோசனை செய்தேன். நல்லதோர் ஆலோசனை தந்ததுடன் அதனை நிறைவேற்றுதற்குக் கடினமாகவும் உழைத்தார். அந்த முயற்சியே தாசீசியஸ், பாலேந்திரா, ஞானம் லம்பேர்ட்டின் முயற்சியால் மேடையேற்றப் பட்ட நாடகமான "பிச்சை வேண்டாம்." மகாஜனாக்கல்லூரித் திறந்த வெளி அரங்கினிலே மேடையேற்றப்பட்டது. சேரன் மாணவர் தலைவனாகவும், லிங்காதரன் துணைத்தலைவராகவும் செயலாற்றிக் கொண்டிருந்தனர். வேறு சிலரின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று பிரவேசச் சீட்டு விற்றார்கள். பெரும் அளவில் பணம் திரட்டினார்கள். கடன் போனது. கௌரவம் பேணப்பட்டது.
அது மாத்திரமல்லாமல் ஒரு நவீன நாடகத்தைப் பார்க்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக ஊரவர்கள் பாராட்டினார்கள். முதல் முதலாக குடா நாட்டிலே இந்த நாடகத்தை மேடையேற்றச் சந்தர்ப்பமளித்தமைக்காக தாசீசியஸ் மற்றும் பாலேந்திரா அவர்கள் நன்றி கூறினர்.

## பழையபடி கல்லூரி ஆர்ப்பரிக்கத் தொடங்கியது:

1970ஆம் ஆண்டு பங்குனி மாதத்திலே வைரவிழாக் கட்டிடத்திறகாக அடிக்கல் நாட்டினோம். வைரவிழாவச் சபையினது செயலாளராக நான் கடமையாற்றினேன். 1970ஆம் ஆண்டு மே மாதத்தில் நான் பதவி உயர்வு பெற்று மாற்றலாகிப் போய் விட்டேன். அரசாங்கத்தின் ஒய்வு பெறும் வயதெல்லை மாற்றத்தின் காரணமாக அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் அவ்வாண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெறவேண்டி வந்து விட்டது. அவருக்குப் பின்னர் பதவிக்கு வந்த அதிபர்கள் வைரவிழாக் கட்டிடத்தினை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை.
நான் அதிபர் பதவி ஏற்றதும் மடமடவென எல்லாம் கைகூடி வந்தன. எனது அதிஷ்டம். பழையமாணவர் கணேசரத்தினம் பிரபலமான கட்டிட ஒப்பந்தக்காரர். வைர விழாக் கட்டிட வேலைப்பொறுப்பினை அவர் ஏற்றார். கட்டிடம் கடகட என எழுந்தது. பெற்றோர்களும் பழையமாணவர்களும் இன்னும் பாடசாலைமேல் அபிமானம் கொண்டோரும் தாராளமாக உதவினர். பற்றாக்குறைக்கு அக்காலத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.க. சிவநாதன் அவர்கள் ஒரு லட்சம் ரூபா தந்து உதவினார். எமது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் கௌரவ எதிர்க் கட்சித் தலைவருமான அமரர் அமிர்தலிங்கம் அதற்குப் பெரிதும் உதவினார். ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்காத மாதிரி எனது இதய தெய்வம் அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் 1976ஆம் ஆண்டு அகாலமரணமடைய வைரவிழா நினைவுக் கட்டிடம் வைரவிழா நினைவு ஜெயரத்தினம் கட்டிடமாயிற்று. கட்டிடம் 1980ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது. கட்டடித்தின் வாயிலில் அதிபரின் மார்பளவு சிலை நிறுவப்பட்டு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களால் திறக்கப்பட்டது. இச்சிலையினை வெண்கலத்தினால் ஆக்குதற்கு வேண்டிய அத்தனை வெண்கலத்தினையும் பாடசாலை மாணவர்களே சேகரித்தார்கள்.

மகாஜனக் கல்லூரி இன்று நூற்றாண்டினைக் கண்டு பொலிவுடன் நிற்கிறது. 1910ஆம் ஆண்டினிலே ஒரு சில மாணவர்களுடன் பாவலர் வீட்டுத் தாழ்வாரத்திலே ஆரம்பித்த பாடசாலை, எமது மகாகவியே வியந்து கூறிய "தந்தை சிறு கொட்டிலாகத் தொடங்கிய இப்பள்ளி இந்த விதமாய் எழுந்து நிற்கிறதே" என்ற கவிதைக்கு ஏற்ப படிப்படியாக வளர்ந்து இன்று கம்பீரமாகக் காட்சி தருகிறது. அது தனது வெள்ளிவிழாக் காண்கையில் தெல்லிப்பழைக்கும் சுற்றயல் கிராமங்களுக்குமான பாடசாலையாகியது. அதிபர் ஜெயரத்தினம் அதிபராக பொன்விழா நடத்தியபோது அது வளர்ந்து யாழ் மாவட்டத்துக்கும் அப்பால் வடமாநிலத்துக்கான கல்லூரியாகியது. வைரவிழாவினைப் பாடசாலை கண்டபொழுது அதன் வியாபகம் மேலும் பரவி மலையகம் மற்றும் திருகோணமலை வரை பரவியது. நான் அதிபராகப் பதவி வகித்து வைரவிழா ஜெயரத்தினம் மண்டபம் திறக்கப்பட்ட போது பாடசாலை கீழ்மாகாணம் மாத்திரமல்லாமல் பெரும் அளவில் இஸ்லாமிய சமூகத்தவரையும் கொண்ட ஒரு மாபெரும் கல்லூரியாகியது. பாடசாலையை நாடி எல்லாச் சமூகத்தினரும் எல்லா மாவட்டத்தினரும் நாடி வந்தனர். மாணவர் தொகை 2500க்கும் மேற்பட்டது, விடுதி மாணவர் தொகை அதிகரித்தது. விடுதிச் சாலை வளர்ந்தது. சிவதர்ம வள்ளல் மிலக்வைற் முதலாளி கனகராசா அவர்கள் எமது கல்லூரி மேல் காட்டிய அன்பின் பிரதிபலிப்பாக விடுதிச் சாலைக்கு ஒரு அறை கட்டித்தந்து உதவினார். மாணவர்கள் வசதியாக வாழ முடிந்தது.

பாடசாலை யாழ் மாவட்டத்திலேயே அதிக தொகை மாணவர்களைக் கொண்டதாக மாத்திரம் இல்லாமல் சகல துறைகளிலும் தன் பெயரினை நிலை நாட்டியது. 1979ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி புகுந்தவர்கள் மாத்திரம் 12 பேர்களாயினர். இலங்கையிலே இது முதல் நிலையாகியது. உதைபந்தாட்டத்தில் 1978ஆம் ஆண்டினிலே இலங்கையிலே உள்ள கல்லூரிகள் யாவற்றினையும் தோற்கடித்து Singer Shield பெற்றுச் சாதனை புரிந்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

## பழையன கழிதலா?

பாடசாலை வளர்ந்தது. பார்புகழ எழுந்தது. ஆகவே சிலரது வயிறு எரிந்தது. எங்கேயும் நல்லதொரு நிர்வாகத்துக்கு எதிர்ப்பு வருவது சகசமே. ஏதேதோ காரணங்கள் அதற்குப் பிற்புலமாக அமையும். எதிர்ப்போர் எதிர்க்க வேண்டும் என்பதற்காக ஒன்று சேர்ந்து விடுவர். ஆகவே கல்வித் திணைக்களத்தில் உள்ளோர், உள்ளூர் அரசியல்வாதிகள், தொழில்துறையில் என்போன்றவர்கள் ஒன்று திரண்டனர். அதிபர் ஒருவருக்கு எதிராக மூன்று குற்றச் சாட்டுகள் கூறமுடியும். நிர்வாகத் திறமையின்மை, பாலியல் விவகாரம், பண மோசடி. இதில் முதல் இரண்டும் எனக்கு எதிராகச் சொல்ல முடியாமையால் அரசியல் சார்பு, பணமோசடி என குற்றம் சாட்டினர். இடமாற்றம் செய்தனர். எமது பராளுமன்ற உறுப்பினர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் இடையிட்டு இடமாற்றத்தை இரத்து செய்தார். கல்வி அமைச்சிலிருந்து ஒருமுறைக்கு இருமுறை உயர் அதிகாரிகள் வந்து விசாரித்து எனது நிர்வாகத்தில் எந்த விதமான அரசியலும் கலக்கவில்லை எனக் கூறியமையால் அந்தக் குற்றச் சாட்டு புஸ்வாணமாகியது.

அடுத்தது காசடித்தது. அதற்கும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட கணக்குப் பரசோதனை அலுவர்கள் வரவழைக்கப் பட்டனர். பதிவேடுகள் யாவும் பக்குவமாய் பார்க்கப் பட்டன. நிதி மோசடி என ஒன்றும் இல்லை எனக் கூறிச் சென்றனர். "நான் என்னைப் போல மற்றவர்களைப் பார்த்தேன். அவர்களோ தம்மைப் போன்று என்னைப் பார்த்தனர்" என்றேன். அவர்களுக்கு அதன் அர்த்தம் விளங்கியதோ தெரியவில்லை.

மேலும் அப்பாடசாலையில் தொடர்ந்து சேவையாற்றுதல் எனது மனதுக்கு உகந்ததாகத் தெரியவில்லை. வெளியேறினேன். ஆனால் அப்பாடசாலைமேல் வைத்த பாச உணர்வு இன்றுவரை மென்மேலும் அதிகரித்துக் கொண்டு போகிறதே அன்றி குறைவதாய்த் தெரியவில்லை.

1978 அகில இலங்கை சாம்பியன் அணி



www.padippakam.com



# அது ஒரு நிலாக்காலம்

- புவனன்



இருபத்தியேழு வருடங்களுக்குபின் நான் எனது பாடசாலைக்குப் போனேன். அம்பனை வயல்வெளி தாண்டி சந்தியால் திரும்பியபோது நின்ற ஆமிக்காரச்சிறுவன் தன்பாட்டிற்கு ஏதோ நிலத்தைக்கீறிக் கொண்டிருந்தான். அவனைப்பார்க்க பாவமாகவும் இருந்தது. என்னிலை மறந்து.

பன்னாலை றோட்டிற்கு கிளையாய் பிரியும் வீதியில் இருந்த கடைகளைக்காணவில்லை. கொல்லன்கலட்டி றோட்டிற்கு திரும்பும் அம்பனைச்சந்தியை தேடியபடி போனேன். 'டபக்'கென்று வந்து நின்றது பாடசாலை. அதே மிடுக்கு. அதே கம்பீரம். ஆனால் நான்தேடிய அம்பனைச்சந்தியைக் காணவில்லை. மோகன் கடையைக்காணவில்லை. இந்திரன் கடையைக்காணவில்லை. அட, லிங்கம் கடைகூட இல்லை. ஆனாலும் பள்ளிக்கூடம் இருந்தது.

ஆங்காங்கே புதிய புதிய கட்டிடங்கள் முளைவிட்டுக்கொண்டிருந்தன. ஆர்ட்ஸ்ஹோலிலிருந்து தகரக்கொட்டில்வரை - பத்துவருடங்கள் என் கால்படாத இடங்களே இல்லை. ஒவ்வொன்றாக தேடினேன். என் பள்ளி நண்பன் அசோக்குமார் வந்தான். அதிபர் என்னை விருந்தினராக உபசரித்தார். அசோக்குமார் என்னை கூட்டிச்சென்றான். எல்லாம் புதிய முகங்கள். என் பள்ளி நண்பன் புனிதன் உயர்தரவகுப்பிற்கு கணிதம் படிப்பித்துக்கொண்டிருந்தான். அவனைப்பார்க்க பொறாமையாக இருந்தது. அவனும் என்னைப்பார்த்துப் பொறாமைப்பட்டிருக்கலாம்.

பள்ளியின் ஒவ்வொரு துகள்களும் என்னுள் ஒரு ஏக்கத்தை தூண்டின. 'ஞாபகம் வருதே ஞாபகம் வருதே' சேரனின் பாடல் இதயத்துள் வலித்தது. ஒரு மணிநேரம் சுற்றினேன். சுழன்றேன். எனது தகரக்கொட்டகை வகுப்புகள் அங்கே இல்லை. கோவில் புதிதாக நவீனமயப்பட்டுக்கொண்டிருந்தது. கொஸ்ரலைக் காணவில்லை. துணுக்காய் ரவியையும், வசந்தனையும், இளங்கோவையும் அங்கே தேடினேன். எல்லாம் வகுப்பறைகளாக மாறிக்கொண்டிருந்தன. ஸ்கோர் போட்டும் ஸ்போட்ஸ்றூமும் பழைய பொலிவில் இல்லை. மைதானம் காய்ந்து வரண்டுபோயிருந்தது. அதில் பசுமையைத்தேடினேன். என் கண்ணுக்கெட்டியதூரம் வரை அது இல்லை.

மைதானத்தின் நடுவில் 'குத்தடி குத்தடி சைலக்கா' பாடல் என் நினைவுக்குள் ஒலித்தது. ஸ்போட்ஸ் மீற் மனத்திரையில் ஓடியது. அது ஒரு நிலாக்காலம்.

தனம் மைல் ஓடி முதலாவதாய் வந்தது இன்னும் எனக்குள் நம்பிக்கையை விதைக்கிறது. தனம் என்ற தனபாலசிங்கம் ஒரு ஓட்டக்காரனல்ல. வெறும் பகிடிக்காரன். ஆனாலும் மைல் ஓடினான். சின்னையா இல்லத்துக்காக மூவாயிரம் மீற்றர்கள் ஓடினான். மைதானத்துள் எத்தனை வித்தைகள் காட்டினான். துள்ளினான். தாவினான். குறளிவித்தைக்காரன்போலவே ஓடினான். அவன் ஓடிமுடிப்பான் என்று யாரும் நம்பவுமில்லை. எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் வென்றான். அவன் லேகியம் சாப்பிட்டுவிட்டுத்தான் ஓடினான் என்ற ஒரு கதைபுரண்டாலும், அவன் வென்றான் என்பதே எனக்கான செய்தி.

அதோ பாருங்கள், கோயில் மூலையில் துரையப்பா இல்லம். அந்தப்பந்தலில் நின்று கணேஸ்வரீச்சரின் கும்மி என்ற ஶ்ரீலகுமார் பைலாப்போடுவது அப்படியே தெரிகிறது. கள்ளமில்லா நகைச்சுவைப்பேர்வழி. எத்தனை குறும்புகளைக் கண்டு ரசித்திருப்போம்.

விளையாட்டுப்போட்டியென்றால் முயல், மனோரஞ்சன், பரராஜசிங்கம், லிங்கோஸ், தங்கராஜா, பிறேமன், றோகன், முருகதாஸ், சத்தியராஜ், ஜெயந்தன், இதைவிட செந்தில்வாணி, செந்தில் செல்வி என்று ஒரு பட்டாளம் எங்களுக்கு முன்னால் ஓடத்தான் செய்யும். இவர்களுள் இயல்பான திறமைசாலிகள், கடும் பயிற்சிக்கூடாக வெற்றிகண்டவர்கள் என்று இரண்டு பிரிவு பிரியும். லிங்கோஸ், றோகன், சத்தியராஜ், ஓமந்தை ராஜ்குமார் போன்றோர் கடும் பயிற்களுக்கூடாக வெற்றிகண்டவர்கள். தன்னம்பிக்கைக்கு வெளிச்சம் காட்டுபவர்கள். இடையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அண்மைய இடப்பெயர்வுகள் அவலங்கள் வரை ஓமந்தை என்பது எனக்கு வெறும் ஒரு பட்டப்பெயராக மட்டுமே தெரிந்திருந்தது.

இருநூறு மீற்றர் ஓட்டத்தில் அசைக்கமுடியா ஓட்டக்காரனான பரராஜசிங்கத்தை லிங்கோஸ் வெற்றிகொண்டது ஒரு சாதனைதான். 19 வயதுக்கு மேற்பட்டோர் நூறுமீற்றர் ஓட்டத்தில் தங்கராஜாவை றோகன் நெருக்கியது சாதனைதான். பாடசாலைக்காலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

விளையாட்டுப்போட்டிக்காலம் நிலாக்காலம் தான். அதிலும் எங்கள் பாடசாலை ஓர் கலவன் பாடசாலை. அந்த நிலவினில் நாங்கள் நன்றாகவே நனைந்தோம்.

தயவுசெய்து, இந்த இடத்தில் என்னைப்பற்றியும் ஓரிரு வார்த்தைகள் பேச என்னைக்கொஞ்சம் அனுமதியுங்கள்.

நான் மகாஜனாவிற்கு போன அன்று அதிபர் ஜெயரத்தினம் ஒய்வு பெறுகிறார். அதைவிட இன்னுமொரு முக்கியசெய்தி. நான் மகாஜனாவிற்கு போன முதல்நாள் பாடசாலை மகிழ்ச்சிக்கடலில் திளைக்கிறது. ஒரே ஆரவாரம். எனக்கும் புல்லரிக்கிறதே தவிர விசயம் புரியவில்லை. நூறுமீற்றர் முடியிற இடத்தில், மாமரத்திற்கு கீழ் ஒரு கூட்டம் கூடியது. வடிவேஸ்வரன், சந்திரலிங்கம் என வீரர்கள் எல்லோரையும் முன்னுக்கு வரிசையில் நிற்கவிட்டு அதிபர் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருந்தார். அகில இலங்கை உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்தை மகாஜனா சுவீகரித்துக்கொண்டதுதான் அந்த இனிப்பான செய்தி. மகிழ்ச்சியை கொண்டாட அன்றையதினம் விடுமுறை என அறிவித்தார் அதிபர். நான் வகுப்பிற்குள் காலடி எடுத்துவைக்காமலே வீட்டுக்குத்திரும்பினேன்.



கோயிலுக்குப் பக்கத்தில் என்னுடைய வகுப்பு. 5 B. கந்தையா ரீச்சர் வகுப்புரீச்சர். வகுப்பில் ஒன்றாகப்படித்தவர்கள் எல்லோரும் எனக்கு வரிசையாய் நினைவுக்கு வருகிறார்கள்.

யோகானந்தன், ஜெயம்பாலகிருஸ்ணன், சிவகுமார், தியாகராஜா, செல்வஸ்கந்தராஜா, கிருஸ்ணானந்தன், ஸ்ரீலதன், விக்கினேஸ்வரன், சிங்காரவடிவேல், மனோகரன், விக்கினராஜேஸ்வரன், ஜெயந்தன், வசீகரன், குமரதாசன், ராஜகுமாரன், தயானந்தன், ரவீந்திரன், சிவசொருபன், பெண்கள் பகுதியில் லலிதாதேவீ, சாமுண்டீஸ்வரி, கலைச்செல்வி, புஸ்பமலர் இவர்கள் மட்டுமே நாற்பது வருடங்களின் பின் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறார்கள். மற்றவர்கள் என்னை மன்னிக்க. முகங்கள் நினைவாடுகின்றன. இதில் ஒவ்வொருவரைப்பற்றியுமே தனிக்கதைகள் எழுதலாம். ஒவ்வொருவரும் வித்தியாசமான அற்புத கரெக்ரேஸ். கள்ளமில்லா பிஞ்சு வெள்ளைஉள்ளங்கள். விரிவாய் எழுதினால் ஒரு நாவலே உருவாகலாம். ஆனால் புஸ்பமலர் அனுமதிதந்தாலும், இந்த மலர், எனக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை என்பது மட்டும் எனக்குத் தெளிவாய்தெரியும். எனவே இந்த விடயத்தை இத்துடன் நிறுத்திக் கொண்டு சொல்ல வந்த விடயத்தை மட்டும் சொல்லி விடுகிறேன் (ஓ, அப்ப நீ இன்னும் தொடங்கவே இல்லையா என்று நீங்கள் மனதுக்குள் கறுவிக்கொள்வது தெரிகிறது. பொறுமை, பொறுமை, அமைதி அமைதி...ப்ளீஸ்)

சதானந்தா வித்தியாசாலை, அருணோதயாக்கல்லூரி முடித்து நான் மகாஜனா என்ற பெரிய பள்ளிக்கூடத்திற்குப் போய் நான் சந்திக்கும் முதலாவது விளையாட்டுப்போட்டி அது. அப்போது நான் அருளம்பலம் இல்லம், முன்பு குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாம் ஒரே கௌஸ்தான். வீட்டிற்குள் சண்டை வந்துவிடக்கூடாது என்பதற்காய் இருக்கலாம். ஆனால், இது சமநிலையைப் பறிக்கிறது என்று திரும்ப இல்லங்கள் பிரிக்கப்பட்டபோது நான் சின்னையா இல்லத்துக்குள் போய் விழுந்தேன். பின்னர் அதிபர் ஜெயரத்தினமும் ஒரு கௌஸ் ஆக வந்து திரும்ப பிரிக்கும் போது நான் துரையப்பா இல்லத்துள் விழுந்து கௌஸ் கப்ரின் ஆகவும் வந்தேன் என்பது தனிக்கதை. விசயத்துக்கு வருகிறேன்.

எனது முதலாவது போட்டிக்காக நான் இரண்டுமூன்றுநாட்கள் உணர்ச்சிக்கொந்தளிப்பில் நித்திரையில்லாது, பசியெடுக்காததால் - அன்னதண்ணியில்லாது, அம்மம்மா தந்த ஒன்றல்ல இரண்டு பச்சை முட்டையையும் குடித்துவிட்டு இன்றைக்கு ஒரு கை பார்க்கிறது தான் என்ற கோதாவில் வந்து நின்றேன்.

கீற்ஸில் நூறு, இருநூறுமீற்றர் இரண்டிலும் நான் முதலாவதாக வந்தேன். பைனலில் எங்கட கௌஸ் தெல்லிப்பழை ஐயர் - நந்தகுமாரை விட்டாலும் நான் இரண்டாவதாக வருவேன் என்பது நிச்சயம். ஐயரும் எங்கட கௌஸ்தான் என்றாலும் விட்டுக்கொடுப்பதில்லை என்ற பிடிவாதம் எனக்குள்.

நூறு மீற்றருக்கு நான் தயாராகிறேன். ஆனால் எனக்கு முன்னால் ஒரு இடி வந்து விழுந்தது. எனக்குரியஇலக்கம் தரப்படவில்லை. எனக்குரிய குளுக்கோஸ் தரப்படவில்லை. கப்ரினைக்கேட்டால் அவர் தானும் ஓடுற ஆரவாரத்தில் நிற்கிறாரே தவிர என்னைப்பற்றி அக்கறைகொள்வதாய் இல்லை.

நூறுமீற்றர் ஆரம்பமாகப்போகிறது. விநாயகரட்ணம் மாஸ்ரர் விசில் அல்ல துவக்கு வைத்து வெடித்துக்கொண்டிருக்கிறார். அவர்தான் ஸ்ராட்டர். எனக்கு எதுவும் முடியவில்லை. நண்பர்கள் சகிதம் கோயிலுக்குப்பக்கத்திலுள்ள ஸ்ராட்டிங் பொயின்றில் சுற்றிக்கொண்டிருக்கிறோம். ஆச்சரியம் என்னவென்றால் என்னுடைய பெயரொத்த ஒருவன்



படிப்பகம்

www.padippakam.com



துரையப்பா இல்லத்துக்காக பெனியனில் இலக்கமும் குத்தி ஓட ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவன் கீற்ஸில் ஓடினான். நூறு, இருநூறு இரண்டிலும் ஆறாவதாய் வந்தான். அவனுக்கு வடிவாய் தெரியும் அது தனக்குரிய இலக்கமில்லை என்று. நாங்கள் கிட்டப்போய் அவனை வெருட்ட அவன் மாஸ்ரர் மாருக்குள் ஒளிந்து கொண்டான். கடைசியில் அண்டருவெல்வ் நூறுமீற்றர் ஆரம்பமானது. விநாயகரட்ணமாஸ்ரர் வெடிசுட எனக்காக அவன் ஓடி பைனலிலும் ஆறாவதாய் வந்தான். இருநூறுமீற்றரிலும் அப்படியே ஓடினான்.

எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. நான் கொஸ்ரல் பக்கமுள்ள ரொய்லற்றுக்குள் போய்நின்று அழுதேன். என்னைக்கவனிக்க அந்தப் பெரியபள்ளிக்கூடத்தில் யாருமில்லை. அழுது ஓய்ந்த போது எனக்கு இன்னொரு பெரிய கவலை வந்தது. இதை போய் எப்படி நான் வீட்டில் அம்மம்மாவிடம் சொல்லப் போகிறேன் என்பதுதான்அது.

சரி, போகுது விடுங்கோ.



நானும் அசோக்குமாரும் அதிபரின் வாசலிற்கு வர வந்து நிமிர்ந்தார் கனைக்கி. அதே தோற்றம். அதே சுறுசுறுப்பு. பந்துதான். 37வருடங்கள் பாடசாலை வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவர் கனைக்கி. பாடசாலையில் மாணவராக கல்விகற்று பின் ஓர் சிற்றூழியராக தன்பணியைத்தொடர்ந்தவர். கனைக்கி கோபிக்கும் போதும் ரசிக்கக்கூடியதாக இருக்கும். கிரிக்கற் பிச்சினை செப்பனிடுவது, மைதானத்திற்கு லைன் அடிப்பது, கோல்ப்போஸ்ற் நெற்கட்டுவது எல்லாம் எங்கள் கண்முன்னால் கனைக்கிதான். விளையாட்டு உபகரணங்கள் பாதுகாப்பதிலிருந்து, மாணவர் வரவுப்பத்திரம் காவுவது வரை எல்லாமே எங்கள் காலத்தில் கனைக்கிதான். காலையிலிருந்து மாலைவரை மகாஜனா மைதானம் முழுவதும் அந்தச் சிறிய உருவம் துள்ளித்துள்ளி வலம் வந்தது. விளையாட்டு உபகரணங்கள் காணாமல் போய்விட்டால் யோகரட்ணம் மாஸ்ரரிடம் தப்பமுடியாது. உபகரணங்களைக் கொடுக்காவிட்டால் மாணவர்களுடன் புடுங்குப்பாடு. கனைக்கி என்ற பந்து எல்லாப்பக்கமும் உதைவாங்கியது. ப்ளீஸ் ப்ளீஸ் இஞ்ச கொண்டாங்கோடாப்பா என்ற செல்லக்குரல் முப்பது வருடங்கள் கழிந்தும் இன்னும் காதிற்குள் ‘ஙங்’கென்று ரீங்காரமிடுகிறது. மாணவர் குறும்புகள் எல்லை மீறும்போது ஒரு மெல்லிய முறைப்பு. அதற்கு மேல் எதுவுமிராது. அடுத்த நாள் பழையநிலைக்கு வந்துவிடுவார். யாருடனும் கடுஞ்சொல் பேசியோ, கோபித்தோ இருக்கமாட்டார். மகாஜனா நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இம் மகிழ்ச்சியான தருணத்தில் முப்பத்தியேழு வருடங்களுக்கும் மேலாக மகாஜனாவோடு இரண்டறக் கலந்து நிற்கும் கனைக்கி என்று எங்களால் அன்பாக அழைக்கப்பட்ட மரியாதைக்குரிய திரு. கனகேஸ்வரன் அவர்கள் என் நினைவில் பதிந்துபோகிறார்.

- புவனன்
(சுட்டெண் 7377)




மகாஜனாவின் முதலாவது
பெண் ஆசிரியர் திருமதி. பாக்கியம் இராசா
(அம்மா ரீச்சர்)



படிப்பகம்

www.padippakam.com





பா. வை. ஜெயபாலன்

# மறைவில் நின்று இயங்கிய மகாஜனாவின் தோன்றாத் துணைகள்

மகாஜனா இந்த விதமாய் எழும்பிக்கொண்டிருந்த அந்த நாட்களை எண்ணிப் பார்கின்றேன். பெருமைக்குரிய மகாஜனா வளர்ச்சிக்குப் பெரும் பங்கை ஆற்றிய தோன்றாத் துணைகளாக நின்ற சிற்றூழியர்கள் சிலரின் தோற்றம் என் நினைவில் நிழலாடுகிறது.

உச்சியில் முடித்த குச்சிக் குடுமியும் கூனல் முதுகுமாக வெள்ளை படர்ந்த வாய் வெற்றிலைச் சாற்றால் நிறைந்திருக்க, அரைக் காற்சட்டை, ரீ சேட்டுடன் எந்தநேரமும் விளக்குமாறும் கையுமாக மகாஜனாவை சுற்றி வலம் வரும் பெர்ணான்டோ. சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் மகாஜனாவுடன் இணைந்திருந்த சிற்றூழியர். அறுபதுகளின் ஆரம்ப நாட்களில் மாரிகாலத்தில் மகாஜனா வெள்ளத்தால் முட்டி நிற்கும். அது என் ஆரம்ப கல்விக்காலம். அந்த நாட்களில் வகுப்பறை தோறும் நாய் எச்சங்களையும் மாணவரின் மிச்சங்களையும் கூசாமல் கூட்டி நிற்கும் அந்தக்கூனல் கிழவன், அதிபர் முதல் சிறுபிள்ளை வரை, எல்லோருக்கும் பெர்ணான்டோதான்.

மகாஜனா மைதானம் பெரும் வேலைத்திட்டத்துடன் மண் நிரப்பி மேடாக்கப்பட்ட காலம். மைதானத்தில் வரிசை வரிசையாக புல் நட்டு மைதானம் அடங்கிலும் தண்ணீர்க்குழாய் பொருத்தி அதை பச்சைப் பசேலாக்க அதிபர் கங்கணம் கட்டி நின்ற காலம். காற்சட்டை, ரீசேட் சகிதம் கருமை நிறமும் பெரிய வண்டியுமாக பச்சைப்படுத்த பயன்பட்டு, பாடுபட்டுக் கொண்டிருந்த (Ground Boy) கிருஷ்ணபிள்ளை. இவரும் இரு தாசாப்தங்களுக்கு மேல் நீடித்த ஊழியர். சனி, ஞாயிறு என்று விடுமுறைகளே இல்லாமல் முழுமையாக கிரிக்கெட், கால்பந்தாட்டம் முதல் எல்லா விளையாட்டுகளுக்கும் Sports Room பொறுப்பாளியாக நின்று ஓடித்திரியும் அந்த உருவம். எங்கேனும் மகாஜனாவுக்கு ஒரு தோல்வியென்றால் குமுறி அழும் அந்த உழைப்பாளி, மாணவர்களிடையே மிகப் பரீட்சயமானவர்.

இந்தக் காலத்தில் எடுபிடி வேலைகள் எல்லாவற்றையும் முழுமனதோடு முழுமைப்படுத்திய இரட்டையர்கள் தம்பு - இளையவி. பருமனும் குள்ளமுமான தோற்றத்துடன் சாரம் பெனியனுடன் காட்சி தருபவர் தம்பு. நீண்ட காலம் மகாஜனாவுடன் தன்னை நிலை நிறுத்தியவர் இளையவி. கருமை நிறமும் வழுக்கைத் தலையும் ஒல்லியான உடம்புமாக சண்டிக்கட்டு சாரத்துடனும் துண்டுடனும் காணப்படுபவர் இவர். பல வகுப்பறைகளையும் பரந்த மைதானத்தையும் கொண்ட மகாஜனாவில் இவர்கள் இருவருக்கும் எப்பொழுதும் வேலை இருந்து கொண்டே இருக்கும். இட்ட வேலைகளை இனிய முகத்துடன் முடிக்கும் பணியாளர்கள் இவர்கள்.

வகுப்பறைகள்தோறும் வரவு இடாப்புகளுடன் காலை வேளைகளில் வலம் வரும் பியோன், தம்பையா. வேட்டி சேட்டுடன் கலகலப்பான கதையுமாக காட்சிதரும் ஒல்லியான தோற்றத்தவர். மகாஜனாவில் இவர் காராளசிங்கத்தின் வழித்தோன்றல். சங்கீதத்திற்கு இருந்த மும்மூர்த்திகள் போல Science Lab என்ற விஞ்ஞான கூடத்து உதவியாளராகப் பணியாற்றிய மும்மூர்த்திகள் பஞ்சாட்சரம் - சுந்தரமூர்த்தி - சிவபாதம் ஆகியோர். வெளிப்பார்வைக்கு முரடராக தெரிந்தாலும் பஞ்சாட்சரம் மென்மையானவர். ஆனால் கடும் உழைப்பாளி. விலங்கியல் மாணவர் தேவையை தமது சேவை என்று கருதி தவளைகளையும், எலிகளையும் கொன்று குவிப்பவர். சந்தனப் பொட்டும் விபூதியுமாக காட்சிதந்து கடமையுணர்வும், கடவுள் பற்றும் நிறைந்தவர் சுந்தரமூர்த்தி. மாணவர்களின் நண்பர். சிரித்தால் எங்கே மாணவர்கள் தோளில் ஏறிவிடுவார்களோ என்ற பயத்தில் வெளியே மழைகால மேகம்போல முகமும், உள்ளே பஞ்சு போன்ற வெள்ளை



படிப்பகம்


www.padippakam.com

உள்ளமும் கொண்டவர் சிவபாதம். பௌதீக பாடத்தின் ஐதீகம் நன்கறிந்தவர். விஞ்ஞான கூடத்தைப் பல்லாண்டு நிரப்பி நின்று பணிவிடை செய்தவர்கள் இந்த மூவர்.

மாணவர்கள் பரீட்சைக் காலங்களில் சுட்டெண் பெற சந்தித்தே ஆக வேண்டியவர் 'கண்மணிக்கிளாக்கர்' எனப்படும் S.K.தம்பி. கந்தோர் மூலையில் மூக்குக் கண்ணாடியோடு வரவு செலவு கோவைகளில் மூழ்கிக் கிடக்கும் இவர் பின்பு விடுதி பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். செல்வி இராசையா இவர் இடத்தை பின் நிரப்பியவர். காரியாலயத்தின் இன்னொரு மூலையில் கறுப்பு பிறேம் போட்ட மூக்குக் கண்ணாடியோடு வெள்ளை வேட்டி சேட்டுடன் காட்சி தருபவர் நடேசுக் கிளாக்கர். சிவபெருமானுக்கு நந்திபோல அதிபருக்கு இவர் P.A.

பல மகாஜனன்களின் நெஞ்சங்களில் உன்னதமான இடத்தில் ஒளிர்பவர் ரீபியர் என அன்போடு அழைக்கப்படும் திரு. ரீ. பீ. பத்மநாதன். நூலகப் பொறுப்பாளராகக் கடமையை ஆரம்பித்து கால் பந்தாட்ட பயிற்சியாளராகவும் இயங்கி இத்துறையில் மகாஜனாவைப் புகழின் உச்சிக்கு இட்டுச்சென்றவர். ஹொக்கியையும் ஆரம்பித்து ஒளிர வைத்த பயிற்சியாளர். மாணவர்களோடு ஒருவனாக விளையாட்டு வீரர் தோற்றத்தில் மாலைநேரம் மைதானத்தில் காணப்படும் இவர் மறக்க முடியாத ஒருவர்.

'டேப்பேர்' கிருஷ்ணமூர்த்தி என்றே பெயர் எடுத்துக் கொண்டவர் மகாஜனா புத்தகசாலைப் பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி. பெற்றோர் ஆசிரியர் இயக்கிய புத்தக சாலையை நீண்ட காலம் நிர்வகித்தவர். புத்தகக் கடையருகே இருந்த மகாஜனா சிற்றுண்டிச்சாலையை நிர்வகித்தவர் 'கன்ரீன்' சங்கரப்பிள்ளை. எல்லா மாணவர்களுக்கும் மிகவும் பரீட்சயமானவர். இவரின் போண்டா பாடசாலை ஸ்பெசல். தனது வீட்டையே மகாஜனா மீது கொண்ட அன்பால் கல்லூரி முன்னால் அமைத்து விட்டவர் என்று எண்ணத் தோன்றும்.



கல்லூரியின் சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் ஆலயத்தை எண்ணும் போது ராசா குருக்கள் கண்ணில் நிற்பார். அநேக ஆண்டுகள் இவர் அந்த ஆலய அர்ச்சகர். காலை நேர பூசை முடிவில் எல்லா மாணவர் கைகளிலும் விபூதி சொரிபவர். இவர் மகன் இவரின் திருத்தொண்டை இவருக்கு பின் தொடர்ந்தார்.

இத்தனை அன்பு உள்ளங்கள்
நிறைந்த நினைவுகளோடு
மகாஜனாவின் ஆதரவுப்
படையினரும் நினைவில்
எழுவார்கள். அயலவர்,
அனுதாபிகள்,
பழையமாணவர்கள், பெற்றோர்
என்று பல பிரிவில் அடங்கும்
படையினர் இவர்கள். எங்கு
எந்த போட்டி நடந்தாலும் அங்கு
மகாஜனா கொடியோடு நின்று
மகாஜனாவின் அணி போடும்
ஒவ்வொரு கோல்களுக்கும்
ஆனந்த கூத்தாடுகின்ற....
ஆத்திரப்படும் எதிரணியினரால்
இடையிடை கல்லெறியும்
சைக்கள் செயின் அடியும் பட்டு
இரத்தம் சிந்துகின்ற ....
மகாஜனாவின் வெற்றியில்
நம்பிக்கையோடு, மாலைகளும்
வெடிகளுமாக, வரவேற்க
மேளத்துக்கும் ஏற்பாடு செய்து
செல்லுகின்ற உத்தம காதலர்கள்.
துண்டுப் பிரசுரங்களும் புத்தக
மலரும் வெளியிடும் 'சூட்டிங்
ஸ்டார்' விளையாட்டுக் கழகம்
போன்ற வெளி நிறுவனத்தினரும்
இந்தப் பெரும் படையில்
அடங்குவர்.

அதிபர் ஆசிரியர்கள் போல
மகாஜனாவின் வளர்ச்சிக்கும்
தோன்றாத் துணையாக நின்று
பங்காற்றிய இந்த
சிற்றூழியர்கள், அயலவர்,
ஆதரவாளர்களை 'எங்கடை
பள்ளிக்கூடம்' என்ற
உணர்வோடு வியாபகமான
மகாஜனா குடும்பத்தில் விளங்கி
நின்ற இந்த மகாஜனா
மைந்தர்களை இன்று இங்கிருந்து
எண்ணும் போது அந்த
நினைவே இனிக்கிறது
அல்லவா?



படிப்பகம்

www.padippakam.com



● க. முகுந்தன்

# நினைவில் மலரும் அந்த நாட்கள் மகாஜனாக் கல்லூரியும் நானும்

பயணம் பயணம் பயணம் .....................
பத்துமாத சித்திரமொன்று ஜனனம்
அது எந்தனை நாளோ எங்கெங்கேயோ பயணம்
பயணம் பயணம் பயணம்
ஆரம்பம் பள்ளிக்கு பயணம்
பின்பு அடுத்தது ஆசையின் பயணம் .....................

என்ற வாலியின் வரிகளுக்கு உயிர்கொடுத்த எம்எஸ்வியின் குரலுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

எமக்கான வாழ்வுப் பயணத்தில், பல்வேறு சந்திகளில் சந்திப்பதும், பின் எமக்கான பாதைகளில் தனித்தோ அல்லது சிலருடனோ தொடர்வதும் என மீளவும் மீளவும் சந்திகளில் கலந்து எமக்கான பாதையில் வேறு சிலருடனுமாகத் தொடர்ந்து, இன்று புலம்பெயர்ந்தவர்களாய் பிரான்சில் வதியும் பயணத்தில் இருக்கிறோம்.

1992 கடைசியில், முன்னிரவு இருட்டில் இந்தப் பிரான்சுக்கு நான் வந்திறங்கிய முதல் நாள் மறக்கவே முடியாததொரு நாள். பாரீசில், இன்முகத்துடன் என்னை வரவேற்று தனது அறையிலிருந்த ஒரே கட்டிலில் என்னைத் தூங்கவிட்டு அந்த அறையின் ஓரத்தில் துண்டு விரித்து உறங்கிய அவரை நான் முன்பு அறிந்தே இருக்கவில்லை. என் வார்த்தைகளிலான நன்றியை மட்டும் பெற்றுக்கொண்டவர் தன்னை ஓசை மனோ என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். மனவெண்ணங்களால் அலைமோதிய அந்த இரவு என்னால் தூங்க முடியாதே கழிந்தது. நேசம்மிக அன்பாகப் பேசிய அவருடன் உரையாடுவதும், அலைமோதும் எண்ணங்களால் அள்ளுண்டு போவதும் மீளவும் அவருடன் உரையாடுவதும் பின்பு உறங்கிப்போன அவரைப் பார்த்தவாறு நினைவுகளில் மூழ்கியவனாய் புரண்டு புரண்டு படுத்து உறங்கிப்போனேன். அந்த முன்பின் தெரியாதவர் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவன் எனத் தெரிந்தபோது மனதில் ஒரு துள்ளல். பிரான்சில் வந்த சந்திப்புப் புள்ளியில் மீண்டும் மகாஜனா வருமென நான் நினைத்தே இருக்கவில்லை. இவ்வகையான நிகழ்வுகளினால்தானே வாழ்க்கைப் பயணத்தில் சுவாரசியங்கள் கிடைக்கின்றன. இவ்வாறாக நினைக்கையில், உலகெங்கும் நிகழும் மகாஜனாவின் 100வது ஆண்டுவிழா விதவிதமான சங்கமிப்புக்களாலான தோரணங்களாகத்தான் இருக்கும்......

70களின் ஆரம்பத்தில் நான் மகாஜனாக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்பு மாணவனாக உள்நுழையும் முன்னரே இக்கல்லூரி தொடர்பாக அறிந்திருந்தேன். எனது அண்ணா தனது பதினொராவது வயதில் 6-ம் வகுப்பில் இணைந்து ஐந்தாண்டுகளாக இங்குள்ள விடுதியில் தங்கிப்படிப்பவராக இருந்தார். அந்தக்காலத்தில், இவர் கலங்கியவாறு எமது வீட்டைவிட்டுப் புறப்படுவதும், விடுதியின் இரும்புக் கம்பிக் கதவுகளுக்குள் கதறி அழுதவாறு பிரியாவிடை கொடுப்பதையும் என் சிறுவயது முதல் அப்பாவுக்கு பக்கத்திலிருந்து பார்த்துத் திணறியிருக்கிறேன். அப்போது எனது அப்பாவின் முகத்தில் எந்தத் துயரும் தெரிந்ததில்லை. நான் அறிந்து கரம்பன் கிராமத்திலிருந்து மகாஜனாவுக்கு கல்வி கற்க வந்த முதல் மாணவன் எனது அண்ணாவாகத்தான் இருக்கும்.

காலத்தின் ஓட்டத்தில் அண்ணாவும் தெல்லிப்பழை மகாஜனாவுடன் இயைந்து சங்கமமாகியதானது எனது நுழைவுக்கு வழி கோலியது. எனது கிராமமான கரம்பனில் அமைந்த சண்முகநாத மகா வித்தியாலயத்தில் 8-ம் வகுப்பு வரை துடிப்பான 'ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை' மாணவன். காலில் செருப்புப் போடாமலேயே பள்ளிக்குப் போகும் கிராமத்து மாணவன். இப்படியாக ஊர்க்குருவியாக இருந்த எனக்கு திடுமென எனது தந்தையால் ஏற்படுத்தப்பட்ட இடமாற்றமாக மகாஜனாவுக்கு வந்திறங்கியதானது வேறொரு தளத்தில் வேறொரு உலக சஞ்சாரமாகியதை எப்படித்தான் என்னால் மறக்க முடியும்

பதின்ம வயதுப் பிராயம் ஒவ்வொருவர் வாழ்விலும் சுவாரசியங்களைக் காவிச் செல்வதாகவே இருந்திருக்கும். குடும்பத்தில் குழந்தையாகப் பிறந்து, அன்பின் அரவணைப்பால் குடும்ப உறவினனாகி வளர்ந்தாலும்,



படிப்பகம்

www.padippakam.com

வீட்டின் வெளியே கிராமத்தில் கிடைக்கும் நட்பும், முதன்முதல் நுழையும் ஆரம்பப்பாடசாலையில் கிடைக்கும் நட்பும்தான் எமக்கெல்லோருக்கும் சமூகம் தொடர்பான முதல் தொடுகையைத் தருகிறது. சாதாரணமாக நிகழும் இத்தகைய தொடுகைகளும் அதன் நீட்சியில் கிளம்பும் மனப் பரிவலைகளும் உருவகிக்கும் மனமண்டலத்தில்தான் மானிடம் பிறக்கிறது, சமூகப் பிரக்ஞைக்கான அத்திவாரம் இடப்படுகிறது.

ஒருகாலகட்டத்தின் நினைவுகளைப் பதிவாக்கும்போது அக்காலகட்டத்தில் நம் மனவெளியில் நிகழ்ந்த பண்பியல் மாற்றங்களையும் தாக்கங்களையும் கூறல் சிறந்ததாக இருக்கும். பரிசோதனைக்கூடத்தில் பௌதிகம், இரசாயனம் நிறுவிப்படித்ததுபோல் இல்லாமல் மனித மனவெளியில் அவரவரால் உய்த்து உணரும் நிலைசார்ந்தது மனோவியல். விலங்குகளில் இருந்து மனிதரைப் பிரிக்கும் 'மனோவியல்' எனக்குறிப்பிடப்படும் இத்துறையை நாம் கற்ற பாடசாலையில் ஒரு பாடமாக அப்போது கற்கவில்லைதான். ஆனாலும் சுயநினைவுகளுடன் வாழ்வு என்ற பாத்திரத்தில் இந்தப் பூமியில் நடமாடும் வரையில் கற்றும், கற்றுக்கொண்டும், கற்றுணர்ந்து எதிர்கொள்ளலுடனும் படித்துக்கொண்டே இருப்பதை யாரால்தான் மறுக்க முடியும்.

60களின் கடைசி..... அது எனது விடலைப் பருவம். காலை எழுந்ததும் வீட்டில் வானொலி இயங்கத் தொடங்கிவிடும். செய்திகள், பாடல்கள், அறிப்புகள் எனவாக பொங்கும் பூம்புனல் கேட்டதும் பாடசாலை செல்லும் நாளாந்த வழமை. வானொலியை அருகில் இருந்துதான் கேட்க வேண்டுமென்பதில்லை. வானொலி கேட்டுக் கொண்டே செய்யவேண்டிய பணிகளையும் தொடரலாம் என்பதாலோ என்னவோ பெற்றோர் இதைத் தவறாக அப்போது சொன்னதில்லை. அப்போது எமக்கான உலகத் தொடர்பை செவி வழியாகத் தந்ததில் வானொலி முக்கியமானதாக இருந்தது. அதுவும் இலங்கை வானொலி முக்கிய பங்காற்றியது. கிரிக்கட் விளையாட்டை விபரண வர்ணனையாகக் கேட்டு இரசித்தவர்கள் எங்களில் எத்தனையோ பேர். இவ்வேளையில் சந்திர மண்டலத்திற்குப் போன ஆம்ஸ்ரோங்கின் செயலை வர்ணித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை யாராலும் மறக்கவேமுடியாது. அவ்வையார் பாக்குரல் கதை கேட்டு நிலாச் சோறு சாப்பிட்ட விடலைகளாக இருந்த எமக்கு ஆம்ஸ்ரோங் அவ்வையாரைக் கண்டதான செய்தி ஏதும் வராத ஆதங்கத்தோடு பெரியவர்களையும் ஆசிரியர்களையும் புடுங்கி யெடுத்ததை மறக்கத்தான் முடியுமா? மறைந்த அறிஞர் அண்ணாவுக்காக நடந்த ஊர்வலத்தை செய்தி வர்ணனையாக கலங்கிக் கேட்ட அப்பாக்களோடு இலயித்ததை நினைக்கவே ஆச்சரியமாக இருக்கிறது. விளையாட்டு வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருந்த எமக்கு விஞ்ஞானத்தின் உயர்வையும், நாடு கடந்த தமிழ் மொழி சார்ந்த உணர்வையும் குக்கிராமங்களிலும் கொண்டு வந்து சேர்த்ததில் வானொலிக்குப் பிரதான பங்குண்டு. இதன் செய்திகள் வாயிலாகவே அப்போதெல்லாம் வேறு பாடசாலைகள் பற்றி போகிற போக்கில் விளையாட்டாக அறிந்திருக்கிறோம்.

இலங்கையின் வடக்கே கிடக்கும் தீவுக்கூட்டங்களில் ஒன்றின் ஓரமாக அமைந்தது கரம்பன் கிராமம். முறுக்கேறிய பனை வளவுகளுடன் கரிசல் மண்ணைக்கொண்ட இக்கிராமத்தில் ஆறுமாத காலம் மட்டும்தான் விவசாயம் செய்யமுடியும். வானை நம்பிய கிணற்று நீரை நாடியிருக்கும் மண்ணில் தேங்கிக் கிடக்கும் நீர் வற்றி வருடத்தில் மூன்று மாதங்களாவது உயிர்வாழ்வுக்காக நீர் தேடிப் பயணிக்கும் வாழ்வைக் கொண்டது எமது வாழ்வு. தெல்லிப்பழை இதற்கு நேர் எதிரான கிராமம். மிகவும் ஆழமான கிணறுகளைக் கொண்டதும் கிணற்றுக்குள்ளேயே தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு வருடம் முழுவதும் விவசாயம் செய்யும் செம்மண்ணைக் கொண்ட கிராமம். தண்டுகளெங்கும் காய்த்துக் குலுங்கும் பலா மரங்களின் அழகை இங்குதான் நான் முதன் முதலில் கண்டேன். அழகான வெற்றிலைத் தோட்டங்களையும், கீரை வயல்களையும், காய்கறித் தோட்டங்களையும் காணுற்ற பசுமை இன்றும் நினைவோடைப் படங்களாகி மூளையின் நினைவுத் திரையில் அழகாகப் பளீரிடுகின்றன. எனது கிராமத்தில் பிரதான பணப் பயிராக புகையிலையும், மிளகாயும், வெங்காயமும் முதன்மை வகித்தன. சிறு தோட்டங்களாகத்தான் மரக்கறி மற்றும் வாழை எங்கும் பயிரிடப்பட்டிருக்கும். அந்தக் காலத்தில் என் வீட்டைச் சுற்றியிருந்த வயல்களில் மாரி கால நெற்பயிற்செய்கை இருந்தது. பின்னர் இது இல்லாது போய்விட்டிருந்தது.

புதியதாக சூட்கேஸ், ரங்குப்பெட்டி வாங்கி தடல்புடலாக ஏற்பாடுகளை அம்மா செய்தார். எனக்கு அண்ணனைப்போல அழுகை வராததால் அம்மா தென்பாக இருந்தார் போலும். நான் எதையுமே பெரிதாக நினைக்கவில்லை. வாராந்தம் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமென பெரிய பாடம் எடுத்தார். அடிக்கடி "கவனமாக இரு" என்று சொன்னது மட்டும்தான் ஏனோ ஞாபகத்தில் இருக்கு. ஏனென்றால் என்னத்துக்கு கவனமாக இருக்கிறதென்று அப்போது எனக்குத் தெரியாது. கரம்பனை விட்டுக் கிளம்பிய முதல் நாள் இரவு அப்பா என்னை வடலியடைப்பு வீட்டில் விட்டு தானும் தங்கி, அடுத்த நாள் கல்லூரிக்கு அழைத்து வந்து விட்டுச் சென்று விட்டார். அப்பா போனதும்தான் தனிமை என்றால் என்ன என்பது புரியத் தொடங்கியது. இதுதான் என் வாழ்வில் வீட்டைவிட்டுப் பிரிந்த முதலாவது பிரிகை. ஏதோ எழுத முடியாத உணர்ச்சிகளால் கௌவிப்பிடிக்கப்பட்ட வனானேன். அந்த வீட்டில் இருந்தவர்களெல்லோருமே புதியவர்கள். சத்தமாக அழுதால் என்ன நினைப்பார்களோ என அஞ்சி வெதும்பி அழுதது நினைவில் உறைகிறது. எப்படியோ தூங்கி எழுந்து காரில் கல்லூரிக்குள் செல்லவும் பழகியாயிற்று.

சுற்றி வர விவசாயத் தோட்டங்களின் மத்தியில் பெரும் சுவர்களுக்குள் செவ்வகக் கட்டிடத் தொகுதியையுடைய பிரமாண்டமான மகாஜனாக் கல்லூரிக்குள் அங்குமிங்கும் பார்த்து கிலேசித்தவாறே நுழைந்த முதல் நாளை இலகுவில் மறக்கமுடியாது. அண்ணா கூடவே இருந்தது சற்று தெம்பைத் தந்திருந்தது. இங்கு நான் மாணவனாக வருவது பற்றி கனவு கூடக் கண்டதில்லை. கட்டிடத் தொகுதியின் நடுவே அழகான புற்தரை மைதானம். நடுவில் கிறிக்கற் ஆடு களம். அங்கே கட்டிடத் தொகுதியின் நடுவில் ஒரு திறந்தவெளி அரங்கம். மைதான மூலையில் ஒரு கோவில்.



படிப்பகம்

www.padippakam.com

முன் முகப்பு கட்டடித்தின் மேல் மாடியில் அழகானதொரு உள்ளரங்கம். இதற்கு நேர் எதிர்ப் பக்கத்தில் மைதானத்தைத் தாண்டி சிறிய நுழைவாசலுடனான மாணவர் விடுதி. இந்த விடுதிக்குப் பக்கத்திலான வகுப்பறையொன்றில்தான் எனக்கான இடம் கிடைத்திருந்தது. வகுப்பிலிருந்தவர்கள் அனைவருமே புதியவர்கள். யாரோடு பேசுவது? எப்படியெல்லாம் நடந்து கொள்வது? எந்த இருக்கையில் இருப்பது?... எனவாகச் சஞ்சலித்துக் கொண்டிருந்த எனக்கு எப்படா இடைவேளை வரும் அண்ணாவைப் பார்ப்பதற்கு என்றே இருந்தது.

முதலாம் ஆண்டு எனக்கு விடுதியில் தங்கியிருக்க அனுமதி கிடைக்காததால் எனது தந்தையின் நண்பர் வீட்டில் இருந்து தினமும் வந்து போகும் மாணவனாகினேன். இந்த வீடு பண்டத்தரிப்பு நகரில் வடலியடைப்பு என்றதொரு கிராமத்தில் இருந்தது. இக்கிராமத்திலிருந்து நாள்தோறும் காராளி என்பவரின் காரில் பள்ளிப் பாடப் பொதியுடன் மதிய உணவையும் சுமந்தவாறு பயணிப்பவர்களில் நானுமொருவனாக இருந்தேன். இது எனக்கானதொரு புத்தம் புதிய அனுபவமாக இருந்தது. நாளாந்தம் பண்டத் தரிப்புசெல்லும் பிரதான வீதியல் குறித்த நேரத்தில் காராளியின் காருக்காகக் காத்திருக்க வேண்டும். அதேபோல் மாலையில் மகாஜனாவின் முகப்புக்கு முன்னால் இருக்கும் பிரசித்தி பெற்ற தேனீர்க் கடைக்குப் பக்கத்தில் காராளியின் காரை இனங்கண்டு ஏறிக் கொள்ள வேண்டும். இதெல்லாம் எனக்கு முன்னர் எப்போதுமே அறிந்திராத புத்தம் புது அனுபவங்களாக இருந்தன.

அப்பாவின் நண்பர் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்தார். விடுமுறைக்கு மட்டுமே வீட்டிற்கு வருவார். அப்போதெல்லாம் தொலைபேசி வசதிகள் இருந்ததில்லை. ஆனாலும் அவர் வரும் நேரம் அறிந்து சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு கார் பிடித்து செல்லும் வீட்டாரோடு நானும் செல்வேன். இங்குதான் முதன் முதலில் அசையும் புகையிரதத்தையும் தண்டவாளமெனப்படும் இரும்புப் பாதையையும் காணுற்றேன். சிறுபிராயத்தில் நான் அப்பா-அம்மாவோடு பதுளையில் வாழ்ந்திருந்தாலும் எனது சுய அறிவுக்கெட்டிய பதிவாக புகையிரதம் அமைந்தது இங்கேதான். எனது குடும்பத்திற்கு வெளியில் இன்னொருவர் வீட்டில் நானும் ஒருத்தனாகி வாழ முடிந்ததை இங்குதான் பெற்றேன். அவர்களை அப்பா அம்மா எனவாகவே அழைத்தேன்.

இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள். இருவரும் பெரியவர்கள். பெரியக்கா சிவாஜி பிரியை, சின்னக்கா எம்ஜிஆர் பிரியை இதனால் அடிக்கடி இவர்களுக்குள் சண்டைவரும். எனக்கு ஒன்றுமாக விளங்காது. சில சமயங்களில் கோவித்துக் கொண்டு சாப்பிடாமலும் இருப்பார்கள். இச்சமயங்களில் அவர்களின் அம்மாவோடு நானும் சமாதானம் செய்யப்போவேன். இதிலிருந்து நான் யார் பக்கம் என்ற பிரச்சனை தொடங்கிவிட்டது. எனக்கு சிவாஜியும் தெரியாது எம்ஜி ஆரும் தெரியாது. கரம்பனுக்கான நகரான ஊர்காவற்றுறையில் ஒரே ஒரு தியேட்டர்தான் இருந்தது. அங்கே பழைய படங்கள்தான் ஓடும். இதில் நான் பார்த்தது புராண இதிகாசக் கதைப்படங்கள் மட்டும்தான். இங்கே பண்டத்தரிப்பில் விடுமுறை நாட்களில் கார் பிடித்து யாழ்ப்பாணம் போய் படம் பார்க்கும் வழக்கத்தை இந்தக் குடும்பத்தினர் கொண்டிருந்ததால் அவர்களுடன் நானும் ஒருவனானேன். மாதம் ஒரு தடவை அல்லது இரு தடவை எனவாகப் பார்க்கும் திரைக் காட்சிகள் எனது மூளைக்குள்ளும் சலனத்தை உண்டாக்கியது. இதனால் வீட்டில் நடக்கும் தமிழ்த்திரை இரசிகர் வாக்குவாதத்தில் நீண்ட நாட்களுக்கு என்னால் நடுநிலை வகிக்க முடியவில்லை. எதையும் அறியாதவனாக இருந்த நான் படிப்படியாக சிவாஜி ரசிகனாகத் தொடங்கியதை இப்போது நினைக்கையிலும் முகத்தில் புன்முறுவல் பூக்கிறது.

நான் மகாஜனாவில் படித்தபோதுதான் வைரவிழா பிரமாண்டமாக நடைபெற்றது. இன்று நூற்றாண்டுவிழா ஆக நாற்பதாண்டுகள் ஓடிக் கரைந்தே விட்டிருக்கின்றன. நினைக்கவே ஆச்சரியமாக இருக்கிறது. இந்த விழாவில் நடந்த கண்காட்சி அரங்கத்தில் எனது அண்ணாவும் தனது தொழில்நுட்பத்திலான காட்சியையும் வைத்திருந்தான். இது கல்லூரியின் பிரதான நுழைவாசலுக்கு அருகாமையில் இடது பக்கமாக இருந்த முதல் கட்டிடத் தொகுதியில் இருந்தது. தண்ணீரில் செல்லும் சிறிய மோட்டார் படகுகளை அவன் இயக்கச் செய்திருந்தான். இப்படியானதொரு கண்காட்சியை இதன் முன் நான் எங்குமே பார்த்திருக்கவில்லை. அப்போதைய அதிபர் ஜெயரெத்தினம். கண்டிப்பிற்குப் பெயர் பெற்றவர். அந்தக் காலகட்டத்தில் அதிபர்களின் ஆளுமையை வைத்தே கல்லூரிகள் பெரிதும் மதிக்கப்பட்டன. சிறந்த அதிபர்களைக் கண்டால் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் ஒரு வித பயம்கலந்த மரியாதையை வழங்குவதை நம்மில் பலரும் நேரிலேயே பார்த்திருக்கிறோம். எமது பெற்றோர் நல்லொழுக்கத்திற்கே முன்னுரியை வழங்கியதால், மாணவர் பிராயத்தில் நல்ல கட்டுப்பாடான பாடசாலைகளில் படித்தால் சிறந்த பிள்ளையாக தானாகவே வருமென பெரிதும் நம்பினார்கள். இதனால்தான் யாழ் குடாவிலுள்ள குறிப்பிடத் தகுந்த கல்லூரிகள் பிரசித்தி பெற்றிருந்தன.

எனது கிராமப் பள்ளியில் நீளம் பாய்தல், உயரம் பாய்தல், ஓட்டம் இவற்றிலெல்லாம் பரிசுகள் பெற்றிருந்தவனாயினும் கல்லூரியின் நுழைவு பெரிது-சிறிது வெளிப்படுத்தும் இருகோடு தத்துவத்தைப் புகட்டியது. பென்னாம்பெரிய விளையாட்டாளர்களைக் கண்டு மலைத்துப்போனேன். தடியூன்றிப் பாய்தல், 'கொக்கி', சிவப்பு நிறத் தோற்பந்திலான கிறிக்கற், பூப்பந்து போன்ற புதியதான விளையாட்டுகள் பற்றி அறியத் தொடங்கியதும் இங்கேதான். காற்பந்து விளையாட்டுக்காகக் குழுவாகச் செல்வதும், வெற்றியடைந்தால் மேளதாள வரவேற்புடன் வீரர்களை அழைத்துவருவதும், சிறப்புப் பரிசாக வெற்றிக் கேடயங்களை பெற்றால் அடுத்தநாள் விடுமுறையை அதிபர் அறிவிப்பதையும் காணுற்று கிறங்கிப்போனவர்களில் நானும் ஒருவன். இதில் கதாநாயக விளையாட்டு வீரராக அப்போது 'முயல்' இருந்தார். காங்கேசன்துறை-யாழ் பிரதான வீதியில் அமைந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இந்த மகாஜனாக் கல்லூரிக்கும் எப்போதுமே எட்டாப் பொருத்தம். இதற்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் வந்துவிட்டால் ஊரே பிளந்துபோகும். ஆர்ப்பாட்டங்களுக்குப் பஞ்சமே இராது. அறியாப்பருவத்தில் எப்பேர்ப்பட்ட காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு கடந்து வந்திருக்கிறோம். நினைக்கவே மலைப்பாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



அடுத்தவருடம், எனது அண்ணா தொழில்நுட்பப் பயிற்சி மேற்படிப்பு கிடைத்து கொழும்பு செல்ல நான் விடுதிக்குள் நுழைந்து உள்ளக மாணவனாகிறேன். சைவ உணவைக் கொண்ட புத்தம் புதியதான விடுதிவாழ்வு. காலை 5.40ற்கு எழுந்தால் இரவு 10.30 மணி வரையிலும் நிர்ணயிக்கப்பட்ட சீரான ஒழுங்கு வாழ்க்கை. மாறுதலே இல்லாத வாராந்த உணவு முறை (உதாரணமாக புதன் காலையில் புக்கை என்றிருந்தால் ஆண்டு முழுவதும் புதன் காலையில் புக்கைதான் உணவு), பள்ளி வளாகத்தை விட்டு வெளியே செல்ல முடியாத கடும் கட்டுப்பாடு, பகலில் படிக்கும் வகுப்பறைகளிலேயே இரவிலும் மீட்டலுக்காக யாருடனும் கதைக்கக்கூட முடியாத இருப்பு, ஒவ்வொருவருக்கும் தனியான அடையாள இலக்கமிட்டு அதையே அடையாளமாக்கி இனம்காணும் புதிய பொறிமுறை (எனக்கான கட்டில், கோப்பை, தட்டு, வாளி என தனியான எண் குறியீடாக இருக்கும்), நொறுக்குத் தீனி உண்ண முடியாத வெறுமை என்பன எங்களைக் கைதி போலவும் நாளாந்த மாணவர்களை சுதந்திரமானவர்கள் போலவும் இனங்காட்டியது. ஆனால் இந்த இருப்பு புதிய அறிமுகத் தொடுகைகள் கிடைக்கவும் ஒரு குழாமாக இணையவும் வழிகோலியது. தீவுக்கூட்டம் முதல், கிழக்கு மாகாணம், மலையகம் வரையில் பலபிரதேசங்களில் இருந்து வந்துள்ள சக மாணவர்களின் அறிமுகத்தாலும் கூடி வாழ்தலாலும் பேச்சு வழக்கு முறைகளிலிருந்து - உணவுப் பழக்கம் வரையிலான பன்முக அறிதல்கள் பெற்றவராயினோம். மாணவர்களைப் பார்க்கவரும் உறவினர்கள் ஏதாவது தின்பண்டங்களை கொண்டே வருவார்கள். இவை பகிர்ந்துண்ணும் இயல்பான பண்பை எமக்குள் ஏற்படுத்தியிருந்தது. இதனால் எமக்கிடையில் ஒருங்கிணைப்பைத் தந்து மகிழ்வூட்டியது.

இந்தக் காலகட்டத்தில்தான் சேகுவரா சிங்கள இளைஞர் எழுச்சி இலங்கையில் நடைபெற்றிருந்தது. சிங்களமென்றால் என்ன என்று தெரியாதிருந்த பிராயத்தில் இளைஞர்களது எழுச்சி மலைப்பூட்டியது. பலரும் ஆங்காகே குசுகுசுத்த வண்ணமே இருந்தனர். விடுதியில் நிறையவே கதைக்கப்பட்டன. ஆனால் எம்மால் எங்குமே செல்ல முடியாதிருந்தது. இங்கு தான் டாக்டர் கோவூர் பற்றிய அறிதலும் வித்தைகளும் கடவுள் பக்தியும் தொடர்பான தொடக்க அறிமுகமும் கிடைத்தது. இந்த விடுதிக்குள் எத்தனையோ விவாதங்களைக் கேட்டிருப்போம். எத்தனையோ மேடையில்லா நிகழ்த்துகளையும் பார்த்திருப்போம். இதில் ஒன்று நம்மில் பலர் விழுந்து விழுந்து சிரித்துப் பார்த்த 'மங்கோலியாவிலிருந்து சிறப்பு அதிதியின் வருகை' உரையை மொழிபெயர்த்து வழங்கிய மாணவன் தனது நகைச்சுவையால் இன்றும் என் கண் முன்னால் இருக்கிறான். இந்த மொழி பெயர்ப்புக் கலையை வி.பொன்னம்பலம் வாயிலாக மேடைகளில் கேட்டு வளர்ந்த தலைமுறை எங்களுடையது. இதுமட்டுமல்லாது தந்தை செல்வா மகாஜனா திறந்தவெளி அரங்கில் வாயசைத்து ஆற்றிய செய்கை உரையை அமிர்தலிங்கம் உரத்துச் சொல்லியதை வாயைப் பிளந்தவாறு கேட்டிருக்கிறோம். அதைக்கூட அமிர்தலிங்கம் மொழி பெயர்த்துக் கூறியதாகவே கதைத்துக்கொள்ளுவோம்.

அப்போதைய விடுதிப் பொறுப்பாளராக இருந்தவர் பெரிய அல்சேசன் நாயை பிள்ளை போல் வளர்த்து வந்தார். இந்த அல்சேசன் நாயை முதன் முதலில் அதிசயமாக இங்குதான் நான் பார்த்தேன். இவருக்குப் பிள்ளை இல்லாததால்தான் இப்படியாகச் செல்லமாக வளர்க்கிறாரென சக மாணவர்கள் சொல்வார்கள். பின்னொரு நாளில், இந்த நாய் அவரைக் கடித்ததால் அவர் இறந்த செய்தி கேட்டு அரண்டு போனேன்.

வகுப்பில் கிராமத்திலிருந்து வந்து படிக்கும் அப்பிராணியாக நான் இருப்பதை எனது சக மாணவனொருவன் எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறான். அவன் கட்டுவன் கிராமத்தவன். அழகான துடிப்பானவன் கொஞ்சம் குள்ளத் தோற்றமுடையவன். நகைச்சுவையாகப் பேசுவான். பல்வேறு புதினங்களைச் சொல்வான். ஆசிரியரிடம் புத்தகம் வாங்கியதற்காக கொடுப்பதற்கு 7 ரூபாய் வைத்திருந்தேன். 'இக்காசை வெள்ளியன்றுதானே கொடுக்கவேண்டும்,



படிப்பகம்

www.padippakam.com

என்னிடம் தா இதை நான் வெள்ளியன்று திருப்பித் தந்துவிடுவேன்' என்று அவனும் கேட்க நானும் கொடுத்துவிட்டேன். வெள்ளின்று நான் காசைக் கேட்டபோது, 'மச்சான் இப்ப என்னட்ட இல்லை கொஞ்சம் பொறு தந்துடுவன்.' என்று சொல்லிக் கொண்டு ஏதோ யோசித்தவனாக 'உன்னிட்ட இருக்கிற 3 ரூபாயையும் தந்தா கணக்கு 10 ரூபாயாக மட்டமாக இருக்கும் நானும் மறக்காமல் தந்துவிடுவேன்'என்றான். நானும் கொடுத்தே விட்டேன். அதன் பின் எத்தனையோ வெள்ளிகள் தாண்டியும் அந்தக் காசு எனக்குக் கிடைக்கவே இல்லை. பின்னொரு நாளில் யோசித்துப் பார்க்கையில் சிரிப்பாக இருக்கிறது. ஒப்பீட்டளவில் 'வாழ்வியல் சமயோசிதம்' வேறுபட்டிருந்த வளர்ப்பு முறைகளிலேயே நாமிருந்ததை உணர முடிந்தது. பட்டறிவுகளால் கிடைக்கும் பெறுமதி மிக்க அனுபவங்களைப் பெறுவதற்கு நாம் வீட்டிற்கு- கிராமத்திற்கு- பெரிய நகரத்துக்கு- நாட்டிற்கு வெளியில் நடமாடும் அவசியம் நன்கே புலப்படும்.

பயணம் பயணம் பயணம்.............
சந்திப்பு வருவது கண்டு
பலர் சந்திக்கும் இடங்களுமுண்டு
அவர் சொந்தங்களாவதும் உண்டு
அது தொடர்கதை ஆவதுமுண்டு
பயணம் பயணம் பயணம் ...................... (தொடர்ந்தும் எம்.எஸ்.வி முழங்குகிறார்)

இந்த மகாஜனாவுக்கான எனது பயணம் வலிகாமத்தில் நிறைய ஊர்களையும், ஊராரையும் அறிமுகம் செய்தது. கிணற்றுத்தவளையாக இருந்தவன் குளத்துத் தவளையாகி இன்னும் பென்னாம்பெரிய நீர்நிலைகளை அறியும் உலகப் பார்வையை பார்க்கத் திறந்துவிட்டது. பின்னாளில் தொடரப்பட்ட எனது முறைசார் கல்வி வாழ்வில் நட்பின் முக்கியத்துவத்தையும், இதனோடான பயணங்களின் அவசியத்தையும் எவ்வித சங்கோசமில்லாமலும் பிரயோகிக்க வழிகோலியது. இன்று தேசம் கடந்து கண்டம் கடந்த நிலையில், 40 ஆண்டுகள் அனுபவங்களுடன் தொடரப்படும் பண்பாகவும் அமைந்துவிட்டது.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (திருக்குறள் 781)
(நட்புக் கொள்வது போன்ற அரிய செயல் இல்லை. அதுபோல் பாதுகாப்புக்கு ஏற்ற செயலும் வேறொன்றில்லை..)

மனித வாழ்வில் நமக்கென நாமே தெரிவாக்கி நாமே அனுபவித்து, மகிழ்ந்து, பரவசமாகி, நொந்து, துவண்டு...... இன்ன பிறவாக பல்வேறு உணர்ச்சி வலைக்குள் மூழ்கி எழும் அனுவத்தைத் தருவது இந்த 'நட்பு' என்ற மூன்றே எழுத்தில் அடக்கப்பட்ட கடுகுச் சொல். வார்த்தைகளை அளந்துபேசிய, நாவடக்கத்தை வலியுறுத்திய, பயனில்லாதவற்றைத் தவிர்க்கப் பணித்த வள்ளுவர், தனது 136 அதிகாரங்களுடைய குறட் கோவையில் 5 அதிகாரங்களை 'நட்பு' இற்காக ஒதுக்கியிருக்கிறார். திருக்குறளில் வேறொரு தலைப்புக்கும் இந்தளவுக்கு அதிக பதிவு முக்கியத்துவம் தராத திருவள்ளுவரின் கவனங்கொள்ளல் இதனது செயற்திறனை நன்குணர்த்தும்.

இளைஞராவதற்கு முன்னரான பதின்ம வயதானது வகுப்பறை தாண்டியதான பாடங்களையும், அறியும் தேடல்களையும், புரிதல்களையும் கொண்டது. ஒரு மனிதனது சுயம் கட்டமைக்கப்படும் முக்கியமானதொரு காலகட்டம். இத்தகைய பிராயத்தில் எமக்கான ஆளுமை அல்லது எதிர்கால வாழ்வின் இருப்புக்கான பாதைகள் தெரிவாவதோ அல்லது கிடைக்கவோ செய்கின்றன. அதுமட்டுமல்லாது இப்பிராயத்தின் நினைவுகள் ஆழ்மனப் பதிவாகிவிடுகின்றன. இறுக்கமான குடும்பச்சூழல் வேலியைத் தாண்டியதாக அவரவர்களது சுயவிருப்புகளுடன் கிடைக்கும் புதியதான வாழ்வின் நீட்சியில் இனிக்கும் நினைவுகளாக மீள்பாக்கமடையும் நினைவலைகள் இவ்வகையிலானவர்களுடனான தொடர் சந்திப்புகளில் குவியமாகிறது. தன்னியல்பாக இக்குவிய மையங்கள் சமூக அசைவியக்கத்தில் செயலாற்றும் தார்மீக வகிபாகத்தை எடுக்க முனையும்போது அவை இதில் பங்கேற்பவர்களது தனி விருப்ப அடையாளமாகிறது. இந்த யாதார்த்த வெளிப்பாட்டு நிலையில்தான் புலம் பெயர்ந்த சூழலிலும் செயற்படும் பழைய மாணவர் சங்கங்களையும், ஊர்ச்சங்கங்களையும் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது இன்று இருக்கும் 'நான்' யார்? எப்படியாக இந்நிலைக்கு முகிழ்ந்தேன்? என்ற கேள்விகள் அவரவர் சுயத்திற்கான, இருத்தலுக்கான விடைகளைக் கொண்டிருக்கும். இப்படியாக ஒருத்துவமாகும் விடைகளைக் கொண்டோர் பொதுமைப்பட்டு 'நாங்கள்'(நான்+கள் = நாங்கள்) ஆக ஒன்றிணைந்து சமூக அசைவியக்கத்தில் பணியாற்ற விளையும்போது இந்த 'நாங்கள்' இவர்களது தனி அடையாளமாகிறது. செம்மண்ணின் செறிவைப் பிரதிபலிக்கும் கடுமையான பிறவுண் நிறத்திலான 'மகாஜனன்' இவ்வகை அடையாளத்தில் ஒன்றுதான்.

- க. முகுந்தன்

○



படிப்பகம்

www.padippakam.com

# குதிரைக்குக் குளம்கட்டித் தண்ணீர் குடிக்கவைத்த கொஞ்சப் பேர்

- இளவாலை விஜயேந்திரன்

முகம் அறிந்து, அகமும் அறிந்து முன் பின் என் எழுத்தும் அறிந்தவர்கள் தவறாமல் கேட்கும் கேள்வி ஏன் இப்ப எழுதுறேல்லை. எழுதும் பொழுதின் சுகம்போல் எழுதாப் பொழுதிலும் சுகம் இருக்கின்றது மக்காள். பத்மநாப ஐயர், மனோ போன்று என்னைப் பலம் பலவீனத்துடன் அறிந்தவர்கள், எழுதாப் பொழுதிலும் எழுதல் சுகம் என உணரவைக்கிறார்கள். ஒரு நூறு வருடங்கள் கடந்த தலைசிறந்த பாடசாலை ஒன்றில் ஒருகால் நானும் கற்றவன் என்கிற பெருமிதமே எனது சோம்பேறித்தனங்கள், நெருக்கடிகளைத் தாண்டி எழுதவைக்கின்றது. உங்களுக்கு இது சுவை பகர்க்க வேண்டிய அவசியமில்லை.

கடந்த நூற்றாண்டிற் பிறந்தவன் நான். அதற்கு முதல் நூற்றாண்டில் பிறந்தவர் பாவலர். (பாவலர் என்றால் தெரியாதவரா நீங்கள்?) மூடி வைத்துவிட்டு (இந்தப் புத்தகத்தைத்தான்) ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கொஞ்சம் படியுங்கள். பாரதியை ஒத்த ஈழத்துவர் என்று குறிப்பிடப்பட்ட ஒரே ஒருவர் பாவலர் தெ.அ. துரையப்பாப்பிள்ளை அவர்கள்(மகாஜனாவை நிறுவியவர்). அடைப்புக்குறி எங்கே தொடங்குகின்றது, முடிகிறது என்று குழம்ப வேண்டாம். பொழுது போகாவிடில் தொடக்கத்தில் இருந்து திரும்ப வாசியுங்கள்.

நான் எழுத்துத் துறையில் சிறிதளவேனும் ஈடுபட முக்கிய காரணமாய் இருந்தது, நல்ல இலக்கியப் பாரம்பரியம் உள்ள பள்ளியிற் பயின்றதா? இரண்டு தமிழாசிரியர்களின் மகனாய்ப் பிறந்ததா? இவை எல்லாவற்றினதும் கலவையா? எதுவோ, அது போகட்டும்.
எழுதத் தொடங்குமுன்பே இதிகாசங்கள் என்னை மிகக் கவர்ந்த வரலாற்றை விடவும். (இரண்டும் பெயர்கள் தானே என்பர் சிலர்) இதிகாசங்களை காண்டம் காண்டமாய் வாசித்தவர்கள் அவற்றில் தனிச்சுவை இருப்பதை நிச்சயம் ரசிப்பார்கள். ஒவ்வொரு காண்டமும் தனிரசனையுடன் இருப்பதை எனது தமிழாசிரியர்கள் சொல்லித்தந்தது கொஞ்சம் நினைவில் நிற்கின்றது. எழுதத் தொடங்கிய காலத்தில் நானும் காண்டம் காண்டமாய் எதையாவது எழுதவேண்டும் என விரும்பியதுண்டு. அந்நாட்களுக்கு பரிகாரமாய் இன்று நீங்கள் அகப்பட்டீர்கள். நல்லது, வாருங்கள் - இனிக் காண்டம் காண்டமாய்.

## முதலாம்பிள்ளைக் காண்டம்

அம்பலப்பிள்ளை மாஸ்ரரைப் பல்வேறு காரணங்களுக்காக ரசிக்கலாம். (உங்களுக்கு இனிச் சந்தர்ப்பமில்லை அவர் காலமாகிவிட்டார். ஆளும் வெள்ளை, உடுப்பும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை. கோணற்புளியின் பின்னான தகரக்கொட்டில் வகுப்பில் எனது மகாஜனா வாழ்க்கை தொடங்கிய நாளில் எனது வகுப்பாசிரியர் அவர். நமக்குத் தொழில் (தமிழ்) கற்பித்தல் என்று முதல்நாளே தன்னை அறிவித்தவர் அவர். முதல்நாளில் இருந்து எல்லாம் நல்லாத்தானே போய்க்கிட்டிருந்துச்சு என்று போனபிறகு முதல் தவணைப் பரீட்சை வந்தது. பரீட்சைக்கு இன்னொரு பெயர் பிரச்சனை. எனது பிரச்சனை சித்திரப்பாடம். சித்திர ஆசிரியர் எனக்கு உறவினரும் கூட. உறவுக்காக அதிகம் புள்ளிகள் போடுவாரோ? (எனக்குக் கொஞ்சப் புள்ளிகளே அந்தப் பாடத்தில் அதிகம் தான்) தரம் பார்த்துப் புள்ளியிடுவாரோ?
நல்ல கேள்விகள். விடைதான் இல்லை. விடையில்லாத கேள்விக்கு ஒரு விடை கிடைத்தது. சித்திரப் பரீட்சைக்கு போகாமல் விட்டால் பிரச்சனை தீர்ந்தது. பதினொரு பாடப் புள்ளிகளைப் பன்னிரண்டு பாடமாகக் கணக்கிட்டு, பதினொராம் பிள்ளையாக வந்தேன். (கிரி, மரக்கட்டைப்பிரபா, விசாலாட்சி அம்மாள் என்று மேலும் மூன்று பேர் அதேயளவு புள்ளிகள் பெற்று, நால்வர் பதினொராம் பிள்ளையானோம்.)
ஒரு தடவை சரிவந்தால் திரும்பவும் அதைச்செய்ய மனிதஇனம் எவ்வளவு பழக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாம் தவணையும் அதே முயற்சி. ஆறேழு மாதங்களில் என்னை அவதானித்து முடிவுக்கு வந்திருக்கவேண்டும். இம்முறை பதினொரு பாடங்களுடன் இரண்டாம் பிள்ளைக்கு வந்துவிட்டேன். ஆனால் களவு பிடிபட்டுவிட்டது. சித்திர ஆசிரியரிடம் என்னை அனுப்பித் தனிப் பரீட்சை வைத்து, (அதில் எனக்கு 40 புள்ளிகள் எப்படி வந்ததோ தெரியாது) என்னை முதலாம் பிள்ளை என்று



படிப்பகம்

www.padippakam.com

சொல்லவைத்து அழகு பார்த்தவர் அம்பலப்பிள்ளை மாஸ்ரர். புலமைப் பரிசிற் பரீட்சையில் (தமிழ், கணிதம், பொதுஅறிவு) வடமாகாணத்தில் 17வது இடத்தை நான்பெற்றபோது (18 பேரில் 6பேர் மகாஜன மாணவர்கள் - முதலிரு இடங்கள் உட்பட) தனது மாணவன் என்று பெருமிதப்பட்டவர். நல்ல மனிதர்கள் மனதிலிருந்து இலகுவில் நீங்குவதில்லை என்பதை இன்றும் நிரூபிக்கின்றார்.

## தொண்ணூறாம் காண்டம்

எட்டாம் வகுப்பில் நான் டிவிசன் மாற்றப்பட்டேன். பலநதிகள் வந்து சங்கமிக்கும் கடல்போல் பலதிறமைசாலிகள் இருந்த வகுப்பு. முதலாம் பிள்ளை என்பதை நினைத்தே பார்க்க முடியாது. அது பீற்றர் - கணேசமூர்த்திக்குரிய பிரச்சினை. ஆனால் 90 புள்ளிகளுக்கு மேல் ஒரு பாடத்தில் எடுத்தால் றிப்போட்டில் அதற்குத் தனியான சிவப்புப் புள்ளி - சிறப்புக் கௌரவம் கிடைக்கும். புவியியல், கணிதம், தமிழ் என மூன்று பாடங்களில் எனக்கு சிவப்புக் கௌரவம் கிடைத்தது. (ஆகக் குறைந்தால் கறுப்புப் புள்ளி என்று ஒரு திட்டம் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் ஆங்கிலத்திலிருந்து நான் மீண்டிருக்கமுடியாது.) 90 இற்கு மேல் புள்ளிகள் எடுத்தாலும் (தமிழில் கிடைத்த இரண்டாம் இடம் தவிர) ஒருபாடத்திலும் வருட விருதை நிறுவியவர் நினைவுநாளில் பெறமுடியவில்லை(என்ன வகுப்படா இது) வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்தும் பரீட்சையில் (ஆனானப்பட்ட கல்லூரிகளையும் தாண்டி) நாம் 21பேர் முதல் தரத்தில் சித்தியடைய முதன்மைக் காரணம் எங்கள் கணித வகுப்பாசிரியர் திருமதி துரைசாமி அவர்கள். கண்டிப்புப் பாதி - அன்பு பாதி கலந்து செய்த கலவை அவர்.

## பந்தாடு காண்டம்

பந்துக்கு மறுபெயர் ரிபி என்றாலும், ரிபிக்கு மறுபெயர் பந்து என்று சொன்னாலும் அது சாலத் தகும். ஆனானப்பட்ட திறமைசாலிகள் இருந்த பாடசாலைகள் நெருங்கமுடியாத வடமாகாண உதைபந்தாட்ட விருதை எட்டு வருடங்கள் எமது பாடசாலை வைத்திருந்தது என்றால் இரண்டு வருடங்கள் முழு இலங்கைக்குமான சிறந்த அணி என்ற விருதைப் பெற்றது என்றால் அதற்கு ஒரு தனிமனிதர் காரணமென யாரும் நம்பமாட்டார்கள். ஆனால் அதுதான் உண்மை.
எதிரணியின் பலம், பலவீனங்களைச் சரியாய் மதிப்பிட்டு அதற்கேற்ப வியூகம் வகுப்பது, அந்தக் காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத தாக்குதற் திட்டங்களைத் தீட்டுவது, எந்த எதிரணியாயினும் மூச்சுவிட நேரமின்றித் திணறடிப்பது என அவரது ஆற்றல், இந்நாள் வரை நானறிந்த இலங்கைப் பயிற்றுவிப்பாளர்களிடம் காணாதது.
இரு வருடங்கள் உதைபந்தாட்ட (மூன்றாம்) அணியில் அவரின் வழிகாட்டலிற் பயில நேர்ந்தது. எம்மாற் பெரிதாகச் சாதிக்க முடியவில்லை. ஏறத்தாள அதே வீரர்கள் முதந்தடவையாக கொக்கி மூன்றாம் அணி ஏற்படுத்தப்பட்டுச் சுற்றுப்போட்டி நிகழ்ந்தபோது அவரின் வழிகாட்டலில் வடமாகாண வெற்றி வீரர் விருதைப் பெற்றோம்.

## சுத்தத் தமிழ்க் காண்டம்

தமிழில் ஒவ்வொரு எழுத்துக்கும் எத்தனை மாத்திரை (குளிசை இல்லை அப்பனே) என்பதையும், ழ,ல,ள அல்லது ந,ண,ன என்று கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் அகப்படாத வேறுபாடுகள் எவை என்பதையும் அறிய வேண்டிய தருணத்தில் அறியவைத்தவர் என்று கவிஞர் செ. கதிரேசப்பிள்ளையைக் குறிப்பிடலாம். எனக்குத் தெரிந்த தமிழை, எனக்குத் தெரிய வைத்தவர் என்றும் அவரைக் குறிப்பிடலாம். ஒற்றைச்சொல் ஆங்கிலமும், குற்றத் தமிழ்ச் சொல்லும் இல்லாமல் தமிழைத் தமிழாய்க் கற்பிக்கும் தகைமை உள்ள சிலரில் அவரும் ஒருவர். தான் ஒரு கவிஞர் என்று மாணவர்களிடம் ஒருபோதும் சொன்னதில்லை. தனது கவிதை எதையும் கற்பித்ததும் இல்லை. ஒரு கவிதையை அவரது குரலிற் கேட்டால் அது மனதில் ஆணியடிக்கும்.
மாணவர்களை அங்கீகரிப்பதில் ஒரு தனிவகை ஆசிரியர் அவர். திருத்தக் கொண்டுபோன எனது கட்டுரைக் கொப்பியிலிருந்து ஒரு கட்டுரையை ஏனைய வகுப்புகளிற்கு வாசித்துக் காட்டி இப்படித்தான் கட்டுரை எழுதவேண்டும் என்றிருக்கின்றார். எப்படித்தான் கட்டுரை எழுதுறீங்களோ என்று வேறு வகுப்பு மாணவர்கள் பகிடி பண்ணித்தான் எனக்குத் தெரியவந்தது. எனக்குப் பெருமையும், தனக்குப் பெருமிதமும் சேர்த்த அவரிடம் மேலும் சில வருடங்கள் பயில வாய்ப்புக் கிட்டவில்லை. மரங்களை நாட்டுவோம் என்று அவர் எழுதிய பாடலை இன்றும் நினைக்க முடிகிறதென்றால் அவர் கவிஞர். மாங்காய்க்குக் கல்லெறிந்து என்று அவர் கற்பித்த பாடலை மறக்க முடியவில்லையென்றால் அவர் ஆசிரியர். என்னை முன்னிறுத்தாமல் (என்போன்ற) மாணவர்களை ஊக்குவித்து தன்னை தேய்த்துக் கொண்டார் என்றால்....? ஐந்து வருடங்கள் அகில இலங்கையிற் சிறந்த நாடகம் என்று தொடர்ந்த விருதைப் பள்ளிக்குத் தேடித் தந்தவர். தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்ளும் சில சில்லரைகளை நினைக்கையில் அவர் சாதாரண மனிதரல்லர் எனத் தோன்றுகின்றது.

## உயிர்இயற் காண்டம்

இப்போது எப்படியோ தெரியாது. நமது காலத்தில் தமிழ், சமயம், கற்பிப்போரைவிட யாருமே நக்ஷனல் போடுவதில்லை. விதிவிலக்கு - நமக்கு உயிரியல் கற்பித்த மயிலங்கூடலூர் பி. நடராஜன் அவர்கள். அதிலும் ஓர் அற்புத விதிவிலக்கு அவர். படிப்பிப்பது உயிரியல். ஆயினும் அவரது உயிர் தமிழ். ஒரு பிறமொழி வார்த்தையும் கலவாது பேசுவார். யார் கவனமும் சிதற அனுமதியார். பாடசாலையின் மிகுந்த அபிமானி. ஈழத்து இலக்கிய உலகில் அத்தனை பேர்க்கும் அறிமுகமான ஒருவராயினும், தன்னை முன்னே நிறுத்தாத ஒருவர், நிகழ்ச்சித் தொகுப்பில் எனக்கிருந்த ஆர்வத்தை எப்படி அடையாளங் கண்டாரோ, நிகழ்ச்சி நிரல், விளையாட்டிற் பங்குபெறும் மாணவர் பட்டியல் என எல்லாவற்றையும் தந்து ஸ்ராவ் றூம் என்ற ஆசிரியர் அறையில் ஒலிவாங்கியும் தந்து இருத்திவிட்டுப் போய்த் தனது காரியங்களை ஆற்றத் தொடங்கிவிட்டார். இத்தனைக்கும் எனக்குப் பதினைந்து வயது முடியவில்லை. எனது நிகழ்ச்சித்



படிப்பகம்

www.padippakam.com

தொகுப்பு திருப்தியாக இருக்கின்றது என்று இன்று யாராவது கூறினால், அதற்கான விதையை யார் விதைத்தார் என நான் அறிவேன். புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளிகள், விமர்சகர்கள், கல்வியாளர்கள் என அனைவருக்கும் அவரைப் பற்றி உயர்ந்த அபிப்பிராயம் உண்டு. அவ்வாறு புகழப்படுகையில், அவரது மாணவன் நான் என்று எனது பெருமையை உயர்த்திக்கொள்வேன். ஒன்பதாம் வகுப்பில் அறிவு என்ற கையெழுத்துச் சஞ்சிகையை ஆரம்பித்தபோதும் தமிழ் விஞ்ஞான மன்றம் தொடங்கிக் கூட்டங்கள் நடாத்திய போதும் பின்னால் நின்று ஊக்கம் தந்தவர் அவர். அம்பு என்ற அறிவியற் சஞ்சிகை கல்முனை சாஹிரா - மகாஜனா மாணவர்களின் இணைப்பில் வெளிவந்துள்ளது. அதனைப் பரவலாக்கி, சனரஞ்சக ஏடு என்று பெயரெடுக்க நடராஜா மாஸ்ரர் உழைத்தார். பாடசாலையின் மிகத் தீவிர அபிமானியாக இருந்தாலும் தமிழ், இலக்கியம் என்று வந்துவிட்டால் குறுகிய வட்டத்தில் நின்றுவிடாமல் அனைவருடனும் நட்பு பாராட்டுவார். புகழ்தேடி அலைகின்ற பலரிடையே அவர் மிக எளிமையான மனிதர். அதனாலேயே பலபடிகள் உயர நிற்கிறார்.

## தாவர இயற் காண்டம்

இருபிரிவுகளில் (மொத்தம் நூறுபேர்) உயிரியற் பிரிவு பயின்ற எம்மிடம் மருத்துவக் கனவு இருந்ததை யாரும் மறுக்கமுடியாது. கொஞ்ச நாளில் இது சரிவராது எனப் பலரிடம் (நான் உட்பட) கனவு தகர்ந்திருக்க நியாயமுண்டு. நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்னோக்கி இழுக்க, மெதுமெதுவாக எங்களை முன்னோக்கி அசைக்கும் எண்ணத்தோடு இருந்தார் எங்கள் தாவரவியல் ஆசிரியை. அப்போதுதான் உயர்கல்வி முடித்துவிட்டு, இந்த மாணவர்களை ஒரு கரைசேர்க்கும் எண்ணத்தோடு வந்திருப்பாரோ என்னவோ, ஒரு நேர்த்தியான ஆசிரியையாய் எம்மோடு அலைக்கழிந்தார். எல்லோருக்கும் விளங்கிவிட்டது என்ற உறுதியோடுதான் வகுப்பை விட்டு வெளியே போவார்.

பொதுக் கூட்டத்தில் (தமிழில் சொன்னால் அசெம்பிளி) அவர் உரையாற்றிய போது அவரது இலக்கிய ரசனை வெளிப்பட்டது. ஏனைய ஆசிரியர்கள் பலரை விடத் தீவிர தேடல் உடையவர் என்பது மகிழ்வையும் வியப்பையும் தந்தது. நூலகத்தை மேம்படுத்தும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டபோது, என்னை மிகவும் கவர்ந்த சோவியத் இலக்கியங்களை நூலகத்திற்கு சேர்க்க விரும்பி அவரோடு பேசினேன். ஒரு பிரச்சினையுமில்லை. வாங்கிக் கொண்டாங்கோ, காசு தாறன் என்றார் (குழப்படி செய்கிறவர்களைக் கூட வாங்கோ என்றுதான் அழைப்பார்.) இப்போதும் இது கனவு மாதிரிதான் இருக்கின்றது. மாணவன் ஒருவன், தான் நினைத்த நூற்களைப் பாடசாலை நூலகத்திற்கு பாடசாலை செலவில் - எந்த நிபந்தனையுமின்றி வாங்க முடியுமா? அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவில் அது சாத்தியம்.

காலம் அவரை வேறு பாடசாலைகட்கு மாற்றியும், தனது பணியைத் தொடங்கிய இடத்திலேயே, தனது பணியிறுதி நாட்களைக் கழிக்கும் வாய்ப்புப் பெற்றவர். எங்கள் காலத்திலேயே செல்வி சிவமலர் பொன்னுத்துரையாய் இருந்து திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகினார். இன்று நூற்றாண்டு காணும் பள்ளியில், முதல் பெண் அதிபராய் இருக்கிறார். இவரை மகாஜனாவுக்கு அழைத்துவந்த அதிபர் பொ. கனகசபாபதிக்கும் இவருக்கும் சில வினோத ஒற்றுமைகள் உண்டு. மகாஜனாவின் முன்னேற்றத்துக்கு பாடுபட்ட இவர்கள் இருவருமே மகாஜனாவில் கல்விகற்கவில்லை. இருவருமே ஆசிரியர் பணியை மகாஜனாவில் தொடங்கியவர்கள். இளைப்பாறும் போது இருவருமே மகாஜனாவிற்கு பெருமை சேர்த்த அதிபர்கள். (முடியுமானால் ஆறு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்)

## குறும்பெருங் காண்டம்

கனக்ஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படும் அதிபர் இவ்வருடம் பவளவிழா காண்பவர். எனது மிகுந்த மரியாதைக்குரியவர் என்று பல்லாயிரம் பேர் கூறக் கூடியவர். அவரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லப் புறப்பட்டால் அது பெருங்காண்டமாகிவிடும். ஆகவே..

ஒரு சிற்றூழியன் போலப் பாடசாலைக்கு வந்துவிடுவார், போக இருட்டிவிடும். பாடசாலையை அழகுபடுத்த, கல்வியை மேம்படுத்த, ஏனைய துறைகளை விருத்தியுறச் செய்ய என்று அவரது சிந்தனை செயலில் வெளிப்பட்டது. எந்தத்துறையில் யார் சிறந்தாலும் உரிய கௌரவம் அவரிடமிருந்து கிடைக்கும். வகுப்பில் முதல்மூன்று இடம் பிடிக்கும் மாணவர்களை அரங்கில் ஏற்றிக் கௌரவிப்பார். அதுபோல் கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வென்றவர்களையும் அரங்கில் ஏற்றி அவர்களின் குரலிலேயே படைப்பை வழங்கச் செய்வார். அப்படித்தான் வந்தது வினை எனக்கு. சிறுகதையில் மூன்றாம் இடம் பெற்ற நான் எனது கதையை மேடையில் வாசிக்கவேண்டும். முதலிடம் பெற்ற சேரன் செய்தது போல், வேறு ஒருவரிடம் வாசிக்கும் பணியை வழங்கிவிட்டு சிவனே என்று இருந்திருக்கலாம். விதி யாரை விட்டது. நான் தொடங்கும் போதிருந்த சத்தம் குறைந்து ஒரு கட்டத்தில் நான் வாசிப்பது எனக்கே கேட்கவில்லை. பெலத்து வாசியும் என்கிறார் அதிபர். சிவனே அன்றுதான், தனியே மேடையில் நின்றால் ஒருவரும் பிடித்து விழுங்கமாட்டார்கள் என்று நம்பினேன். தலைமை தாங்கியவர் அதிபர் என்பதால் யாரும் கூக் காட்டவில்லை. பிறகு உயர்தர மாணவர் மன்றத் தலைவரானபோது வழமைக்கு மாறாக பல நிகழ்ச்சிகளை நம்பிக்கையோடு நடாத்த முடிந்தது. அரங்கில் ஆயிரம் பேர் இருந்தாலும், என்னிடம் ஒலிவாங்கியைத் தந்தால் (திருப்பி வாங்குவது அவர்கள் திறமை) நிகழ்ச்சியை நேர்த்தியாகத் தொகுத்து வழங்க முடியும் என்பதை (எனக்கே) நிரூபித்திருக்கின்றேன். அந்தப் பொறி அன்று விழுந்தது. பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடகம் ஒரு மாணவனால் எழுதி இயக்கப்பட முடியும் என்பதையும் அந்தக் காலச் சூழலில் என்னால் நிரூபிக்க முடிந்தது. வட்டாரத்தில் முதலிடத்தையும், மாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் பெறமுடிந்தது. வேறு அதிபர்களிடம் இது சாத்தியமா என்று தெரியவில்லை. ஆசிரியர் ராஜகுலேந்திரனின் நம்பிக்கையில் நிகழ்ந்தது இது. ஒரு பிரச்சினைக்குச் சுளுவான தீர்வு காண்பதில் அதிபர் தனித்துவமானவர். மாணவர்களிடையே பிரபலமாக இருந்தளவு (சில) ஆசிரியர்களிடம் நான் பிரபலமில்லை. (அவர்கள் எனக்குக் கற்பிக்காதவர்கள்). மாணவ பிரதிநிதிகள் முதலில் வகுப்பில் தெரிவாகி, ஆசிரியர்களின் தேர்வில்



படிப்பகம்

www.padippakam.com

வருவார்கள். எனக்குப் பாதி கிணறுதான். முதல்வருடம் இந்தப் பழம்புளிக்கும் என்கிற மாதிரி விட்டுவிட்டேன். அடுத்தவருடமும் அதே கதி. நெஞ்சு பொறுக்கவில்லை. புகழ்பெற்ற ஒரு மாணவனுக்கு உரிய கௌரவத்தை எப்படி இவர்கள் மறுக்கலாம்? இருந்து யோசித்து ஒருநீண்ட கடிதம் எழுதினேன். அதிபருக்கு. கல்வி, விளையாட்டு, ஏனைய துறைகள் என்று பட்டியலிட்டு நான் செய்தவற்றைக் குறிப்பிட்டு ஏன்நான் ஒதுக்கப்படுகின்றேன் எனக் கேட்டேன். கடிதம் தபாலில் போனது (நேரில் கொடுக்க முடியுமா, என்ன?)

உயர்தரமாணவர் மன்றத் தலைவர், எல்லா இல்லங்களதும் தலைவர்கள் இனிமேல் (போட்டியின்றி) மாணவ தலைவர்களாய் ஆகுவார்கள் என்று அடுத்த பொதுக் கூட்டத்தில் அறிவித்தார் அதிபர். வழக்கு கோட்டுக்கு போகாமலே வென்றது. வேறொரு அதிபராய் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகின்றேன்.

கனக்ஸ் அதிபராயிருந்த காலம் மகாஜனாவின் பொற்காலம் என்று முன்பொருமுறை எழுதியிருக்கின்றேன். அவரது காலத்தில் மகாஜனாவிற் பயின்ற எவரையும், யாரும் கேட்கலாம் - அது மிகைவார்த்தையா என. மாணவர்களை மட்டுமல்ல, ஆசிரியர்களையும் சிறந்த நிர்வாகிகளாக்கியவர் அவர். அவரது முயற்சியால் மகாஜனாவில் இணைந்த இருவர் - அதுவும் பெண்கள் - இன்று சிறந்த அதிபர்களாய் விளங்குகின்றார்கள். ஒருவர் மகாஜனா அதிபர். திருமதி சி. அனந்தசயனன். மற்றவர் சுழிபுரம் விக்டோரியா அதிபர் செல்வி அ. ராசதுரை அவர்கள். எழுபத்தைந்து வயதிலும் தனது உழைப்பு சமூகத்துக்கு பயன்பட வேண்டும் என வாழ்பவர் அதிபர். அதிபர் என்கிற வார்த்தைக்கு கனடாவில் (தமிழரிடை) உதாரணமாய் விளங்குபவர் அவர். அற்புதமான எழுத்தாற்றலும், நினைவாற்றலும் கொண்ட அவரிடமிருந்து எமது அடுத்த தலைமுறைக்கு சொல்ல நிறைய விடயங்கள் உள்ளன. அதனை அவர் செய்யவேண்டும் என்பது எனது விருப்பம். (இல்லையென்றால் இதற்கும் கடிதம் எழுதுவேன்)

## வெறுங்காண்டம்

இதை வாசித்து முடிக்கையில் உங்கள் நேரத்தை வீணாக்கி விட்டேன் என நீங்கள் நினைத்தால் அதற்கு நான் என்ன செய்யட்டும். சூழ்நிலை சரியாக இருந்தால் இதைவிடப் பலமடங்கு எழுதுவேன். (அப்பாடா தப்பினீர்கள்). பாடசாலை நினைவுகள் யாருக்கும் உவகை தருவன. என்னையும் என்னைப் போல் பலரையும் உருவாக்கிய சிற்பிகளை பற்றிக் கூற இன்னும் நூறு கதைகள் உள்ளன. கடற்கரை மணலில், நிலவொளியில், கால்நீட்டி இதுபற்றிப் பேச முடிந்தால் மகிழ்ச்சிதான்.

படித்த பள்ளிக்கும், சூழலுக்கும், நாட்டுக்கும் ஏதாவது செய்யவேண்டும் என இந்தத் தருணத்தில் நீங்கள் நினைத்தால், நானும் நீங்களும் ஒரே தோணியில் இருக்கின்றோம் என்று அர்த்தம்.

○



*Prefect 1986*




படிப்பகம்

www.padippakam.com

# மறக்கமுடியுமா?

ஜெயக்குமார்
(1960-1972)



## மகாஜனாவை மறக்கமுடியுமா?

நூற்றாண்டு விழா காணும் மகாஜனக்கல்லூரியில் நானும் கல்வி கற்றேன் என்பதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். பள்ளி வாழ்க்கை என்பது பலருக்கும் பசுமை நிறைந்த நாட்களாகவே மனதில் பதிந்திருக்கும். அதிலும் நான் 60 இல் அரிவரி வகுப்பில் சேர்ந்து 12 வருடங்கள் தொடர்ச்சியாக அதே கல்லூரியில் படித்தேன் என்பது மறக்கமுடியாதது. பள்ளிக்கூடத்தில் இருந்து பின்நோக்கி 200 மீற்றர் தூரத்தில் இருக்கும் எனது வீடு இன்று அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளது. 83ம் ஆண்டு டிசம்பர் 26க்குப் பிறகு நான் அங்கு போகவில்லை. போக அனுமதியுமில்லை. ஆனால் 98ல் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தபோது மருதனார்மடத்தில், தனியார் காணி ஒன்றில் மகாஜனக்கல்லூரி தற்காலிக கொட்டில்கள் அமைத்து வகுப்புகள் நடந்துகொண்டிருந்தது. அப்போது அதிபராக இருந்த நாகராசாவை அவர்களைச் சந்தித்தேன். அப்போதைய தேவைகளை அறிந்து பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினூடாக முடிந்த உதவிகளைச் செய்தோம். அதன் பின்பு மகாஜன மாதா 2001ல் தெல்லிப்பழைக்கு தனது சொந்தக் கட்டிடத்திற்கு நகர்ந்து தனது கல்விச் சேவையை தொடர்ந்தாள். இக்கட்டான காலகட்டத்தில் மகாஜனக்கல்லூரியை சிதைய விடாமல் பாதுகாத்த அதிபர் அமரர் நாகராசாவுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும். 98க்குப் பின்பு எப்போது யாழ்ப்பாணம் போனாலும் மகாஜன மாதாவைச் சென்று தரிசிப்பதை தவிர்த்துக் கொண்டதில்லை.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தினார்கள். அந்த வகையில் கல்விக் கண்களைத் திறந்துவிட்ட மகாஜன மாதாவை நான் இன்றுவரை மறந்ததில்லை. **மறக்கமுடியுமா?** மகாஜனாவை மறக்க முடியுமா? கல்லூரியில் என் பதின்ம வயது நினைவுகளை **மறக்கமுடியுமா?** அரிச்சுவட்டை அழகுதமிழில் கற்பித்த ஆசிரியர் கதிரேசர்பிள்ளை ஒரு தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவர். எத்தனை இலட்சம் பிள்ளைகளுக்கு அரிச்சுவடு சொல்லிக் கொடுத்திருப்பார். துரையப்பா அரங்கு மேல் மாடியில் திங்கள் தோறும் நடக்கும் கூட்டம் எங்கள் பொறுமையைச் சோதிப்பதாகவே இருக்கும். ஆனால் கவிஞர் கதிரேசர்பிள்ளை பேசினால் மட்டும் இன்னும் பேசமாட்டாரா? கூட்டம் முடிந்துவிட்டதா? என்றிருக்கும். அத்தனை நயமான, ஆளுமைமிக்க, ஆழமான மாணவர் ஒவ்வொருவர் காதிலும் இன்றும் ரீங்காரமிடும் அழகுதமிழ் பேச்சு. அந்த ஆசிரியரை **மறக்கமுடியுமா?**

துரைச்சாமி ரீச்சர். பொல்லாதவ. கை மொளியில் அடிமட்டத்தால் அடிப்பா. கணிதம் கற்பித்த ஆசிரியை. மிகவும் கடுமையானவர். இளமையில் கல்வி என்று மதித்ததாலோ என்னவோ அவரிடம் படித்தவர்கள் பின்நாளில் பொறியியலாளராக, கணக்காளராகப் பிரகாசித்தனர்.

செல்லப்பா ரீச்சர். ஆங்கில ரீச்சர். வகுப்புக்குள் வந்தாலே ஏலக்காய் வாசம். பொறுமையாகவும் அருமையாகவும் ஆங்கிலம் கற்பிப்பார். Poem நிறைய சொல்லித்தருவார். பாடமாக்கிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டுவரச் சொல்லியும் சொல்லுவா. ஆனால் நாங்கள் பாடமாக்கியது கிடையாது. ஏனென்றால் அவ அடிக்கமாட்டா. மிக நல்லவ. அவ Miss தானே. அதால கோபப்படமாட்டா.

இராஜரட்ணம் ரீச்சர். நல்லவ. பொல்லாதவ. அடிச்சா சகிக்கமாட்டா. இப்படி இரட்டைவேடம் உள்ளவ. அவவும் ஆங்கில ரீச்சர்தான். 8ம் வகுப்பப் படிக்கும் போது ஒரு நாள் ஏதோ ஒரு சொல்லுக்கு தெளிவான தமிழ் சொல்லு பார்க்கவேணும் என்டு Library இல் போய் Dictionary எடுத்தவர என்னை அனுப்பினா. நான் அங்க அவ்வளவு தூரம் நடந்து போக Dictionary என்ற சொல்லை மறந்து போனன். அகராதி என்ற தமிழ் சொல்லும் தெரியாது. ரிபி க்கு ஒருமாதிரி நிலமையை விளங்கப்படுத்தி Dictionaryயை வாங்கிக்கொண்டு வந்ததை மறக்க முடியுமா? அதே வகுப்பில் நண்பன் சிறீகாந்தலிங்கத்திற்கு நான் முதுகெலும்பில் குத்தி சில நிமிடம் அவன் மயக்கமானதை மறக்கமுடியுமா? 2 வருடங்களின் முன் இலண்டனில் அவனைச் சந்தித்தபோது சுவாரஸ்யமாக அந்நிகழ்வை இரை மீட்டுக் கொண்டோம். தனக்கு அந்தப் பயம் இன்றும் போகவில்லையென்றும், பிள்ளைகள் விளையாடும்போது முதுகில் குத்தி விளையாடக்கூடாது என்று தான் அடிக்கடி சொல்லுவதாகச் சொல்லி பழையவற்றைப் பகிர்ந்து கொண்டோம்.

சுந்தரராஜன் மாஸ்ரர் Maths படிப்பிப்பதில் மிகவும் திறமையானவர். ஆனால் படு கோபக்காரர். எப்போது அது வரும் போகும் என்று யாருக்கும் தெரியாது. கோபம் வந்துவிட்டால் சம்பந்தப்பட்டவருக்கு வகுப்பு முடியுமட்டும் அடியும் உதையும்தான். அதனால் அவருடைய Morris Minor கார் வரவில்லை என்றால் எமக்கு பரம நிம்மதி.

ஆசிரியர்கள் சின்னத்தம்பி, மகாதேவன், இராமசாமி, அதிபர் ஜெயரத்தினம் ஆகியோரிடம் ஆங்கிலம் படித்தவன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறை, ஒவ்வொரு Style. அப்போ எங்கள் வகுப்பில் 5 Football Players. Penalty Kick, Indirect Kick என்பன சரியாகச் சொல்லத் தெரியாது. சின்னத்தம்பி மாஸ்ரர் பனாட்டி இல்லையடா, Penalty Kick என்றும் இன்றக்கிக் இல்லையடா Indirect Kick என்றும் ஆங்கிலத்தில் எழுதி உச்சரித்துச் சொல்லித்தந்தார். அவரை **மறக்கமுடியுமா?** வாழ் நாளுக்கான போதனையல்லவா வாத்தியார் சொல்லியது. மகாதேவன் மாஸ்ரர் ஆங்கிலப் புத்தகத்தில் இருப்பதை அப்படியே வாசித்துவிட்டுப் படியுங்கோடா என்பதுடன் வகுப்பு முடிந்துவிடும்.

ஆசிரியர் இராமசாமியின், கீழ் வேட்டிக்கரை நிலத்தில் அரைத்துக் கொண்டுவர வகுப்பில் நுழைவார். அதன்பின் வேட்டி நிலத்தில் படவே படாது என்பது போல மேசையில் ஏறி இருந்துகொண்டு வாங்கில் காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆங்கிலேயர் போல் உச்சரித்து ஆங்கிலம் கற்பிப்பார். அவரைப் போலவே நாங்களும் உச்சரிக்கவேணும் என்று காதில் கிள்ளிக்கொண்டே எம்மை உச்சரிக்கச் சொல்லுவார். அதை **மறக்கமுடியுமா?**

குலராஜசிங்கம் மாஸ்ரர் நல்லவர். மகாஜனாவிற்கு வேட்டியுடன் வந்து ரவுசருக்குள் புகுந்துகொண்டவர். நல்ல தமிழ் ஆசான். தமிழ் கற்பிப்பதில் வல்லவர். ஆனால் படு கோபக்காரர். வகுப்பில் ஒருத்தனுக்கு 1க்கு வெளியேற அடித்து உதைத்திருக்கின்றார். பள்ளிக்கூடத்தில் பொதுவாக எல்லா மாணவருக்கும் பயம். யார் மறப்பார் அவரையும் அவர் அடியையும்.

பஞ்சநாதன் மாஸ்ரர் பௌதீகமும் பிரயோக கணிதமும் கற்பித்தவர். மென்போக்கு கொண்டவர். மாணவர்களுக்கு ஏற்ப பாடத்தை திறம்பட ஆறுதலாக சொல்லித்தருவார். இலகுவில் கோபப்படமாட்டார். கோபம் வந்துவிட்டால், சாது மிரண்டதுபோல காட்சியளிப்பார். அதிலும் என்னில் மிகவும் விருப்பமானவர் என்பதால், எனக்கும் அவரில் அதிக மரியாதையும் பிரியமும் உண்டு. மறக்கமுடியுமா அந்த நேசமிகு ஆசானை?

ஆசிரியர் சந்திரசேகரி உயிரியல் படிப்பிக்கும் ஆசிரியர். அதேவேளை எனது வகுப்பாசிரியரும்கூட. பாடத்தில் ஆண் பெண் உறுப்புக்களைக் குறித்து படிப்பிக்கும்போது சில வம்பு மாணவர்கள் அதுபற்றி துருவித் துருவி கேட்க அவர் மாணவர்களைப் பார்க்காமல் கரும்பலகையைப் பார்த்துக் கொண்டே பதில் சொல்லுவார். கேள்விகள் ஆகக் கூடிவிட்டால், இதெல்லாம் உங்களுக்கு இப்ப தேவையேடா என்று அன்பாக கடிந்து கொள்ளுவார். அந்த அன்புக்கடி இன்றும் வலிக்கின்றதே. அது அடியாக இருந்தால் மறந்திருப்போம். இது கடியாக இருப்பதால் மறக்க முடியவில்லையே.

Lunchக்குப் பிறகு சில வேளைகளில் வகுப்புக்களைக் கட் பண்ணிக்கொண்டு களவாக கீரிமலைக்குப் போவதுண்டு. உள் உடுப்பு காயாமல், பிழிந்து கல்லில் காயவிட்டு அதனைப் போடாமலே பொக்கற்றுக்குள் வைத்துக்கொண்டு வருவோம். அதைப் போட்டுக்கொண்டு சைக்கிள் ஓடினால் காற்சட்டை நனைந்து வீட்டில் அகப்பட்டுவிடுவோம். எப்படியோ நாங்கள் கீரிமலைக்குப் போகும் விடயம் ஆசிரியர் சந்திரசேகரிக்குத் தெரியவந்து வீட்டிற்கும் தெரியவந்துவிட்டது. அடித்தால் முறுகும் வயது. அதனால் ஆசிரியர் வீட்டிற்கு அறிவித்துவிட்டார். வீட்டிலோ எனது சிறிய தாயார் (அவரும் ஒரு ஆசிரியை) அடிக்கவில்லை. கோபப்பட்டு பேசவில்லை. மாறாக என்னைக் கூப்பிட்டு அன்பாக கட்டிலில் இருத்தி எனக்குச் சொல்லியது உபதேசம். "தம்பி நீ கீரிமலைக்குப் போறதெண்டால் போ. பிரச்சனை இல்லை. ஆனால் கூவில் பக்கம்போய் வேற பழக்கங்கள் பழகிடாதை. ஏனென்றால் நீ பிறகு எங்கே போனாலும் கீரிமலை உன்னுடன் வராது. ஆனால் நீ குடிக்கப்பழகிவிட்டால் அந்தப் பழக்கம் உன்னுடன் வரும்" என்று என் கையைப் பிடித்து கண்ணீர் மல்கக் கூறியதை மறக்க முடியுமா? அந்தச் சிறிய தாயாருக்கு இன்று 90 வயது. அவருடைய உபதேசத்திற்கு காணிக்கையாக குடியை மறந்துகூட பார்த்ததில்லை. இதனை நான் மிகவும் பெருமையாக அடிக்கடி நண்பர்களுக்கு எடுத்துக்கூறுவேன். பள்ளி வாழ்க்கையின் பருவ விளையாட்டுக்களையும் பண்பட்ட உபதேசங்களையும் **மறக்கமுடியுமா?**

அதிபர் ஜெயரத்தினம் மிகவும் கண்டிப்பானவர். அவர் அதிபராக இருந்த காலமே மகாஜனக்கல்லூரி சகல துறைகளிலும் புகழ் ஏணியில் உச்சத்தில் இருந்தது எனலாம். மாணவர்கள் எல்லோரும் ஆங்கிலம் கற்கவேண்டும் என்பதில் கடும்போக்கை கடைப்பிடித்தவர். 1965களில் என்று நினைக்கிறேன். எல்லா வகுப்பறைகளிலும் Speak in English என்று



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மட்டை கரும்பலகைக்கு மேல் மாட்டப்பட்டிருக்கும். ஆங்கில வகுப்பு நேரம் எல்லோரும் ஆங்கிலத்தில்தான் கதைக்கவேணும் என்று கண்டிசன் இருக்கும். அதிபர் அவர்கள் கையில் பிரம்புடன் Round வருவார்.ஆசிரியர் இல்லாத எந்த வகுப்பில் நுழைந்தாலும் ஆங்கிலமே கற்பிப்பார். அன்று எங்கள் வகுப்பிற்குள் புகுந்துவிட்டார். எங்களுக்கோ தமிழ் வகுப்பு. ஆங்கில புத்தகத்தை எடுங்கோ என்றார். நாங்களோ பின்னேரம்தான் ஆங்கில வகுப்பு, புத்தகம் கொண்டுவரவில்லை எனச் சொல்லியும் ஆங்கிலமே கற்பித்தார். அந்தபாட நேரம் 40 நிமிடமும் 40 மாணவர்களையும் ஒழுங்காக Thank you சொல்ல, சரியாக உச்சரிக்க சொல்லித்தந்தார். அத்தனை மாணவரும் அன்றுமுதல் Thank you வை ஒழுங்காக உச்சரிக்கக் கற்றுக்கொண்டோம். மறக்கமுடியுமா அந்த மகானை? அவருடைய ஆங்கில பாடநேரம் தமிழில் எதுவுமே கதைக்கமாட்டோம். முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே பேசுவார். யாருக்கு என்ன புரியும். நாங்கள் '1க்கு ரைற்'றுடன் விழி பிதுங்க பார்த்துக்கொண்டிருப்போம். நாங்கள் ஆங்கிலத்தில் கதைப்பதில்லை என்பதில் கோபப்படமாட்டார். யாராவது வகுப்பு நேரம் கதைத்தால் அவரின் பிரம்பு முதுகைப் பதம் பார்க்கும். ஆனாலும் யாரும் அவரை குறைகூறமாட்டார்கள். அந்தளவுக்கு கண்டிப்பான கண்ணியம் மிக்க அதிபர். மறக்க முடியுமா அந்த அதிபரை. அவர் காலத்தில் நானும் கல்வி கற்றேன் என்பதல்லவோ பெருமை.

புலம் பெயர்ந்து வந்து கிட்டத்தட்ட 30 வருடங்களாக இங்கு வாழ்கின்றோம். பலருடனும் பழகும் வாய்ப்பு உள்ளது. பொதுவாக மகாஜனக்கல்லூரி என்றால் உதைபந்தாட்டம் தான் என்ற கருத்து மட்டுமே நிலவுகின்றது. காரணம் விளையாட்டுத்துறை எல்லா தரப்பினராலும், எல்லா மட்டத்தினராலும் குடாநாட்டில் அறியப்பட்ட ஒன்றாக உள்ளது. ஆனால் மகாஜனக்கல்லூரி கல்வியிலும், கலை இலக்கியத்திலும், விளையாட்டுத்துறையிலும், பேச்சுப் போட்டிகளிலும், சாரணீயத்திலும் அகில இலங்கையிலும் வெற்றி கொண்டுள்ளது. அடையாளம் காணப்பட்டது. யாழ் குடாநாட்டளவில் நகர கல்லூரிகளுக்குப் போட்டியாக சகல துறைகளிலும் ஒரு கிராமத்துக் கல்லூரி விளங்கியது என்றால் அது மகாஜனக் கல்லூரிதான். மகாஜனாவின் உதைபந்தாட்ட திறமை பற்றி குடாநாடே அறிந்திருக்கும். ஏனைய துறைகள், பிரிவுகள், கல்வித்தராதரம்பற்றி துறைசார் இயக்குனர்கள், வல்லுனர்கள் மட்டுமே அறிந்திருக்கக் கூடியதாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

கல்லூரி வாழ்க்கையில் நானும் உதைபந்தாட்டம் விளையாடிய நினைவுகள், வெற்றிப் பரிசுகள் பெற்ற நாட்கள் என்றும் என்மனதில் நிழலாகும். நான் மூன்றாம் பிரிவு உதைபந்தாட்ட அணியில் விளையாடியபோது, 1970ல் 1ம், 2ம், 3ம் அணிகள் மூன்றுமே யாழ் மாவட்ட சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தன. நாங்கள் மூன்றாம் பிரிவினர் ஸ்கந்தவரோதயா கல்லூரியுடன் இறுதிப்போட்டி யாழ் துரையப்பாவிளையாட்டரங்கில் விளையாடி 3-2 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிகொண்டோம். நாங்கள் எதிரணியை வெற்றி கொள்வதற்கான வாய்ப்பு குறைவு என்பதாலும் 3ம் பிரிவுதானே சும்மா பந்தை உருட்டுவாங்கள் என்றும் ஆதரவாளர்கள் அதிகம் வரவில்லை. இருந்தாலும் நாங்கள் யாழ் மாவட்ட 3ம் பிரிவு சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது எல்லோருக்கும் வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது. திங்கள் காலை துரையப்பா அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் 3ம் பிரிவு அணி வீரர்கள் அனைவரையும் மேடையேற்றி அதிபர் ஜெயரத்தினம் பாராட்டிப் பேசினார். அத்தனை வீரர்களிலும் இருவருக்கு மாலை அணிவித்துக் கௌரவித்தார்கள். 1 கோல் அடித்த எனக்கும் 2 கோல் அடித்த மனோரஞ்சனுக்கும் கிட்டத்தட்ட 2000 மாணவர்களுக்கு முன் அந்த கௌரவம் எம்மை பெருமிதம் கொள்ள வைத்தது எனலாம். மறக்க முடியுமா? இதனை இலகுவில் மறக்கமுடியுமா?.

எத்தனை Match விளையாடினால் என்ன, வெற்றிகள் பெற்றால் என்ன, எங்கள் கல்லூரி மைதானத்தில் எங்கள் ஊருக்குள் விளையாடுவதென்பது சற்று வித்தியாசமான உணர்வுகளைத் தரும். அந்த வகையில் மகாஜனா எதிர் யூனியன் Big match தான் ஊருக்குள். அது Foot ball ஆக இருந்தால் என்ன, Cricket ஆக இருந்தால் என்ன போட்டி போட்டிதான். ஆதரவாளர்களின் சத்தமும் கோஷமும் வானையும் அதிரவைக்கும். 2ம் பிரிவு உதைபந்தாட்ட அணியில் மகாஜனா எதிர் யூனியன் Big match. அன்று காலையே கிராமம் சுறுசுறுப்பாகிவிடும். அம்பனை தோட்டத்து இறைப்பில் இருந்து சுன்னாகம் சந்தைவரை அதன் அதிர்வுகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். பிற்பகல் 2 மணி தொடக்கம் வீதியெங்கும் ஆதரவாளர்களின் கோஷம். யூனியன் கல்லூரி மைதானத்திலேயே நடைபெற்றது. கடும் போட்டி. யூனியன் அணியை வெல்ல முடியாது என்ற எதிர்பார்ப்பு. மகாஜனா 6-1 என்ற வித்தியாசத்தில் யூனியனை வென்றது. நானும் அதில் 2 கோல்கள் அடித்தேன். ஆதரவாளர்கள் கட்டுக்கடங்காமல் மைதானத்திற்குள் புகுந்து என்னைத் தூக்கினார்கள். முத்தமிட்டார்கள். முதுகில் தட்டினார்கள். வாழ்த்தினார்கள். இதனை நான் வாழ்நாளில் மறக்கமுடியுமா?. அந்த மைதானமும் சத்தமும் என் காதுகளில் இப்போதுமல்லவா கேட்கிறது. மறக்கமுடியுமா?

விளையாட்டுப் போட்டியன்று நான் 400 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடம் பெற்று, இல்லத்திற்குள் நுழைந்தபோது இரு பக்கத்திலும் சக வீர வீராங்கனைகள் நின்று கரகோஷித்து வரவேற்றதை என்னவென்று சொல்ல. அந்த உணர்வுகளை எப்படிப் பகிர்ந்து கொள்ள முடியும். மறக்கமுடியுமா?. 17 வயது பிரிவில் இணை சம்பியன் வென்று சொந்தக் கிண்ணம் வாங்க திறந்தவெளியரங்கு மண்டபத்தில் ஏறியபோது இல்லக்கொடியும் கல்லூரிக்கொடியும் புடைசூழ விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் கைதட்ட வெற்றிக் கிண்ணத்தை ஏந்தியதை என்னால் மறக்கமுடியுமா?. மகாஜனாகல்லூரி வாழ்க்கையில் எதையும் மறக்க முடியாதே.

1978ல் மகாஜனாவின் 1ம் பிரிவு உதைபந்தாட்டஅணி அகில இலங்கை அளவிலான தேசிய உதைபந்தாட்டப்போட்டியில் முதலாவது இடம் வென்று கொழும்பில் இருந்து ஊருக்கு திரும்பியபோது, அதிபர் கனகசபாபதியிடம் அனுமதிபெற்று, கல்லூரியின் அயற்கிராமமான விராங்கொடை திருமகள் சனசமூக நிலையம், கே.கே.எஸ் புகையிரதநிலையத்தில் இருந்து கல்லூரிவரை வரவேற்பு ஒழுங்காகச் செய்திருந்தது. புகையிரதநிலையத்தில் இருந்து அணி வீரர்களைஒரு லான்ட் மாஸ்ரரில் ஏற்றி சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அணிவகுத்து புடைசூழ ஒருசிலர் கால்நடையாகவே அங்கிருந்து தெல்லிப்பழை சந்திவரை ஓடிவர அங்கிருந்து அனைவரும் மேளதாள வரவேற்புடன் கல்லூரியை இரவு 11 மணிக்கு வந்தடைந்ததை மறக்கமுடியுமா?



படிப்பகம்

www.padippakam.com


ஓமந்தை ராஜ்குமாரின் வீட்டு வாசலில் முதல் ஆராத்தி எடுக்க அதிபர் ஜெயரத்தினம் வீட்டில் முதல் மாலை மரியாதை தொடர விமலன் கடை வாசலில் இருந்து கல்லூரி வாசல்வரை கும்பம், மாலை, ஆராத்தி என நாதஸ்வர இசையுடன் தவில் தனித்தாளமிட பள்ளிக்கூட வாசலை வந்தடைந்தோமே மறக்கமுடியுமா? அந்தப் புல்லரிக்கும் இரவையும் எல்லோரும் புன்னகைக்கும் நினைவையும் மறக்கமுடியுமா?

தேசிய அளவில் முதல் இடம் வென்ற உதைபந்தாட்ட அணியின் தலைவன் றோகன் எனது உரிமைமிக்க மைத்துனன் அல்லவா? அவனையும் அந்த அணியையும் மறக்கத்தான் முடியுமா? கொக்கி விளையாட்டில் றோகனுக்கு காலில் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள் என்று ஊர் அறிந்தபோது, அது எப்படி முடியும், றோகனில் தொடமுடியுமா என்று ஊரே திரண்டுவந்து பள்ளிக்கூட வாசலில் நின்றதே. றோகன் ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பியதும் நிலைமை விளங்கிய பின்தான் கூட்டமே கலைந்ததை மறக்கமுடியுமா? அவன் திறமைகளையும், எழுச்சியையும் பின்னாளில் அவன் விளையாட்டு அமைச்சில் அதிகாரியாகக் கடமையாற்றியபோது, வடக்குகிழக்கு இணைந்ததான விளையாட்டுத்துறைக்கு ஒரு சர்வகலாசாலை அமைக்கவேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டு தீவிரமாகச் செயற்பட்டானே மறக்கமுடியுமா? 2008ல் அமரனாகிவிட்ட உன் முயற்சியும் அரைகுறையில் நின்று போனதே. நீயும் வாழ்ந்து அந்த முயற்சியையும் நிறைவு செய்திருந்தால் உன்னை ஈன்ற தாய்க்கு மட்டுமல்ல, உன்னை விளையாட்டுத் துறையில் வளர்த்துச் செப்பனிட்டு தந்த மகாஜனக்கல்லூரிக்குமல்லவா பெருமை. மறக்கமுடியாத நினைவுகளுள் மனவேதனைதரும் நினைவு இதுவல்லவா.

சித்திரை வருடப்பிறப்பை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமைதான் மகாஜனாவின் பழைய மாணவர் சங்க தாயச்சங்கத்திற்கான கூட்டமும் ஒன்றுகூடலும். காலை முதல் விளையாட்டுக்களும் மதிய போசனமும் தொடர்ந்து விளையாட்டு, கூட்டம், தேநீர் விருந்து என தொடரும் மறக்க முடியுமா அந்த நாளை? அந்தச் சாப்பாட்டில் தக்காளிப்பழமும் உருளைக்கிழங்கும் சேர்ந்த குழம்பு கட்டாயம் ஒவ்வொரு வருடமும் இருக்கும் பிரதான கறி. பெயருக்கு, பார்வைக்கு நிறத்தில் குழம்புபோல இருந்தாலும் சொதிபோல சொதிக்கு சொதியாக அல்லவா அதனை ஊற்றி சாப்பிடுவோம். கல்லூரி விடுதியில் அம்மானின் சமையல் அது. மறக்க முடியுமா அந்த நாளை? அந்தச் சாப்பாட்டை. அந்த நினைவுகளை மறக்கவே முடியாதே.

சரஸ்வதி பூசையை மறக்கமுடியுமா? வாழை வெட்டை மறக்கமுடியுமா? யூன் 24 கல்லூரியே வெள்ளை வெளேரென்று விழாக்கோலம் பூண்டிருக்கும். அன்றுதான் ஸ்தாபகர் தினம். ஸ்தாபகரின் மகன் நடாத்தும் பெருவிழா. இன்று நான் 12 வருடங்கள் கல்வி கற்ற கல்லூரியின் நூற்றாண்டுவிழா. சகல துறைகளுக்குமான பரிசுகள் வழங்கப்படும். நாட்டியம், நாடகம் நடைபெறும். தொடர்ந்து கல்லூரிக்கீதமும் தேசியகீதமும் பாடுவோம். அந்தப் பசுமையான நிகழ்வுகளை என்றாவது மறக்கமுடியுமா? மறப்போமா?
வெல்லுக மகாஜன மாதா. வாழ்க மகாஜன மாதா.

*ஜெயக்குமார்*
*(1960-1972)*



பாடசாலை நிர்வாகம்



படிப்பகம்

www.padippakam.com



# நினைவுப்பறவை சிறகடிக்கிறது...

## அதை எழுத்தில் வடிக்கத்தெரியாது தவிக்கிறேன்..

- நா. வரதராஜா

மகாஜனாவின் நூற்றாண்டு விழாவையொட்டி பதியவேண்டும் என்பது எனது எண்ணம். இருப்பினும் எனது நினைவில் உள்ள விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே.
மகாஜனா என்னும்போது அங்கு கடைமையாற்றிய ஆசிரியர்கள், துப்பரவு செய்த பெர்னாண்டோ தம்பதிகள், கன்ரீன் சங்கரப்பிள்ளை, லாப் பொறுப்பாளர் சுந்தரமூர்த்தி, புத்தகசாலைப் பொறுப்பாளர், இன்னும் பலர் நினைவிற்கு வருகிறார்கள். பள்ளிக்கூடம் மட்டுமல்லாது பன்னாலை, அம்பனை, அளவெட்டி, தெல்லிப்பழை போன்ற ஊர்களும் அங்குள்ள சிலரும் கல்லூரிக்கு முன்பாகவுள்ள லிங்கம் கடை, லிங்கம் அண்ணை கடையின் குசினியில் இருந்து ஆட்டுக்கல்லுடன் மல்லுக்கட்டுவது, பிற்காலத்தில் அருகில் இருந்த கலைஞனின் பிரேம் போடும் கடை, கல்லூரிக்கு முன்னால் ஐஸ்பழம் விற்பவர், கடலை விற்ற ஆச்சி போன்றோரும் நினைவிற்கு வருகிறார்கள். நினைவோ ஒரு பறவை.

கமராவில் பதியப்பட்ட படங்களைக்கூட இல்லாது செய்துவிடலாம். கண்ணால் பார்த்து மூளையில் பதிந்த மகாஜனாவையும் அதன் நினைவுகளையும் மறக்கவே முடியாது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு வகுப்புகளிலும் ஏற்பட்ட நிகழ்வுகள் எல்லோருக்கும் ஒரேமாதிரியானதாக இருக்கும் என்பதில்லை. நான் மகாஜனாவிற்குள் நுழைந்தபோது அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் வெளியேறுகின்ற காலம். விடுதிக்குச் செல்லும் பாதையின் வலது பக்கத்தில் இரண்டாவது வகுப்பு. புதுமாணவன் என்றபடியால் வகுப்பில் எல்லோருடனும் பழகுவது குறைவுதான். காலம் செல்லச் செல்ல பல நண்பர்கள். கல்லூரியை விட்டு வெளியேறும் வரை வெவ்வேறு பிரிவுகளில் நாம் படித்தாலும் நண்பர்கள்தான். செல்வஸ்கந்தன், வேலழகன், ஜெயபாலன், கும்மி, ஜெயேந்திரன், ரகு, குகதாஸ், விக்கி, துரை, சற்குணம், ரவி இப்படி இன்னும் பலர். எல்லோரையும் ஞாபகம் இருக்கின்றது. இதில் எழுத இம்மலரின் ஆக்கதாரர்கள் சம்மதம் தர மறுக்கிறார்கள். கலவன் பாடசாலையென்றபடியால் பல மாணவிகளையும் தெரியும். ஒன்பதாம் வகுப்பில் தொடங்கி 12ம் வகுப்புவரை எமது வகுப்பில் ஆண்கள் மட்டுமே.

10ம் வகுப்பில் கவனமான படிப்பு. அந்தப் படிப்புத்தான் இன்று உதவுகிறதோ. ஆண்டின் இறுதியில் பரீட்சைக்காக. கெமிஸ்ரி மாஸ்ரர் பஞ்சநாதனாக இருந்தாலும் சரி அப்பிளைட் நடராஜா மாஸ்ரராக இருந்தாலும் சரி சுந்தரராஜன் மாஸ்ரராக இருந்தாலும் சரி, உயர்கணிதம் படிப்பித்த முருகையா மாஸ்ரராக இருந்தாலும் சரி, ஏன் ஏனையவர்களும் கூட மாணவர்களுடன் அன்பாகவும் படிப்பில் அக்கறையுடனும் தான் இருந்தார்கள். குரு பக்தி என்றுகூடச் சொல்லலாம். மாணவர்களும் அதேபோன்றுதான் அவர்கள்மீது மரியாதையும் பயமும். இருந்தாலும் மாணவர்களில் ஓரிருவர் குளப்படி என்பதைவிட குறும்புக்காரர்கள். கும்மி, குரும்பசிட்டி மனோகரன், ரகு போன்றோர். ஓரிருவர் சாதுவானவர்கள். விஸ்வலிங்கம் சோமசுந்தரம், கிருஷ்ணகுமார்(ஏழாலை) போன்றோர். நான் எந்தப் பிரிவு என்பதை ஏனையவர்களிடம் தான் கேட்கவேண்டும். ஆங்கிலம் கற்பித்த மிஸ் சேனாதிராஜா ரீச்சரோடும் நகைச்சுவையாகக் கதைக்க மாணவர்கள் தவறவில்லை. ஆங்கிலம் மண்டைக்குள் ஏறாதது கவலைதான். அதற்குப்பதிலாக இன்று பிரெஞ்சு மொழி சிறிதளவாவது ஏறியுள்ளது. அதற்குக் காரணம் மிஸ் சேனாதிராஜாவிடம் கற்ற ஆங்கிலம்தான். அன்று ரமேஷ், பீற்றர் தேவானந் போன்ற நண்பர்கள் ஆங்கிலத்தில் சிறப்பான மாணவர்களாக இருந்தார்கள். நான் அதில் மிகக் குறைவுதான்.

100மீற்றர் போட்டி முடியும் மூலையிலுள்ள இரண்டு வகுப்புகளிலும் 9ஏ, 10ஏ படித்தகாலத்தில், அருகிலிருந்த பலா மரத்தில் உயரத்தில் இருந்த பலாப்பழம் பிடுங்கிச் சாப்பிட்டதை நினைக்கும்போது இன்றும் சிரிப்பாக



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறது. கணிதம் படிப்பித்த சுந்தரராஜன் மாஸ்ரர் மனோகரனுக்கு கையால் முதுகில் அடிக்க அவன் குனிந்தான். மாஸ்ரரும் கையை மேசையுடன் மோதி மேலும் கோபப்பட்ட நிகழ்வை எப்படி மறப்பது.

10ம் வகுப்பு பரீட்சை முடிந்தபின் றிசல்ட்டுக்காகக் காத்திருந்த காலம். எமது வகுப்பு திறந்தவெளி அரங்கின் வலது பக்க முதல் அறை. ஆசிரியர்கள் வருவது மிகக் குறைவு. அவ்வப்போது ஒருசில பாடங்களுக்கு ஆசிரியர்கள் வருவார்கள். ஊர்க்கதைகள்தான் பொழுதுபோக்கு. அதனைவிட அந்தக் காலம் இலங்கையில் பொப்பிசைக் காலம். நண்பன் கும்மி, பொப்பிசைப்பாடல் புத்தகத்தோடு வகுப்பிற்கு வந்துவிடுவார். பிறகென்ன ஆட்டம்தான். போதாக் குறைக்கு அவனின் சைக்கிளும் வகுப்பிற்குள் வந்துவிடும். கல்லூரியின் மேற்குப்புற ஒழுங்கையில் சைக்கிள் நிறுத்தப்பட்டிருக்கும். வகுப்பிலுள்ள யன்னல்களுக்கு கதவில்லை, கம்பிகளும் இல்லை. பிறகென்ன இலகுவாக சைக்கிள் உள்நுழைந்துவிடும். வகுப்பறையினுள் சைக்கிள் ஓட்டமும் நடக்கும். அவ்வப்போது அவ்வழியால் செல்லும் ஆசிரியர்களும் கடைக்கண்ணால் எம்மைப் பார்த்துவிட்டுத்தான் போவார்கள். ஒரு தடவை பண்டிதர் ஆறுமுகம் மாஸ்ரர் தற்செயலாக எங்கள் வகுப்பிற்குள் நுழைந்துவிட்டார். பிறகென்ன. சைவத்தைப் பற்றி பெரிய சொற்பொழிவையே நடாத்திவிட்டு இவ்வருடம் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் திருவிழாவிற்கு நீங்கள் எல்லோரும் விநாயகரத்தினம் மாஸ்ரருடன் சென்று சிறப்பாக நடாத்தவேண்டும் என்றும் தான் அதனை விநாயகரத்தினம் மாஸ்ரரிடம் கூறுவதாகவும் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அந்த வருடம் நாம் திருக்கேதீஸ்வரம் சென்று சிறப்பாக பூஜையை கொண்டாடி மகிழ்ந்தோம். நாம் அங்கு அந்தி சாயும் நேரத்தில் சென்றடைந்தோம். எமக்கு இரவு உணவாக மடம் ஒன்றினில், உப்புமா தந்தார்கள். முதன்முதலாக அந்த உணவை உண்டபடியால் இன்றும் ஞாபகம். அங்கு தொல்பொருள் ஆராய்ச்சி நடந்த இடங்கள் எண்ணெய் ஆய்வு நடந்த இடங்கள் போன்றவற்றை பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. பிற்காலத்தில் கும்மி சாமியாராக மாறியதாகவும் யாரோ கூறினார்கள். அவனின் நகைச்சுவைகளையும் கன்னத்தில் குழிவிழும் புன்சிரிப்பும் இன்றும் மனக்கண்முன் தெரிகிறது.

க.பொ.த உயர்தரவகுப்பில் கணித ஆசிரியர் குலநாதனை எப்படித்தான் மறப்பது. வெள்ளை அரைக்கைச்சேட்டும் வெள்ளை ரவுசருமாக வருவார். லெக்சர் கோல் தான் எமது வகுப்பு. அவர் வகுப்பிற்கு வருமுன் பஞ்சநாதன் மாஸ்ரரின் லாப் ஒடையில் இரண்டு தம் அடித்துவிட்டு மிகுதி சிகரெட்டை தீப்பெட்டியில் செருகி வைத்துவிட்டுத்தான் வருவார். வகுப்பில் சந்திரமோகன் அவருடன் நகைச்சுவையாகத்தான் கதைப்பார். அதற்கு குலநாதன் மாஸ்ரர் நீர் சும்மா இரும்அப்பா.. நீர் என்ன செய்யிறீரப்பா.. போன்ற சொற்களைத்தான் பாவித்துக் கதைப்பார். எமது வகுப்பில் மாணவிகள் இல்லை. ஆனால் இரண்டு மாணவிகள் கணிதம் படிக்க மட்டும் வருவார்கள். அதில் ஒருவர் கனக்கியின் சகோதரி. ஒருதடவை அவர்களிருவரும் தாமதமாக வந்தபடியால் முழங்காலில் நிற்கும்படி குலநாதன் மாஸ்ரர் கூறி 40 நிமிடம் நிற்க வைத்தார். அவர்களும் அழுதபடி நின்றதை இன்று நினைக்கும்போது கூட சிரிப்பாக இருக்கிறது. சிலநாட்களில் பாட ஆசிரியர்கள் வராது விட்டால் சினிமா பார்க்க சென்றதுண்டு. காலம் கடந்துதான் தவறுகளை உணர முடிகின்றது.

உயர்தர வகுப்பிற்கு வந்தபிற்பாடுதான் கூடுதலாக கன்ரீனுக்கு போனேன். சங்கரப்பிள்ளையின் உருவம் இன்றும் மறக்காமல் மனதில் இருக்கின்றது. கடனுக்குச் சாப்பிட்டுவிட்டு, சங்கரப்பிள்ளை உள்ளிருந்து எழுதிவிட்டுப் போங்கோ என்று சொன்னதிற்காக வேறு ஆட்களின் பெயரில் கணக்கை எழுதிவிட்டு வந்தவங்கள் கனபேர். இதைச் சொல்வதால் என்னையும் அதில் சேர்க்கவேண்டாம். என்னுடைய பெயரிலும் யாரோ எழுதி வைத்ததால், கல்லூரி விட்டபின் கனக்ஸிடம் சேட்டிபிக்கட் எடுக்க கஷ்டப்பட்டது எனக்கல்லவா தெரியும். பெரும்பாலான கல்லூரி விழாக்களுக்கு உயர்தரவகுப்பு மாணவர்கள்தான் சகல வேலைகளையும் செய்வது வழமை. அப்படி உதவும் மாணவர்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள் கன்ரீனில் சிற்றுண்டி உணவுகள் வாங்கிக்கொடுப்பது வழமை. ஒரு தடவை நிறுவியவர் நினைவு தினத்தன்று ரகு, கன்ரீனுக்குச் சென்று ஒரு ஆசிரியரின் பெயரைக்கூறி அவர் சொன்னதாக ஏராளமான சிற்றுண்டிகளை வாங்கிவந்து நாமெல்லோரும் பகிர்ந்து உண்டோம். இந்தச் செயல் இன்று தவறாகப்படுகிறது. அன்று விளையாட்டாக இருந்தது. என்ன தான் இருந்தாலும் எமது கல்வியின் பெறுபேறுதான் இன்று நாம் மகிழ்வாக இருப்பதற்குக் காரணம். அதனைத்தந்த கல்லூரியை நினைத்து மகிழ்கிறேன். எமது பழைய நினைவுகளை அந்தந்த ஆசிரியர்கள், நண்பர்களுடன் இப்போது கதைத்து மகிழவேண்டும் என்ற ஆசை, நிறைவேறுமா என்பது கேள்விதான். அவ்வப்போது அதிபர் கனக்ஸ் உடன் தேவைகருதி கதைப்பதோடு சரி. ..............

சில வருடங்களுக்கு முன் என்னுடன் படித்த உலகெங்குமுள்ள பல நண்பர்களுடன் தொடர்புகொண்டு உரையாடினேன். அவர்களுக்கு எப்படியோ தெரியவில்லை. அவர்களோடு உரையாடியது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மகாஜனா என்ற சொல்லோடு எல்லோருடனும் உறவு முறையினைத் தொடர்வோம்.



படிப்பகம்

www.padippakam.com



# நினைத்தாலே இனிக்கிறது..

- ச. சுதர்சன்

1971 ஆம் ஆண்டு மகாஜனாக்கல்லூரியில் கல்வி கற்க தொடங்கிய நான் எனது உடன்பிறவா சகோதரரும் மகாஜனாவின் இராணி சாரணருமான திரு. கு. ஈஸ்வரகுமாரின் ஆலோசனையின் மூலம் குருளைச் சாரணர்பிரிவில் எனது சாரணர் வாழ்க்கையை தொடங்கினேன். அப்போது எமது குழாமிற்கு பொறுப்பாக திருமதி யோ.வேலுப்பிள்ளை, திருமதி. ரோ. இரத்தினவேல் ஆகியோர் கடமை புரிந்தனர். குருளைச் சாரணர்களின் எண்ணிக்கை கூடியபோது 1972 ஆம் ஆண்டு திருமதி.ச.பொன்னுத்துரை அவர்களும் மேலதிக ஆசிரியராக பணியில் சேர்க்கப்பட்டார்.

சாரண ஸ்தாபகர் பேடன்பவல் பிரபு அவர்களால் 1907 இல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம் எமது மகாஜனாவுக்கு 1936 ஆண்டு மகாஜனாவின் சிற்பி திரு தெ.து ஜெயரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு குருளை சாரணியத்தில் இருந்து சாரணர் பிரிவுக்கு மாற்றப்பட்டு நான் 1974 இல் 2ம் வகுப்பு சின்னத்தை பெற்றேன். அப்போது எமது குழுவுக்கு திரு C.S சுப்பிரமணியம் ஆசிரியர் பொறுப்பாளராக இருந்தார். வழமை போல் ஒவ்வொரு வருட ஐப்பசி மாதப்பகுதியில் யாழ் பழைய பூங்காவில் பாசறை வாசம் 3 நாட்கள் செய்வோம்.

1975 ஆம் ஆண்டு 1ம் வகுப்பு சின்னத்தை பெற்ற நானும் எனது தோழர்களும் எமது சுற்றாடல்களில் உள்ள கோவில்கள் வாசிகசாலை சிரமதானங்களில் ஈடுபட்டோம். மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் இன்னும் பல கோவில் விழாக்களின் போது வீதி ஒழுங்கு துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு சேவைகளை செய்தோம். அப்போது ஆசிரியர்கள் திரு இ. தவபாலன், திரு வெ. ஆனந்தகுலேந்திரனும் வகுப்பு தலைவராக திரு C.S.S.ரவீந்திரனும் (இவர் ஸ்கவுட் மாஸ்ரரின் மகன்) இருந்தனர். 1975 ஆம் ஆண்டு திரு.ரவீந்திரன் இராணிச்சின்னம் பெற்றார்.

1977 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது ஜனாதிபதி ஆட்சி முறை நடை முறைக்கு வந்து இராணிச்சின்னம் ஜனாதிபதிச்சின்னமாக மாற்றப்பட்டது. அப்போது பொறுப்பு ஆசிரியராக திரு சி. குகனேசனும் குழுத்தலைவராக இருந்த ரவி அண்ணனின் முயற்சியால் (இன்று அவர் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றார்) 1978 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்து மகாஜனன்கள் ஆகிய நான், திரு வி. கரிகரன் (பிரான்ஸ் ) திரு சோ. முருகானந்தன் (அவுஸ்திரோலியா), திரு ச. ஜனார்த்தனன் (கனடா) திரு க. சண்முகவதனன் (கனடா), திரு தி. ஜீவதயாள்(கனடா) ஆகியோர் ஜனாதிபதி சாரணர் விருதை பெற்றுக்கொண்டோம்.

1978 ஆம் ஆண்டு யாழ்மாவட்ட பாசறையிலும் அதற்குரிய வெற்றி கிண்ணத்தை பெற்று கல்லூரிக்கு யாழ்மாவட்டத்தில் இருந்து முதலாவது ஜனாதிபதி சாரணர்விருதை பெற்றபெருமையை கல்லூரிக்கு தேடிக்கொடுத்தனர். பின்னர் பொறுப்பேற்ற ஆசிரியர் திரு வ. கந்தசாமியின் காலத்தின் போது எமது குழு கிளிநொச்சியில் பாசறை முகாம் அமைத்தோம். இம்முகாமில் கலந்துகொண்ட நண்பர்களான கரிகரன், முருகானந்தம், இரவி, கோபிமனோகரன், கணேசலிங்கம், நிமலன், பெர்னான்டஸ், உதயன், சிவதாஸ்



படிப்பகம்

www.padippakam.com








போன்றோரை இன்றும் நினைக்கிறேன். இந்தக்காலத்தின் போது 10000 மணித்தியாலங்கள் சிரமதானம் செய்து யாழ்மாவட்டத்தில் வருடாந்தபாசறையில் 1980 இல் முதல் இடத்தை பெற்று சாதனை படைத்தோம். அப்பொழுது குழுவிற்கு நானும் சிரமதான பணிக்கு கணேசலிங்கமும் பொறுப்பாக இருந்தனர்.

1980 ஆம் ஆண்டு ஐப்பசி 13ஆம் திகதி யாழ்மாவட்ட சாரணியம் காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி என நான்கு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. எமது கல்லூரி சாரணர்குழு 1வது காங்கேசன்துறையாக (சாரணர் குழுவிற்கு பாடசாலையின் பெயர்கள் குறிப்பிடப்படுவதில்லை) நியமனம் பெற்றது. 1981ஆம் ஆண்டு ஆசிரியர் திரு செ.தியாகராஜா அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்னர் நானும் நண்பன் கணேசலிங்கமும் உதவி சாரணர் தலைவர்களாக நியமனம் பெற்றோம். அந்த வருடம் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நடைபெற்ற வருடாந்த பாசறையில் பல போட்டிகளில் பங்கு பற்றி முதலாம் இடத்தை கைப்பற்றினோம்.அப்போது துருப்பு தலைவர்களாக திரு இ. ரவீந்திரன் திரு சி. கோபிமனோகரனும் கனிஷ்ட துருப்புதலைவர்களாக திரு கு. நிமலன் திரு. மு. மணிமாறனும் கடமை ஆற்றினார்கள். இதே குழு 1982ஆம் ஆண்டும் கிளிநொச்சியில் 3 நாட்கள் பாசறை வாசம் செய்து இறுதி நாள் நிகழ்வின்போது கிளிநொச்சி பா.உ. திரு.ப. ஆனந்தசங்கரி கலந்து சிறப்பித்தார். வருடாந்த பாசறை விழாவிலும் இரு தடவைகளாக 1வது இடத்தை கைப்பற்றினோம். செல்வன்கள் S .திலகராஜ், வ. நவநீதன், T .வரதராஜன் ஆகியோர் பச்சை வட்டம் பெற்றனர்.

1983ஆம் ஆண்டு அனுராதபுரம் விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற 3வது தேசிய சாரணர் ஜம்பொறியில் எனது தலைமையில் 10 சாரணர்கள் கலந்து கொணடார்கள். அந்த விழாவின் போது எமது உதவி மாவட்ட ஆணையாளர் திரு சச்சிதானந்தம் அவர்கள் மாரடைப்பால் காலமானார். 1983 நாட்டின் இனக்கலவரத்தால் பாதிப்படைந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த அகதிகளுக்கு எமது குழுவினர் உதவி செய்தார்கள். அதேவருடம் ஆகஸ்ட் மாதம் எனது உயர்தரப்படிப்பும் முடிவடைந்தது.
நான் பிரான்ஸ் வந்தபின் கல்லூரியில் சாரணியத்தில் எனது காலத்திற்கு முன்பும் பின்பும் இருந்த கருணாகரன், ஜெயேந்திரன், யோகானந்தம், முருகதாஸ், தயாளன், குணசீலன், ஜெயா, செல்வகுமார், நந்தகுமார், குமணன், சசி, துஷ்ஷியந்தன், சிவதாஸ், குணாளன், மதிவண்ணன் ஆகியோரை இங்கு சந்தித்தித்து இன்றும் அவர்களுடன் மகாஜனாவின் நினைவுகளைப் பேசி மகிழ்கிறேன்.






படிப்பகம்

www.padippakam.com



# தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி





கற்றதனால் ஆயபயன் என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழார் எனின்

வள்ளுவன் கூற்றுக்கு அமைய பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்கள் கிறிஸ்தவ மிசுனறிமார்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக சைவத்தையும் தமிழ்மொழியையும் வளர்க்கவேண்டும் என்ற ஆவலினால் முற்றிலும் சைவ மக்கள் வாழ்கின்ற அம்பனை கிராமத்தை தேர்ந்து எடுத்து ஓர் சைவ பாடசாலையை ஸ்தாபித்தார். இப் பாடசாலை சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயரில் ஆரம்ப கல்விபெறும் பாடசாலையாக உதயமானது. துரையப்பாப்பிள்ளையின் சகல முயற்சிகளுக்கும் ஆசிரியர்களான சின்னையா, அருளம்பலம் ஆகியோர் உறுதுணையாக இருந்தனர். சின்னப்பா துரையப்பாபிள்ளையின் வலது கரமாக திகழ்ந்தவர் ஆசிரியர் தம்புவாகும். அயல் கிராமங்களான பன்னாலை, கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, கருகம்பனை, மல்லாகம், கட்டுவன், குரும்பசிட்டி, அளவெட்டி வாழ் சைவ பெருமக்களின் பூரண ஆதரவு மேன்மேலும் கிடைத்ததினால் சரஸ்வதி வித்தியாசாலைக்கு அருகில் மகாஜனா ஆங்கில பாடசாலை உதயமானது. ஆரம்ப பாடசாலையான சரஸ்வதி வித்தியாசாலையிலும், மகாஜனா ஆங்கிலப் பாடசாலையிலும் சமயபாடம் ஓர் பாடமாக கற்பிக்கப்பட்டது. சரஸ்வதி வித்தியாசாலையிலும் சரி, ஆங்கிலப் பாடசாலையிலும் சரி 100 வீதம் சைவப் பிள்ளைகளே கல்வி பயின்று வந்தார்கள். காலையில் பாடசாலைகள் ஆரம்பமாகும் போது தேவாரம், புராணம் பாடியும், மாலையில் முடிவடையும் போது தேவாரத்துடனும் முடிவடையும். பாடசாலையில் தெய்வ திருஉருவங்கள் அடங்கிய படங்கள் ஓர் பிரத்தியோக அலுமாரியில் வைக்கப்பட்டு மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் பக்தியுடன் பூசிக்கப்பட்டு வந்தன.

சில வருடங்களின் பின்பு சரஸ்வதி வித்தியாசாலையும் மகாஜனா ஆங்கில பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டு மகாஜனாக் கல்லூரி என்ற பெயரில் இயங்குகின்றது. ஏழாலை கிராமத்தை சேர்ந்த ஆசிரியர் சின்னத்துரை B.A அவர்கள் சைவ சமயத்திற்க்கு பொறுப்பான ஆசிரியராக செயலாற்றினார். அவர்கள் சைவ சமயத்தில் பழுத்த அறிவு உடையவர். ஆசிரியரின் நெற்றியில் விபூதியும் சந்தனப் பொட்டும் இல்லாத நாளை கண்டதில்லை. ஒவ்வொரு வெள்ளியும் அந்தணரால் கல்லூரி தொடங்கும் போது தெய்வ திருவுருவங்கள் அடங்கிய படங்களுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் வழிபட பூசை நடைபெற்றது. விபூதி பிரசாதம் வழங்கிய பின்பு கல்லூரி ஆரம்பமாகும். சரஸ்வதி பூஜை ஒன்பது நாட்களும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை முழுக் கல்லூரி மாணவர்களுக்கும் பிரசாதம் வழங்கப்படும். பத்தாவது நாளான விஜயதசமியன்று பன்னீர் வாழை வெட்டப்படும். அன்றைய தினம் மாணவர்களுக்கு விடுமுறையாகும். நான்கு நாயன்மார்களின் குருபூசை சிறப்பான பூசையுடன் நடைபெற்று நாயன்மார்களின் வரலாறு மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களால் சொற்பொழிவாற்றப்படும். இதன்மூலம் நாயன்மார்களின் வரலாற்றினை மாணவர்கள் இலகுவாகக் கற்றுக்கொண்டார்கள். ஒவ்வொரு திங்கள் காலையிலும் மாணவர்கட்கு கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் சிவபுராணம் சொல்லிக் கொடுக்கப்படும். சிவபுராணம் ஒவ்வொரு கிழமையும் பகுதி பகுதியாக பிரித்து சொல்லிக் கொடுப்பதனால் அனைத்து மாணவ மாணவியரும் சிவபுராணம் முழுவதும் மனப்பாராயணம் உடையவர்களாக திகழ்ந்தார்கள். அக்காலத்தில் ஆசிரியர்கள் ஒழுக்கம், சுகாதாரம் பற்றி பேசும் போது சமய நூல்களையும், சமயப் பெரியார்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் ஆற்றிய தொண்டுகளையும் மேற்கோள் காட்டி பேசுவார்கள். ஆசிரியர் சின்னத்துரை, சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தை கற்றுத்தெளிந்தவர். அவர்பேசும் போது பெரியபுராணத்தை மேற்கோள் காட்டி சைவ சித்தாந்த உண்மைகளை இலகு தமிழில் எளிய மொழியில் பேசுவார்.

மகாஜனாக் கல்லூரி மிகவும் துரித காலத்தில் பிரமிப்பூட்டும் வளர்ச்சியை பெற்றது, அமரர் தெ.து. ஜயரத்தினம் என்ற மாமனிதர் காலத்தில் என்றால் அது மிகையாகாது. அதிபரின் மனதில் தில்லையிற் கூத்தன் "நடராச பெருமான்" தோன்றி அருள் கொடுத்தான். இதன் காரணமாக கற்றவர் விளங்கும் கற்பகக் கனி யாகிய நடராசபெருமானுக்கு ஓர் கோவிலினை கல்லூரி வளாகத்தில் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். சைவப் பெருமக்களும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊர்மக்கள் பேராதரவு கொடுத்தார்கள். இதன் காரணமாக சகலமானவர்களும் நின்று வழிபடக் கூடியவிதத்தில் ஆலயம் அமைத்து, சிவகாமிசமேத ஆனந்த நடராஜ பெருமான் மாவை அந்தணர்களால் நல்ல முகூர்த்தத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினசரி பூஜை நடைபெற்றது. "கற்றவர் விளங்கும் கற்பகக்கனி" என்று எம்பெருமான் குறிக்கப்படுகின்றான். கல்விகற்கும் மாணவர்கள் இறைவனின் அருளையும் பெறுவார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஒவ்வொரு நாளும் சனி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த நாட்களில் கல்வி கற்க தொடங்குமுன்பு மாணவ மாணவியர், ஆசிரியர்கள் கட்டாயம் ஆலயத்திற்கு முன்பாக ஒழுங்கு முறையாக கூடவேண்டும். இதன் பின்பு நடராசப் பெருமானுக்கு தீபாராதனையுடன் பூசை நடைபெறும்.

இவ்வேளையில் பாடசாலையில் எந்தவிதமான ஆரவாரமோ, வேறு எந்தவிதமான ஒலிகளோ கேட்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த அளவிற்கு நிசப்தம் நிலவும். எந்த வகுப்பிலும் மாணவர்களை காண முடியாது. பூஜை முடிவுற்றதும் தேவாரம், புராணம் ஓதப்படும். இதையடுத்து சகலரும் விபூதி, பிரசாதம் பெற்று மாணவர்கள் தமது வகுப்புகளிற்குச் சென்றபின் கற்பித்தல் ஆரம்பமாகும்.

எமது கல்லூரியில் ஒருசில எண்ணிக்கையுடைய கிறிஸ்தவ மாணவர்களும் கல்வி கற்றார்கள். எமது அதிபர் ஜெயரத்தினம் பிற சமயங்களையும் மதிப்பவர். ஆகவே கிறிஸ்தவசமய மாணவர்கள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற தனியான இடம் கொடுத்து நன்மதிப்பைப் பெற்றவரானார். மாலையில் கல்லூரி முடிவடையும்போது மணி ஒலிக்கப்படும். மாணவர்கள், ஆசிரியர்கள் தமது பணிகளை முடித்து எழும்பி இறைவனின் நாமத்தை நினைத்தவண்ணம் நிற்பார்கள். இதனைத் தொடர்ந்து தேவாரம், புராணம் ஒலிபெருக்கியில் ஓதப்படும். "அரகர மகா தேவா" கூறி மாணவர்கள் அமைதியாக தமது வீடு நோக்கிச் செல்வார்கள்.

நவராத்திரி காலத்தில் காலையில் வெகுசிறப்பாக ஒன்பது நாட்களும் பாலர் வகுப்பில் இருந்து உயர்தரவகுப்பு மாணவர்கள் வரை ஒவ்வொரு நாட்களும் பொறுப்பேற்று பூஜைகள் நடைபெறும். "சகலகலாவல்லிக்கு" பாமாலைபாடி வணங்கி பிரசாதம் பெற்று மாணவர்கள் பாடங்களைத் தொடங்குவார்கள். கடைசி நாளான விஜயதசமியன்று உயர்தரவகுப்பு மாணவர்களால் பூஜை பொறுப்பேற்று நடாத்தப்படும். மகுடாசூரனை அழித்த நாளான அன்று மைதானத்தில் பன்னீர் வாழை நாட்டப்பெற்றுசிறப்பான பூஜைகள் நடைபெறும். மாணவர்கள், ஆசிரியர்கள் சூழ்ந்து நிற்க வாழை வெட்டும் வைபவம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து பிரசாதம் வழங்கப்படும். முப்பெருந் தேவியர்க்கு நவராத்திரி. ஒன்பது நாட்கள் முறையே அலைமகள், மலைமகள், கலைமகளுக்கு நாம் விழா எடுக்கிறோம். ஆனால் சிவனுக்கு ஒரு ராத்திரி. அது மகாசிவராத்திரி. நடசாராசபெருமான் வீற்றிருக்கும் எங்கள் கல்லூரியில் சிவராத்திரியன்று மாலை தொடங்கி நான்கு ஜாமப் பூசைகள் நடைபெறும். அன்றைய தினம் மாணவர்கள், ஆசிரியர்கள், அயலில் வாழும் மக்கள் ஆலய மண்டபத்தில் குழுமியிருந்து சிவராத்திரி வழிபாட்டினில் கலந்து கொள்வார்கள். நான்கு ஜாமப் பூசைகளுக்கு மத்தியில் பஞ்சபுராணம் ஓதுதல், பஜனை, சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், நாதஸ்வரக் கச்சேரி முதலியன நடைபெறும். நான்காவது ஜாமம் பூசை முடிவுற்றதன்பின் பலர் கீரிமலைக்குச் சென்று கடலில் சிவராத்திரி தீர்த்தம் ஆடி சிவனை வழிபடுவார்கள். மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை பத்து நாட்களும் காலையில் விஷேடஅபிஷேகத்துடன் பூசை நடைபெற்று திருவெம்பாவை திருப்பாவையுடன் பன்னிரு திருமுறைகள் ஓதப்பட்டு ஆராதனை நடைபெறும். ஒவ்வொரு மாதமும் வருகின்ற நடராசர் அபிஷேகநாட்களில் நடேச பெருமானுக்கு விஷேட அபிஷேகம் செய்யப்பட்டு சிவகாமி சமேதராய் கல்லூரி வளாகத்தில் மேளதாளம் முழங்க வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

எமது கல்லூரி மன்னார் திருக்கேதீஸ்வர வருடாந்த உற்சவத்தில் ஒருநாள் திருவிழாவை பொறுப்பேற்று நடாத்தி வந்தனர். ஒவ்வொரு வருடமும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் திருக்கேதீஸ்வரம் சென்று பகல், இரவு திருவிழாவை சிறப்பாக நடாத்தி வருவார்கள். மாவிட்டபுரம் கந்தசாமிகோவிலிலும் எமது கல்லூரி 17ம் நாள் திருவிழாவைப் பொறுப்பேற்று நடாத்தியும் வருகின்றது. எமது கல்லூரி மாணவர்கள் பன்னிரு திருமுறைகளை பிழையின்றி ராகம், தாளத்தோடு படிப்பதற்காக சங்கீத வித்துவான்களால் விஷேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இதன் பயனால் மாணவர்கள் திருமுறைகளை பண்ணோடு ராகம், தாளத்தோடு படிக்கும் திறனை ஏற்படுத்தியது. அதிபர் ஜயரத்தினம் பணிபுரிந்த காலத்தில் நவராத்திரி விழாவின் போது வரும் கடைசி மூன்று நாட்களும் இயல், இசை, நாடகம் அடங்கிய வாணிவிழாவாக கொண்டாடப்பட்டது. அமரர் துரையப்பாப்பிள்ளை அரங்கில் மாலை ஆறுமணிக்கு தொடங்கி இரவு பத்துமணிக்கு முடிவடையும். இவ் விழாவில் பண்இசை, சமய சொற்பொழிவு, சங்கீதம், நடனம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மண்டபம் நிறைந்த மக்களும் மாணவர்களும் கூடி கலைவாணிக்கு விழா எடுத்தனர். எமது கல்லூரி சைவ சமய கோட்பாட்டிற்கு அமையவே இயங்கிவந்தது. பஞ்சமா பாதகங்களில் ஒன்றான புலால் உண்ணல், மது அருந்துதல் முதலியவற்றை எமது கல்லூரி விலக்கியே திகழ்ந்தது. கல்லூரியில் நடைபெறும் விருந்து உபசார நிகழ்ச்சியிலோ, உயர்தர வகுப்பு மாணவர்கள் தினத்திலும் சைவ உணவுகளே பரிமாறப்பட்டது. கல்லூரியில் மாணவர் விடுதியிலும் புலால் உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை.

சைவத்தையும், சைவத்தின் பெருமையையும் வளர்த்து வந்தவர்களுள் பன்னாலையைச் சேர்ந்தவரும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவரும், ஆசிரியருமான விநாயகரத்தினம் அவர்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் சைவசமய பரீட்சைகளில் எமது கல்லூரி மாணவ மாணவியர் தங்கப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்று கல்லூரியின் புகழை நிலைநாட்டுவதற்கு ஆசிரியர் ச. விநாயகரத்தினம் முக்கியகாரணமாக விளங்கினார். இந்த சந்தர்ப்பத்தில் சமயப் பணிகளுக்கு சில நிகழ்ச்சிகளை கூறலாம். எங்கள் கல்லூரிக்கு அருகாமையில் ஓர் ஞானவயிரவப் பெருமான் ஆலயம் அமைந்துள்ளது. கல்லூரியில் புதிதாக எந்த ஒரு வைபவமும் ஆரம்பிக்க முன்பு வைரவப் பெருமானுக்கு பூஜை செய்விக்கப்படும். உதைபந்தாட்டம், கிரிக்கெற் போட்டிகள் தொடங்கமுன்பு விளையாட்டு வீரர்கள் வயிரவப்பெருமான் சன்னிதானத்திற்கு சென்று கற்பூரம் ஏற்றி, தேங்காய் உடைத்து வழிபட்ட பின் விளையாட்டு போட்டிகளுக்கு செல்வார்கள். சில வருடங்களுக்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் எமது கல்லூரி பல இடங்களுக்கு இடம்மாற்றப்பட்டு பல சிரமத்தின் மத்தியில் சமயப் பணிகளுடன் இயங்கி வந்தது. நடராசப்பெருமான் திருவருளால் மீண்டும் அம்பனை கிராமத்திற்கு திரும்பி வந்து பழைய பொலிவுடன் செயல்படுகின்றது என்றால் அதற்கு காரணம் பாவலர் துரையப்பாப்பிள்ளையின் தன்நலம் இல்லாத கல்வித்தொண்டும் சைவத்தின்பால் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையுமாகும்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்

யோ. சிவலிங்கம்,
முன்னாள் தலைவர்,
மகாஜனா கல்லூரி பழைய . மாணவர் சங்கம்
பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

● அ. ரவி

# வாணி வீடு செல்லும் வழி



எனது வீட்டுக்கும் எங்களது கல்லூரிக்கும் இடையில் எவ்வளவு தூர இடைவெளி இருக்கும்.? குத்து மதிப்பாக ஒன்றரை மைல் இருக்கும். அதனை 1971 ஜனவரி முதலாம் கிழமையிலிருந்து நடக்கவும் கடக்கவும் தொடங்கினேன். அந்த நாள் பனிக்குளிரெடுத்த காலம்பறை. கூதலோடிய காலைக்கு என் மகிழ்வு வழுக்கையாற்றங்கரையில் இருந்த பனைகளிலும் விட உயர்ந்தது. கிராயிட்டி வைரவர் கோயில் ஆலமரத்தையும் விட அகன்றது.

புறப்படும் நேரம், காலம்பற ஏழேமுக்கால் மணிக்கு காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையின் முதற்சங்கு ஊதுகின்றது. அதனைக் காவிவந்து என் வீட்டு வளவுக்குள் எறிகிறது வாடைக்காற்று. அப்போது புத்தகக் கட்டுக்களுடனும், சாப்பாட்டுப் பெட்டியுடனும் படலையைத் திறப்பேன். சங்கக்கடை தாண்டி கூந்தஞ்சீமாவடி வருகிறபோது எட்டுமணியான் இரண்டாம் சங்கு ஊதுவது கேட்கும். அவ்வாறே நிகழ்கின்றது பின்னேரமும். மூன்றேமுக்கால் மணியான் முதற்சங்கு ஊதுகின்ற நேரம் பள்ளிக்கூடத்தின் கேற்றை தாண்டுவேன். இரண்டாம் சங்கு ஊதுகிற நாலுமணிக்கு நான் வந்துவிட்டிருக்கிற இடம் புதுறோட்டுச் சந்தி தாண்டி அய்யற்றை கிணத்தடி. ஆனால் பின்னேரம் சங்கூதல் சத்தம் கேட்க, எந்த இரைச்சலும் விடுகிறதாயில்லை.

சோளகக்காற்றுக் காலங்களில் சங்கூதல் கேட்க எந்த நியாயமும் இல்லை. சோளகக் காற்று என்ன செய்கின்றது? சங்கூதல் சத்தத்தை அள்ளிக் கொண்டு ஒன்றுக்கும் உதவாத இந்து சமுத்திரத்தின் கடலுக்குள் கொட்டுகின்றது. செம்படவர்களுக்கு எதற்கு ஏழேமுக்கால் மணியும் எட்டுமணியும்.

ஆனால் சோளகம் தன்னை அறியாமலே ஒரு நன்மை செய்துவிடுகின்றது. திருவிழாவில் ஒலிக்கிற லவுட்ஸ்பீக்கர் பாடல்களை அலை அலையாகக் கொண்டு வந்து காதிற்குள் அனுப்புகின்றது. அப்படிப் பள்ளிக்கூடம் முடிந்து நமக்குக் கேட்டவை, அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயிலின் திருவிழாப் பாடல்கள். வடக்கு வீதியின் மேளச் சமாவின் கடகடப்பைக் கூட காதிற்குள் கேட்டோம்.

அழகிய பனைகள் வரிசையாக வீதியில் இருப்பதால் அம்பனை என்னும் பெயராயிற்று என்றார் ஆறுமுக வாத்தியார். அவரே இன்னொன்றும் சொன்னார். மகாஜனங்களுக்காக உருவாக்கப்பட்டது இக்கல்லூரி. அதுவே மகாஜனாக் கல்லூரி. பள்ளிக்கூடம் போன முதல் நாள் மேல்மாடியில் நடந்த கூட்டத்தில் ஆறுமுக வாத்தியார் இதனைச் சொன்னார்.

மேல்மாடி என்பது துரையப்பா ஹோல் என்றும் கூட்டத்தை அசெம்பிளி என்றும் அறிய கொஞ்ச நாளாயிற்று. அவ்வாறே ஆண் வாத்தியாரை சேர் என்றும் பெண் வாத்தியாரை ரீச்சர் என்றும் அறியவும் அதே நாட்களாயின. அதே மாதிரி இன்னொன்றையும் இரகசியமாக அறிந்தேன். ஆறுமுக வாத்தியாரை பட்டினத்தார் என்று பட்டம் சொல்லி அழைக்கிறார்கள்

அளவெட்டி சீனன்கலட்டிப் பள்ளிக்கூடத்தில் விசாலாட்சி வாத்தியார் வகுப்புக்கு வருகின்ற போது வணக்கம் வாத்தியார் என்று எல்லோரும் எழும்பி சொல்கின்றோம். இங்கு எல்லோரும் எழும்பி குட்மோர்னிங் சேர் என்கிறோம். அல்லது குட்மோர்னிங் ரீச்சர். அவர்கள் படிப்பித்து விட்டு போகிற போது தாங்க்யூ சேர் அல்லது தாங்க்யூ ரீச்சர். எங்களுக்கு இப்பொழுது ஆங்கிலச் சொற்கள் வாயினுள் புகுகின்றன. அது புதினமாகவும் சந்தோசமாகவும் இருந்தது. பெரிய பள்ளிக்கூடமெண்டால் அப்படித்தான் இருக்கும்.

அம்மம்மா அதைத்தான் சொன்னார் 'ராசா நீ பெரிய பள்ளிக் கூடத்திலை படிச்சு பெரிய ஆளா வரவேணும்.' அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அந்தக் கனவு இருந்தது. எனக்கும் கூட. அக்கா அந்தப் பெரிய பள்ளிக்கூடத்திலதான் படிக்கின்றா. படிக்கிறதுக்கு அக்கா சூட்கேசில புத்தகங்கள் அடுக்கிக்கொண்டு போறா. ரிபன்பொக்சுக்குள்ளை சாப்பாடு. அதெல்லாத்தையும் விட இதுதான் முக்கியம். நடேசு வாத்தியாரின்ரை வொக்சோல் காரிலை டிக்கீக்கை சூட்கேசை வைச்சிட்டு பதினைஞ்சு பேரில ஒராளப் போறா. நாங்கள் மாதத்திலை ஒருக்கா காரிலை ஏறுறதே அபூர்வம். அக்காவெண்டால் ஒவ்வொருநாளும் போறா. அதுக்கு மாசம் பன்னிரண்டு ரூபாயை அப்பா குடுக்கிறார்.


மகாஜனாப் பள்ளிக்கூடத்திலை படிக்கக் கிடைக்கிறது லேசான விசயமில்லை. அதுக்கு 1970 மார்கழியிலை ஒரு சோதினை எடுத்தன். கணக்கிலையும் தமிழிலையும் தான் அந்தச் சோதினை. அது எனக்குக் கஸ்ரமில்லை. எனக்கும் சூட்கேசிலை புத்தகங்களை வைச்சுக்கொண்டு போக சாப்பாடு கட்டிக்கொண்டு போக அந்தச் சோதினை வழிவகுத்தது. இனி சோதினை என்று சொல்லாமல் எக்ஸாம் என்று சொல்லவும் வழிவகுத்தது. சோதினைப் பேப்பரிலை எனது பெயரை எழுதாமல் எக்ஸாம் பேப்பரிலை இன்டெக்ஸ் நம்பரை(சுட்டிலக்கம்) எழுதவும் அது செய்தது. மேலும் எக்ஸாம் எழுதுவது என்றால் பன்னிரண்டு ரூபாவுக்கு பசிலிற்றிஸ் பீஸ் கட்டி நோஅரியர்ஸ் எண்ட துண்டு வாங்கினால் தான் இன்டெக்ஸ் நம்பர் கிடைக்கும். அது கிடைத்தால் தான் எக்ஸாம் எழுதலாம் என்ற நிலைமைக்கும் வழிவகுத்தது.

நான் இப்ப வேறை ஆள். எனக்கு இது வேறை உலகம். வேறை நிறம். வேறை வாசம். வேறை மண். வெடிக்காய் விளையிற மண்.



படிப்பகம்

www.padippakam.com



## வாணி வீடு செல்லும் வழி - 2

சின்னமாமா சூட்கேஸ் வாங்கித்தந்தார். அது அக்காவின்ரையிலும் பார்க்கச் சப்பட்டையான சூட்கேசு. கொன்னையன் குணத்தானின் மூக்குப் போலச் சப்பட்டை. நீலக்காற்சட்டையும், வெள்ளைச் சேட்டும் அம்மா தைப்பிச்சது. இந்தா மோனை பிடி என்று புதுச்செருப்பு தந்தது அம்மம்மா. அப்பா யாழ்ப்பாணம் போய்வந்ததில் மெற்றலிக்ஸ் கொம்பாஸ் பெட்டி கையில். அப்பா வேறு சிலவும் வாங்கினார். சிவப்பு மட்டை போட்ட மூன்று கட்டு நான்கு கட்டு மொனிற்றேர்ஸ் கொப்பி. பிளாற்றினம் பேனை. குயிங் நீலமைப் போத்தல்.

எனது கவலைக்கும் சந்தோசத்துக்கும் அதில் கொஞ்ச விசயங்கள் இருந்தன. சூட்கேஸ் இல்லாமல் வந்தோர் வகுப்பில் அனேகம் பேர். சூட்கேஸ் கொண்டுவந்தோர் பீற்றரும், பூபாலசிங்கனும், மகேனும் மாத்திரமே. அதோடை நானும் கூட. கொம்பாஸ் இல்லாமல் இருந்தது கனபேர் என்றாலும் பீற்றர், பூபாலசிங்கம், புனிதவதி, பாமினி இவர்கள் ஒக்ஸ்போர்ட் கொம்பாஸ் வைத்திருந்தார்கள். அந்தக் கொம்பாஸ் பெட்டிக்குள் வாசிற்றி பென்சிலும் இருக்கும். மெற்றலிக்ஸ் கொம்பாஸ் பெட்டியில் வழமை போல மஞ்சள்நிற இலப்பென்சில். அனேகர் வைத்திருந்தது மை கக்கிற சியால் பேனைதான்.

பேனைக்கு ஒரு வரிசை இருந்தது. சியால் பேனை (2.50 ரூபா) நேவி பேனை (3ரூபா) கேஜி பேனை (5ரூபா). பிளாற்றினம் பேனை(7.50 ரூபா) பைலற் பேனை (12 ரூபா). இதில் பைலற் பேனை வைத்திருந்தது பீற்றர் ஒருவனே. அதற்கு அவன் பார்க்கர் மை விடுகிறானோ தெரியாது. என் பிளாற்றினம் பேனைக்கு குயிங் மை விடுகிறேன். சிலர் சியால் பேனையும் கொண்டு புக் டிப்போவுக்கு போகிறார்கள். மனேச்சர் ஐந்து சதத்திற்கு பேனை நிரம்ப மை விட்டுக் கொடுக்கிறார். அதே அவர்களது பேனையின் நிப் கட்டை வெடித்து மை கக்குகின்றது. சேட் பொக்கற்றிலும் பேனை பிடிக்கின்ற மூன்று விரல்களிலும் நிறைய மை அப்பிக் கிடக்கின்றது. ஐந்து சதத்தான் மையில் ஆகக் குறைந்தது ஒரு சதத்தான் மை இப்படி கக்கி வீணாப்போகின்றது.

என் வகுப்பு ஆறு சீ. மூத்திரம் மணக்கிற தகரக் கொட்டகையின் நடு வகுப்பு. ஒற்றைப் பின்னல் விட்டு இடைவேளைக்குப் பிறகு வெற்றிலை பாக்குச் சப்புகின்ற விசாலாட்சி வாத்தியார் இதற்கு வகுப்பு வாத்தியார் இல்லை. அவாவைச் சீனன்கலட்டியிலை விட்டிட்டு வந்தது கவலைதான். இப்ப சின்னக் கொண்டை போட்டு சிரிச்ச முகமாக இருக்கிற ரோகிணி ரீச்சர்தான் கிளாஸ் ரீச்சர்.

போய் ஒரு கிழமை ஆகேல்லை. போயா, போயா முன்தினம் எண்டு லீவு விட்டிச்சினம். சந்தோசமா வீட்டிலை இருந்திட்டு பிறகு வாங்கோ பிள்ளைகள் என்றா ரோகிணி ரீச்சர். எனக்கு அது சந்தோசமா இருந்தது. அதற்குப் பிறகு எப்படா போயா, போயா முன்தினம் வரும் என்று ஏங்க ஆரம்பித்தேன்.

ஜய ஜய மாஜன ஜய சுப மாதா
ஜய ஜய மாஜன ஜயகே

இதுதான் எங்களின்ர கல்லூரிக் கீதம் என்றால் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா

என்று நாகம்மா ரீச்சர் கொடிப்பாட்டு பாடினால் அதிலும் எனக்கு உவப்பில்லை. எனக்குத் தெரிந்த கல்லூரிக்கீதம் கொடிவணக்கப் பாடல் எல்லாமே ஒரே ஒன்றுதான்.

ஜனா ஜனா மகாஜனா
அப்பே ஜனா மகாஜனா
ஏலுமா? ஏலாது
ஏலுமெண்டால்? பண்ணிப்பார்

நான் படித்த பத்து வருசத்திலும் என் கல்லூரிக் கீதம் இதுவே. இன்னும் சொன்னால் படிக்கவா மகாஜனாவுக்கு போனேன்? இல்லை இல்லவே இல்லை. பந்தடிக்க, பந்தடி பார்க்க அங்கு போனேன்.

நான் போன முதல் வருசத்தில் முதல் மாதத்திலேயே(1971 ஜனவரி) மகாஜனா ஒல் சிலோன் சம்பியன் ஆனது. பனிக்குளிருக்கு குளிரோடு குளிராக வந்தது குளிர்ந்த அச்செய்தி.

தெல்லிப்பளைச் சந்தியில் வந்திறங்கினார்கள் மோகன்ராம், கெய்சர், சந்திரலிங்கம், இராஜகாந்தன், சமரக்கொடி, கீர்த்தி, சிறிகாந்தன்.. இன்னும் பெயர் மறந்துபோன எங்கள் வீரர்கள். எங்கள் வீட்டடியில் இருந்து கோவிந்தண்ணை தவிலையும் தூக்கிக் கொண்டு ஓடிப் போய்விட்டார். இரண்டு பெற்றோல்மாக்ஸ் வெளிச்சம் பிடிச்சு வருகிறார்கள் வீரர்கள். வெள்ளனவே எழும்பி பள்ளிக்கூடம் போனேன். இந்த மற்ச் பற்றி நிறையக் கதைகள் தும்பிகள் போல் பறந்து திரிந்தன. மோகன்ராம் பிறவளமாக நின்று ரேர்ண் பண்ணித்தான் கோல் அடிச்சவர் என்றது ஒரு தும்பி. பிறின்சிப்பல் மகாதேவன் சேர் பிலாமரத்துக்கும் மாமரத்துக்கும் கீழை எல்லோரையும் கூட்டிவைத்து வெற்றிக்கிண்ணத்தைக் காட்டி வெற்றியை அறிவித்தார். வேறொன்றையும் அறிவித்தார் இன்று பாடசாலை விடுமுறை.

மழை பொழிகிற மாரிகாலத்தில் சந்தோசப்பட்டுத்திரிய கனக்க விசயங்கள் இருந்தன. மழை பெய்தால் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை என்பது ஒரு சந்தோசம். பள்ளிக்கூடம் போனாப்பிறகு மழைபெய்தால் அது குதூகலம். கூக்காட்டலாம். மழைச் சத்தத்துக்குள்ளை ஒருத்தரும் படிப்பிக்க மாட்டினம். மழை பெய்யுது என்று பள்ளிக்கூடத்தையும் அரைநேரத்துடன் விட்டிடுவினம்.

அதைவிட வேறும் பல சந்தோசங்களை மாரிகாலம் தன்னுள் பொதித்து வைத்திருந்தது. பத்துநாட்களுக்கு சரஸ்வதி பூஜை தருகின்றது மாரிக்காலம். புது உடுப்புப் போட வைக்கும் தீபாவளியையும் மழைக்காலம் தந்து விடுகின்றது. யாவற்றிலும் மேலாக மாரிகாலம் தரும் ஒன்று உன்னதமானது. அது புட்போல் மற்ச். மகாஜனாவின் முதலாம் பிரிவு எப்படியோ சம்பியன் அடிக்கிற போது வாடையின் குளிர்காற்று வீசும்.

மகாஜனா ப.மா.ச.-பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

முன்வீட்டு முருகனண்ணை மகாஜனாவின் மற்ச் நடக்கிற நாட்களிலே பின்னேரக்கள்ளை இறக்கிறேல்லை. மாரிகாலத்துக்கு பின்னேரக்கள்ளும் அருந்தல். மத்தியானம் சாப்பிட்ட இரண்டு மணிக்கே முருகனண்ணை வெளிக்கிட்டார். .... ரெர்லின்சேர்ட் போட்ட நானும் அவர் கையைப் பிடித்தேன். அப்பா முருகனண்ணையிடம் இரண்டு ரூபா காசு குடுத்தார். பெரியவிளான் சந்திக்கு நடந்துபோய் 788 பஸ் எடுத்தோம். அது மகாஜனாவுக்கும் ஸ்கந்தாவுக்குமான சம்பியன் மற்ச்.

எனக்கு கால்நடுங்க அந்த மற்ச்சை பார்த்தேன். உள்ளங்கையிலும், உள்ளங்காலிலையும் வேர்வை கசியுது. நான் இரவிரவா அம்மாளை நேர்ந்திருக்கிறன். சுவாமி அறைக்குள்ளை நாலைஞ்சுதரம் கடவுள்மார் எல்லோரையும் வேண்டினன்.

சம்பியன் மர்ச்சில மகாஜனாவை வெல்லப்பண்ண வேணும். வெளிக்கிடேக்க வடிவா வீபூதி அப்பி பிறகும் மன்றாட்டமாய் கடவுள்மார் எல்லாரிட்டையும் கெஞ்சினன். ஆனாலும் கால் நடுங்குது. பின்னேர வெய்யில் பண்ணைக் கடலுக்கை விழுகின்ற நேரம் முருகனண்ணைக்கு வலுபுளுகம். பார்த்தியா ராசா என்ன அடி! முயலின்ர விளையாட்டைப் பாத்தியே ராசா. பந்தையும் கொண்டு என்ன ஓட்டம் ஓடுறான். ச்சு! அடியெண்டால் அடிதான். மகாஜனாவை வெல்ல யாராலும் ஏலுமே? அவர் சிரிச்ச ஓட்டைப் பல்லால் வெத்திலை பாக்குத் துப்பல் தெறிச்சுது..!

அடுத்த வருசம் (1972) வந்தது. அது அப்பாவோடை பந்தடி பார்க்க போன வருசம். அது கட்டாயம் பார்க்க வேண்டிய சம்பியன் மற்ச். யாழ்ப்பாண வரலாற்றின் சம்பியன் மற்ச்சிலை அவ்வளவு கோல் அடிச்சதா சரித்திரம் கிடையாது. மொத்தம் ஆறு கோல். அவ்வளவும் அடிக்கக் காரணமாக இருந்தது ஒரு கேள்வி அல்லது வாக்கியம். பட்டிக்காடா பட்டணமா

அது பட்டிக்காட்டு மகாஜனாவின் ரோச நரம்புகளைச சட்டெனவே சுண்டியது. அந்த வருசச் சம்பியன் மற்ச் மகாஜனாவுக்கும் சென்றல் கொலிச் எனப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையில் நகரத்தின் திமிர்த்தனம் பிடித்த கல்லூரி அது என்று நான் நினைத்தேன்.

எங்கள் கல்லூரியோவென்றால் முன்னால் வயல்வெளிக்குள்ளால் இருந்து சோளகம் குபுகுபுவெனப் பாய்ந்து வருகிற பள்ளிக்கூடம். வெளிச்சுவரில் செம்பாட்டு மண் பூசப்பட்டிருக்கும். பக்கத்தில் ஒழுங்கை என்பதால் யன்னல்கம்பி உடைபட்டிருக்கும் வகுப்பறைகள். எண்ணெய் வழிந்த தலையுடனும் நீலமை கசிந்த பொக்கற்றுடனும் சில மாணவர்கள் வருகின்றார்கள். வெள்ளன எழும்பி தோட்டவேலை செய்து போட்டு, நேரம் போச்சுதே எண்டு ஓடி வாற மாணவர் இருக்கினம். காலின் பித்த வெடிப்புக்களில் செம்பாட்டு மண் செருகுப்பட்ட வாத்திமார் படிப்பிக்கிற பள்ளிக்கூடம். நீட்டி முழக்குவானேன்.? பட்டிக்காட்டு பள்ளிக்கூடம். மண்ணில் விளைந்த மகாஜனா எண்டதாலைதான் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களும் கல்லூரிக் கொடியை மண்ணிறத்திலும் வெள்ளையிலும் எழுதுவித்தாரோ?

அதாலைதான் சம்பியன் மற்ச் எண்ட உடனை சென்றல் கொலிச்சார் எழுதிச்சினம் பட்டிக்காடா பட்டணமா யாழ்ப்பாண நகரம் முழுவதும் அந்தப் போஸ்ரர் ஒட்டப்பட்டிருந்தது.

மனோரஞ்சனுக்குக் கோபம் இருந்தது. ஆவேசம் இருந்தது. ஓர்மம் இருந்தது. வன்மம் இருந்தது. மேலாக சாதிக்கும் வலிமை இருந்தது. புறப்படுகின்ற போதே மகாஜனாவின் நடராசர் கோயிலில் சத்தியம் செய்தான். நான் இரண்டு கோல் போடுவன்.

ஜெயராஜ் வலதுமுனைக்குப் பந்தைத்தள்ளி விட்டான். நுனிக்காலால் பந்தை எம்பிவிட்டு ஓடினான் மனோரஞ்சன். வேகம். வேகம். ஒருவராலும் அவன் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதிருந்தது. அவுட்லைனின் அருகுடன் டபிள் போட்டு, சுழித்து, வளைத்து, நெளித்து வெட்டி எதிராளியைத் தளம்பப்பண்ணி, மத்தியை நோக்கித் தன்முனைப்பைக் குவித்து, இரண்டு காலாலும் மாறி மாறி பந்தை உருட்டித் தள்ளி, வேகம் கொள்கிறான். பந்து காலுக்குள், பந்துக்குள் கால். இரண்டின் வேகமும் ஒன்று.

மனோரஞ்சனின் வேகத்திற்கு ஈடுகொடுக்கிறான் ஜெயராஜ். முயலின் வேகமும் அதுவே. எதிராளிகள் துரத்துகிறார்கள் வேட்டைநாய்களாக விரைகின்றனர் மனோரஞ்சனும், முயலும், ஜெயராஜ்ஜும்.

மனோ மனோ முயல் கத்துகின்றான். ஒன்றையும் கேட்கிற மனநிலையில் மனோரஞ்சன் இல்லை. இஞ்சாலை தட்டிவிடு. திரும்பிப் பார்க்கிறானேயில்லை மனோரஞ்சன். உருத்திர தாண்டவம் ஆடுகிற நடராசனா மனோரஞ்சன்.?

எதிராளிகள் இருவர் மூவராகத் துரத்துகிறார்கள். அவன் எதையும் கவனியாதவனாக இருக்கிறான். அவனுக்கு ஒன்று மாத்திரம் தெரிகின்றது. வலைசூழ்ந்த கோல்போஸ்ற் இலக்குப் பார் பந்தை உதை.

வெளியிலிருந்து ரீப்றி கத்துகிறார். பாலு பிறீயா வாறான். அவனிட்டை குடுத்திட்டு றைற்றுக்கு ஓடு. எது ஒன்றையும் மனோரஞ்சன் கேட்கிறான் இல்லை.

மனோரஞ்சனின் வேகத்துக்கு கம்பங்கள் காத்து நின்றன. எதிர்க்குழுவின் கோல்கீப்பர் முகம் கறுத்து, திகிலுடன் புயலை எதிர்பார்த்து நடுங்குகிறான். கலங்குகிறான். முழுசுகிறான். முகத்தில் வியர்வை துளிர்க்கிறது. தெரிகிறது வருவது புயல். மனோரஞ்சன் என்ற அதிரடிப் புயல். பட்டிக்காடா பட்டணமா என்று எழுதாமல் விட்டிருக்கலாமோ? எல்லாம் பிழைத்துப் போயிற்று. எழுதியது மீசை துடித்த கட்டை வெள்ளை வாத்தி. இங்கு நான் கிடந்து நடுங்குகின்றேன்.

பந்து அதிர்ர... கால் அதிர்ர... பார்வையாளர் அதிர்ர... கம்பம் அதிர்ர... வலை அதிர்ர... காற்று அதிர்ர... நிலம் அதிர்ர... நீ அதிர்ர... நான் அதிர்ர... நாடு அதிர்ர...ஓர் உதை! ஓங்கி ஓர் உதை!

பந்துக்கு ஓர் உதை. பட்டிக்காடா பட்டணமா விற்கு ஓர் உதை. மகாஜனாவின் வெற்றியைச் சொல்ல ஓர் உதை. மகாஜனாவின் வீறாப்பைக் காட்ட ஓர் உதை. உதை... உதை... உதை...

வலை பொருமிப் பொருமி அடங்கிற்று. மத்தியஸ்தர் சீவரத்தினம் கோல் என்று நீண்ட விசில் ஊதினார். நான் இதற்கு எட்டுப் பந்திகள் எழுதினேன். ஆனால் ஒரு நிமிடத்திற்குள் அந்தப் பந்து வலையைப் பொருமிப் பொருமி அடங்கப் பண்ணிற்று. மகாஜனாவின் ஓர்மம் அது. சீவரத்தினம்ஆறு முறை கோல் என்று நீண்ட விசில் ஊதினார். அந்த இறுதி ஆட்டத்தில் மனோரஞ்சன் இரண்டு கோல்களையும், முயல் இரண்டு கோல்களையும், ஜெயராஜ், செல்வராஜா ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com

கோல்களையும் போட்டு ஆறு கோல்கள் ஆயிற்று. பட்டிக்காடு ஆறை பட்டணத்திற்குச் சாத்தியது.

நிறுத்துகின்றேன். இல்லையெனில் எங்கள் சாதனை இன்னும் நீண்டுகொண்டே போகும். முடிவாக என்ன சொல்ல? என் வாணி அழகானவள். அன்பானவள். அறிவு நிறைந்தவள். வாணியின் மைந்தன் நான் என்பது எனக்கு மகாபெருமை. மகாஜனா மாதாவின் மடியில் சுருண்டுகிடக்க உள்ளம் குளிர்கின்றேன்.

என்மொழிநடை பிடித்ததா? தொகுத்த விதமும் வெளிப்படுத்திய பாங்கும் உங்களைக் கவர்ந்ததா? ஓம் எனில், என்னைப் பாராட்டாதீர்கள். மகாஜனா அன்னைதான் மொழியாற்றல் அத்தனையையும் எனக்குத் தந்தாள். ஆனால் அவள் உங்கள் பாராட்டிற்கு எல்லாம் அப்பாற்பட்டவள். அள்ளி அணைக்கின்றேன் அம்மா.

❖

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்க உதைபந்தாட்டப் போட்டி
முதற்பிரிவு வெற்றிவீரர் — 1971
வெற்றி விருதுத் தொடர் — ஐந்தாம் ஆண்டு



யா. பா. வி. ச. முதற்பிரிவு உதைபந்தாட்ட வெற்றி வீரர் — 1972
வெற்றி விருதுத் தொடர் — ஆறும் ஆண்டு





படிப்பகம்

www.padippakam.com



# தழும்பு

சிறுகதை

இராவத்தை வயிரவரில் எனக்கு பயமிருந்தது. ஆனா நல்ல நம்பிக்கை. பக்தியுமிருந்தது. கோயிலுக்கு பின்னுக்கு நல்ல பத்தைக்காடுகள். முன்னுக்கு வயல்வெளி. ஆள் நடமாட்டம் குறஞ்ச இடமெண்டதாலயும் எனக்குப் பயமாயிருந்தது. கோயிலுக்கு முன்னால நிக்கிற புளியமரமும் வேற வெருட்டிக்கொண்டுதான் நிண்டுது. அந்தப்புளியில பேய் இருக்கிறதாயும் ஆக்கள் கதைக்கிறதால நான் சரியா பயந்துபோயிருந்தன். கோயிலுக்கு முன்னால ஒரு கிணறு இருந்தது. அது கோயில் கிணறுதான், அந்தக் கிணத்தில ஆரும் தண்ணி அள்ளினதா நான் கேள்விப்படேல்ல. சுத்தவரவெல்லாம் வடிவாக் கட்டியிருக்கிற அந்தக் கிணறு, கொஞ்ச மழை பெய்தாலும் முட்டிப்போய்விடும். மாரி காலத்தில எந்தக் கிணறு முதல்முட்டுது எண்டு நாங்கள் தேடித்திரியுற காலத்தில அந்தக்கிணத்தடிக்குத்தான் முதல்ல ஓடுவம். தள்ளிநிண்டு பாத்திட்டு ஓட்டமா வந்திடுவம். அவ்வளவுதான். அப்பிடி முட்டிப்போயிருக்கேக்கதான் ஒருநாள் என்ர சிநேகிதன்ர அம்மா விழுந்து தற்கொலை செய்து கொண்டா. அந்தக் கோயிலுக்கு கனக்க ஆட்கள் போறதில்லை. பின்னேரத்தில் பூசை நடக்கேக்க கொஞ்ச சனம் நிக்கும். பகல் பூசை நடந்தா சிலவேளை ஐயர் மட்டும் நிப்பர். கோயில் பூசைநேரங்களில் அநேகமாக 'இருபாலை அப்பாவை' காணலாம். அவர்தான் கோயில் கட்டினவராம். எண்பது வயதான மெல்லிய நீண்டுபோன அந்த உருவம் தூணோரம் சாய்ஞ்சு இருமிக்கொண்டு இருக்கும். கோயில் கட்டினவர் எண்ட 'பெரியமனுசத்தனம்' எதுகும் கிடையாது. கடைசி வருத்தக்காலத்தில அவரயும் காணக்கிடையாது. பகல்ல கூட அந்தப்பக்கத்தால போகேக்க என்ரவேகம் என்னையறியமால் கூடித்தான் நிக்கும். வாய் வயிரவரை நேந்து முணுமுணுத்தபடி இருக்கும். வேகமா ஓடி மறைஞ்சிடுவன். ஆனாலும் சுத்திவர மதில் இருக்கிற அந்தக்கோயிலின்ர ஆதிமூலத்துக்கு நேர லைன் பண்ணி ஒருக்கா, சின்னனா இருக்கிற கந்தசாமியார் கோபுரத்துக்கு நேரா லைன் பண்ணி ஒருக்கா, முப்பதுபாகையளவில சரிஞ்சுபோயிருக்கிற றோட்டில, கோயில்ல இருந்து ஐம்பது மீற்றர் தள்ளி மூலஸ்தானத்துக்கு நேரெடுக்கிற பொயின்ரில ஒருக்கா எண்டு மூண்டுதரம் ஸ்பொட்பண்ணி செருப்புக்கழட்டி கும்பிடாமல் போறதில்ல. சுத்தவர ஆக்களப் பாத்துப்போட்டு, செருப்புக்களட்டுறது கும்பிடுறது எல்லாம் ஒரு செக்கன் கணக்கில நடக்கும். ஆக்கள் பாத்தா எனக்கு ஒரு மாதிரி. என்னை ஏதாவது பைத்தியம் எண்டு நினைப்பினமெண்டோ அல்லாட்டி வேற ஏதாவது காரணமிருக்கோ எனக்குத் தெரியாது. நான் ஆக்களுக்கு முன்னால கன விசயங்கள் செய்ய விரும்பிறதில்ல.

அண்டைக்கு வீட்டைபோன நேரத்தில இருந்து அம்மாக்கு பக்கத்தில ஒருக்கா, அன்ரிக்குப்பக்கத்தில ஒருக்கா, அம்மம்மாவுக்கு பக்கத்தில ஒருக்கா எண்டு ராவத்தை வயிரவர் புராணம் பாடிக்கொண்டிருந்தன். எப்படியும் இந்தக்கிழமை அரிச்சனை செய்விக்கவேணுமெண்டது என்ர வேண்டுதல். வயிரவர் தான் என்னைப்போட்டு இந்த ஆட்டு ஆட்டுறார் எண்டு உறுதியாய் நம்பினன். இதுக்கு எனக்கு இன்னொரு நியாயமான காரணமும் இருந்தது.

ராவத்தை வயிரவர்கோயிலுக்கு முன்னால வயல். வயலுக்கும் முன்னால ஒரு மாவளவு. மாவளவு நாகநாதவாத்தியார் வீட்டுக்கு பின்பக்கமாயும் இருந்தது. மற்றப்பக்கமெல்லாம் வயல்வெளிதான். நல்ல சோளகக்காலத்தில அந்த வெளிக்க கொடியேத்த எண்டு, செந்தில், தில்லை, சிறீ, ஜெயபால், அப்பன் எண்டு நாங்கள் கொஞ்சப்பேர் வருவம். இவ்வளவுபேருக்கும் பள்ளிக்கூடம் போறபாதையும் அது எண்டதால அந்தவயல், வயிரவர்கோயிலெல்லாம் நல்ல நட்பாயும் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அண்டைக்கு நானும் ஜெயபாலும் மட்டும்தான் பட்டம் விடவந்திருந்தம். விளையாட்டு விளையாட்டாக் கட்டின சீனன் பட்டம் ஆச்சரியம் தாற மாதிரி பறந்திது. நாங்கள் கொண்டுபோன நூலெல்லாம் முடிஞ்சுபோச்சு. எங்களுக்கு நல்ல சந்தோசம். கடைசிநுனியைக் கொண்டுபோய் பூவரசங்கொப்பொண்டில கட்டேக்க ஜெயபால் கண்டிட்டான். நல்ல கிளிச்சொண்டு மாங்காயள். இவ்வளவு மாங்காயளும் இப்படி அநாதரவான வளவுக்க பூத்துக்குலுங்கினது எனக்கு நம்பமுடியாமல் இருந்தாலும் அதுக்கு காரணங்களும் இருந்தது. ஒண்டு நாகநாத வாத்தியாற்ற கண்காணிப்பில் இருந்தது. ரெண்டாவது வயிரவர். ஆராவது கல்லெறியத் தொடங்கினால் காணும் 'ஆரடா அது' எண்டுகொண்டு நாகநாதவாத்தியாரோ அல்லது அவற்ற பிள்ளையளோ வந்துவிடுவினம். இல்ல முந்திக்கொண்டு நாய் துரத்தத் தொடங்கிவிடும்.

ஜெயபால் மாங்காயளக் காட்ட எனக்கும் ஆசை வந்திட்டுது. அவன் கல்லெடுத்து அதுக்குள்ள குறிவைக்கத்தொடங்கீட்டான். தேவையில்லாத குறியள். அவனிட்ட வேகம் இருந்தது. ஆனா அது மோட்டுத்தனமான நாயைக் கூப்பிடுற வேகம். அவனை நிப்பாட்டச் சொல்லிப்போட்டு, வைரவர நேந்துகொண்டு மெதுமெதுவா குறிவைச்சன் தொப்தொப்பெண்டு விழுந்தது. அவன் சந்தோசமா பொறுக்கி ஒவ்வொண்டொவ்வா சேத்தான். றோட்டால சைக்கிள்·ஆக்கள் போறநேரங்களில நாங்கள் ஆடிப்பாடி பட்டம் விட்டம். சைக்கிள் போக தொடர்ந்தம். ஒண்டு, ரெண்டு,பத்து பதினைஞ்சு..... எல்லாம் பெரிய பெரிய மாங்காயள். ஜெயபால் சண்டிக்கட்டுக்குள்ள போட்டான். இப்ப இவ்வளவத்தையும் எப்பிடி வீட்ட கொண்டுபோறது. கொண்டுபோனால் உதைவிழும். ஜெயபால் தான் வைச்சிருக்கிறதா சொன்னான். நல்ல பலமா ஒரு காத்தடிச்சுது. எங்கட பட்டம் எங்கள விட்டிட்டு ஓடத்தொடங்கீட்டுது. மாங்காயோட ஓடேலாது. ஜெயபால் அவசரஅவசரமாய் ஒரு பத்தேக்குள்ள மாங்காயள வைச்சான். நான் ஓடத்தொடங்கீட்டன். ஞாயமான தூரம்வரையும் கலைச்சுப் பாத்தம். முடியேல்ல. தூரப்போய் ..... பனையளுக்க போய் அது காணாமல் போட்டுது. 'சரி, இனி ஒண்டும் செய்யேலாது. திரும்புவம்' எண்டான் ஜெயபால். எனக்கு முடியேல்ல. அழுகைஅழுகையாய் வந்திது. திரும்பிவரவும் மனமில்லாமல் சோர்ந்தபடி வந்துசேந்தம்.

ஒரு பதினைஞ்சுநிமிச இடைவெளிதான் இருக்கும். மாங்காயள வைச்ச இடத்தில காணேல்ல. ஜெயபால் சுத்திச்சுத்தி எல்லாப்பக்கமும் பாத்தான். ஒண்டு கூட இல்லை. எனக்குஎல்லாம் வயிரவற்ற விளையாட்டாத்தான் பட்டிச்சுது. சரியா பயந்துபோனன்.

இது நடந்து இரண்டுமூண்டு நாளாலதான் அந்தச்சம்பவம் நடந்தது.

அண்டைக்கு பின்னேரம் மூண்டுபாடமும் பிறீ இருந்தது. என்ன செய்யிறது· வீட்ட போவமெண்டான் நிமலன். வீட்டபோனா ஏன் வந்தனீ எண்டு கேள்வி இருக்கு. இருந்தாலும் நிமலன் சொன்னதும் ஞாயமாப்பட்டதால போறதெண்டு முடிவெடுத்தம். ஆனா நாங்கள் விட்டபிழை என்னெண்டா, கொண்டுபோன சாப்பாட்ட சாப்பிட்டிட்டு 'லஞ்ச்ரைம்' முழுக்க நிண்டு பந்தடிச்சுப்போட்டு 'லஞ்ச்ரைம்' முடிய மணியடிக்க புத்தகத்தை தூக்கிக்கொண்டு வெளிக்கிட்டதுதான்.

நாங்கள் போக வைஸ் பிறின்சிப்பல் ராமசாமி மாஸ்ரர் வழியில வாறார். சைக்கிள மெதுவா ஸிலோவாக்கி 'எங்க போறியள் ' எண்டார். அவற்ற கரகரத்தகுரலில். 'சேர், இண்டைக்கு சேர் மூண்டுபாடமும் பிறீ சேர். அதுதான் வீட்டபோறம் சேர்' எண்டு தடக்குத் தடக்கி தொண்டை விக்கலெடுக்க வரிசையாய் நிண்டு கோரஸ் பாடினோம். 'நடவுங்கோ ஒவ்வீசுக்கு' எண்டு போட்டு அவற்ற சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. நாங்கள் ஆளையாள் பாத்து முழுசினம். 'அவர் உவ்வளவு சோலிக்கை எங்கள எங்க ஞாபகம் வைச்சிருக்க போறார். நாங்கள் வீட்ட போவம்' எண்டான் நிமலன். 'போறவழியில திரும்பி வந்து பிடிச்சிட்டால்.....' சரி அப்ப குறுக்குப்பாதையால போவம் எண்டு சொல்லிக்கொண்டு அவன் வயலுக்க இறங்கீட்டான். நானும் பிறத்தால ஓடினன். ஆரும் எங்களத்துரத்தாமலே புதுப்புதுக் குறுக்குவழியெல்லாம் கண்டுபிடிச்சு ஓடினம். வந்து சேந்திட்டம். எனக்கு களைச்சுது. சந்தோசமும் பயமும் கலந்து கண்முட்ட அதை சந்தோசமாயே ஆக்கி ரெண்டு பேரும் மாறி மாறி சிரிச்சம். இளைச்சு இளைச்சு சிரிச்சம்.
அவன் தன்ர வீட்டுப்பக்கம் திரும்பினான். நான் என்ரபக்கம் திரும்பினேன். ரெண்டு பேரும் ஆளையாள்பாத்து சிரிச்சுக்கொண்டே ஓடினம்.

திங்கள் கிழமை பள்ளிக்கூடத்தில எந்தப் பிரச்சினையும் வரக்குடாது. ராவத்தை வயிரவரிட்ட வேண்டிக்கொண்டன். ஆனாலும் சனி, ஞாயிறு என்னால நிம்மதியா இருக்கமுடியேல்ல. நித்திர கொள்ள முடியேல்ல. திங்கள் கிழமை, வீட்டுப்பாடவேலையெல்லாம் முடிச்சுக்கொண்டு நேரத்தொடயே பள்ளிக்கூடம் போட்டன். நிமலன் கொஞ்சம் பிந்தியே வந்தான். அவன்ர முகத்தில பெரிய தழும்பு இருந்தது. என்ன எண்டு கேட்டன். அவன் ஒண்டும் சொல்லேல்ல. அவன் என்னோட கதைக்கவும் விரும்பேல்ல. எனக்கு பயம் பயமாய் இருந்தது.

முதல் பாடம் முடிஞ்சுது. எனக்கு எதுகும் ஏறேல்ல. நான் வயிரவரை நேந்தபடி வெருண்டுபோய் இருந்தேன். முதல் பாடம் முடிஞ்சு ரெண்டாம் பாடம் நடந்துகொண்டிருக்கேக்க உயர்வகுப்பு 'பிறிபெக்ற்' ஒராள் வந்து என்னையும் நிமலனையும் 'வைஸ்பிறின்ஸிப்பல்' வரட்டாமாம் என்டார். எனக்கு ஹாட் நிக்கும் போல கிடந்தது. கண்முட்டிவிட்டது. நிமலன் சர்வசதாரணமாய் முன்னுக்கு நடந்தான். கணக்குப்பாடம் எடுத்துக்கொண்டிருந்த ரோணிரீச்சருக்கு என்னைப்பாக்க சங்கடமாயிருந்திருக்கவேணும் ரோணிரீச்சரின் விருப்பத்துக்குரிய மாணவனாயும் நான் இருந்ததால 'என்ன என்ன என்ன விசயம்' எண்டா பதட்டத்தோடு. நான் கதைச்சால் என்ர கண் விழுந்திடும். 'என்னெண்டு தெரியல்ல' எண்ட மாதிரி சைகையால காட்டிப்போட்டு நிமலனுக்கு பிறகால ஓடினன்.

நிமலன் என்னப்பாக்க நான் அழுதுபோட்டன். அவன்ர தழும்பு பெரிசா தெரிஞ்சுது. 'தம்பிராசா மாஸ்ரரிட்ட சொல்லிப்போட்டுத்தான் போனனாங்கள் எண்டு சொல்லு' எண்டான். எனக்கு ஒண்டும் விளங்கேல்ல. ஆனாலும் அவன் என்னோட கதைச்சது தென்பாயிருந்தது. தழும்பு பற்றிக் கேட்டன். கண்ணுக்கு கீழ மூண்டங்குல நீளத்துக்கு குறிவைச்சது



படிப்பகம்

www.padippakam.com

மாதிரி சிவந்துபோயிருந்தது. முதல்ல மாடடிச்ச காயம் எண்டான். மாடெப்படி உப்பிடி அடிக்கும். நீ என்னத்தயோ மறைக்கிறாய் எண்டன். அதேநேரம் அது மாடடிச்சகாயமாயே இருக்கக்கூடாதோ வெண்டும் வேண்டினன். அவன் எதுக்கும் கலங்காதவன் கலங்கினான். 'வீட்டுக்கு எல்லாந்தெரிஞ்சுபோய் அப்பா அடிச்சகாயம்.' எண்டான். எனக்கு தலையெல்லாம் விறைச்சுக்கொண்டு வாற மாதிரிக்கிடந்தது. ஒண்டும் கதைக்கமுடியேல்ல. ராமசாமிமாஸ்ரரின் ஒவ்வீசுக்கு முன்னாலபோய் நிண்டம்.

நிமலன்தான் சொன்னான். 'தம்பிராசாமாஸ்ரரிட்ட சொல்லிப்போட்டுத்தான் போனாங்கள் சேர்' அவன்ர கதையில உணர்ச்சியொண்டும் இருக்கேல்ல. அவன் எல்லாத்தையும் கடந்தவன் போல இருந்தான். மாஸ்ரர் அவன்ர தழும்பபாத்தார். ஒண்டும் கதைக்கேல்ல. போய்த்தம்பிராசா மாஸ்ரரை கூட்டிக்கொண்டு வரச்சொன்னார்.

எனக்கு உதறல் எடுக்கத் தொடங்கீட்டுது. 'நீ என்னத்துக்கு அந்தாள இதுக்குள்ள இழுத்தனி?' எரிஞ்சு விழுந்தன். தம்பிராசா மாஸ்ரர் எங்கட வகுப்பாசிரியர். அவர தம்பிராசா மாஸ்ரர் எண்ணுறதவிட தம்பிராசா வாத்தியார் எண்ணுறதுதான் பொருந்தும். அந்தக்காலத்து திண்ணப்பள்ளிக்குட வாத்தியார்போல இருந்தார். வகுப்பில இருந்து ஆரும் காலாட்டக்குடாது. ஆட்டினா அடி. வாயசைக்கக்குடாது. அசைஞ்சா அடி. ஒரு ஆள் கேள்வி எண்டு எழும்பினா அவர் பதில் சொல்லமாட்டாத கேள்விவரையும் கேள்வி தொடரும். பிறகு அடி. இன்ரவேல் ரைம்ல விளையாடுற தெண்டாலும் தம்பிராசா மாஸ்ரருக்கு ஒழிச்சுத்தான் விளையாடவேண்டி இருந்தது. நிமலன்ர மோட்டுத்தனத்தால சட்டீல இருந்து நெருப்பில விழுந்தகணக்கில இப்ப எங்கடநிலம.

தம்பிராசா மாஸ்ரரைக் கண்ட உடன நான் முகத்தைப் பொத்தி பீறிட்டு அழத்தொடங்கீட்டன். என்ரசொண்டெல்லாம் விம்மி வெடிச்சுது.
தம்பிராசா மாஸ்ரர் வந்தார். வெடிச்சு வெடிச்சு விசயத்தை சொன்னன். என்னையறியாமல் கை கூப்பிக்கொண்டுது. எங்களுக்கு உதவிசெய்யவேண்டாம். இப்ப எங்களுக்கு அடிக்காமலாவது காப்பாத்து எண்டதுதான் என்ர நேர்த்தி. நிமலனைப் பார்த்தார். என்னடா கொப்பர் அடிச்சவரே எண்டார். அனுபவம் என்ன மாதிரி பிடிச்சுது மனுசன். நிமலன் ஒண்டும் பேசாமல் நிண்டான்.

சரி, வாங்கோ எண்டார். பிறத்தால போனம். வழியில அம்பலப்பிள்ளை மாஸ்ரர் கண்டிட்டார். அம்பலப்பிள்ளை மாஸ்ரருக்கும் தம்பிராசா மாஸ்ரருக்கும் அவ்வளவு சரியில்லை எண்டு அறிஞ்சிருக்கிறம். ஆனால் வீங்கி முட்டின என்ர மூஞ்சியைப் பார்த்துட்டு 'ஏன் மாஸ்ரர் அழுகிறாங்கள்' எண்டார். தம்பிராசா மாஸ்ரர் நிண்டு விசயத்தை சொன்னார். 'பொடியள் என்னட்ட சொல்லிப்போட்டுத்தான் போனவங்கள்.' என்ர எண்சாண் உடம்பும் சில்லிட்டது. தம்பிராசா மாஸ்ரரின்ர கால்ல விழுந்து குமுறி அழவேணும் போல இருந்தது. 'சேர், நான் இவ்வளவு நாளும் உங்கள திட்டினதுக்கு சரியான தண்டனைதான் கிடைக்கப் போகுது. சேர், நீங்கள் அடிக்கலாம் சேர், இனிமேல் காலாட்டினா, கையாட்டினா எல்லாத்துக்கும் அடியுங்கோ சேர்'வார்த்தைகள் உதட்டுக்க நிண்டு அசைஞ்சு கொண்டிருந்தது.

நீங்கள் செய்யிறது சரியான பிழை மாஸ்டர் எண்டார் அம்பலப்பிள்ளை மாஸ்டர். ஐயோ என்ன இது. தெய்வம் வரங்கொடுக்க தடுக்கிற பூசாரி ஆட்டம்.
அம்பலப்பிள்ளை மாஸ்ரரை பிடிச்சுத் தின்னுற கோவம் எங்களுக்கு. கொஞ்ச நேரம் அம்பலப்பிள்ளை மாஸ்ரரும் தம்பிராசா மாஸ்ரரும் தலையாலும், கண்ணாலும் கதைச்சுப்போட்டு விலத்திச்சினம். அந்தப் பேச்சுவார்த்தையில் திருப்தியில்லை எண்டதும் அவயளுக்குள்ள இன்னும் இடைவெளி அதிகமாகுது எண்டதும் எங்களுக்கு விளங்கீச்சுது.

தம்பிராசா மாஸ்ரர் ராமசாமி மாஸ்ரரின் ஒவ்வீசுக்க போய்கதைச்சுப்போட்டு வெளீல வந்தார். சோதின மறுமொழிக்கு காத்துக்கொண்டு நிக்கிற நிலைமையில என்ரநிலம. இதுக்குள்ள மற்றப்பக்கத்தில் அம்பலப்பிள்ள மாஸ்ரரையும் கண்டன். எல்லாம் விளங்கிப்போச்சு. இனியென்ன!
தம்பிராசா மாஸ்ரர் வெளில வந்தார். ஒரு அனுதாபப்பார்வையை எங்களுக்கு மேல விழுத்திப்போட்டு கொஞ்சம் சங்கடப்பட்டபடியே போய்க்கொண்டிருந்தார்.

கொஞ்சத்தால ராமசாமி மாஸ்ரர் வந்தார். நிமலனைப்பார்த்து நீ போகலாம், என்னைப் பார்த்து நாளக்கு அப்பாவைக்கூட்டிவா என்றார். நான் இப்ப அழுகின்ற நிலமயில இல்ல. நானும் எல்லாம் கடந்து கிட்டத்தட்ட சமாதி நிலையில்தான் இருந்தன்.

வகுப்பில ஆரோடயும் என்னால கதைக்கமுடியேல்ல. லைஞ்ரைம், இன்ரெவல்ரைம் எல்லாம் வழமை மாதிரி நான் விளையாடப்போகேல்ல. மேசையில தலையைக்குத்தி விக்கி விக்கி அழுதன். ஒரு பொய்யை மறைக்கிறதுக்கு நான் கனபொய்யள் சொல்லவேண்டி இருந்தது.

இரவிரவா அழுதபடி, காலமவிடியமுதல் நேரத்தோடயே எழும்பி அம்மாக்குப்பக்கத்தில போய்ப்படுத்தன். உருண்டு உருண்டு படுத்தன். அம்மா எழும்பிற மாதிரி இல்ல. மெள்ளவா அம்மான்ர நாடியைத்தடவிக்கொண்டு எழுப்பினன். அம்மா முழிச்சிட்டா. 'என்ன ராசா' எண்டா. எனக்கு உசார் வந்திட்டுது. 'அம்மா அம்மா, அண்டைக்கு பின்னேரம் பள்ளிக்குடத்தால வந்திட்டனல்லே! அதுக்கு ஒரு காயிதம் வேண்டிக்கொண்டு வரச்சொல்லி வைஸ்பிறின்ஸிப்பல் சொன்னவர்..... சுகமில்லை எண்டு எழுதினால் போதுமாம்.' அம்மா திடுக்கிட்டு எழும்பின மாதிரி எழும்பினா. நான் பயந்து போனன். ஆனா நிலைமை அப்பிடி இருக்கேல்ல. அம்மாவுக்கும் உப்பிடி காயிதம் எழுத விருப்பம்போல. எனக்காவண்டி இப்படி காயிதம் எழுதிறதேவை முந்தி ஒருக்காலும் அம்மாவுக்கு வந்திருக்கேல்ல. நான் நல்ல ஒழுங்கு. அதால அம்மா கேள்வியொண்டும் இல்லாம உடன எழுதித்தந்துட்டா.

வயல்வெளி நல்லாவே வரண்டுபோய்க்கிடந்தது. ராவத்தை வயிரவரில் எனக்கு பயம் வரேல்ல. என்னைக் காப்பத்தக் கூடின வல்லமை அவர் ஒருத்தருக்குத்தான் இருக்கெண்டு



படிப்பகம்

www.padippakam.com

நம்பினன். நான் இப்ப ஆரோடயும் சேர்ந்து பள்ளிக்கூடம் போறதில்ல. முந்திப்போய் பிந்திவருவன். வயல்வெளிக்க ஆக்கள் காணாத இடமாப்பாத்து நிண்டுநிண்டு அழுவன். பள்ளிக்கூடத்துக்கு கிட்டப்போன உடனே முகத்தை துடைச்சுப்போடுவன்.

இப்ப ராமசாமி மாஸ்ரரின் ஒவ்வீசுக்கு முன்னால போய் நிக்கிறன். வேற ஆக்களும் முன்னுக்கு வரிசையாய் நிக்கினம். அவை முதல்நாள் பள்ளிக்குடம் வராத ஆக்கள். லைன்ல நிக்க ஊசி போட நிக்கிறமாதிரியும் கிடக்கு. கிட்டப்போக கிட்ட போக நெஞ்சு பக்பக் கெண்ணுது.
ஒருமாதிரி போட்டன். கடிதத்தை வாசிச்சுப்போட்டு நிமிந்து பார்த்தார். ஒரடி சளார் எண்டுது கன்னத்தில. ‘போய் நில்லடா அங்கால ராஸ்கல்’ அழுது கொண்டு வெளில போய் நிண்டன். தெரிஞ்ச மாஸ்ரர்மார், ரீச்சர்மார் எல்லோரும் பாத்துக்கொண்டு போகினம். எனக்கு உடம்பெல்லாம் கூனிக் குறுகுது. புத்தகத்தினால முகத்தை மறைச்சுக் கொண்டு அழுதன்.

அந்தப்பக்கத்தால ஞானமக்கா வாறா. ஐயோ ஞானமக்கா காணப்போறா.... என்ரை அழுகை சுதி கூடுது. சத்தம் வெளீல வராமல் தான் அழுகை. ஞானமக்கா கிட்ட வந்திட்டா. கண்டிட்டா...... இல்ல காணேல்ல. அவ கிட்ட வந்து என்னட்ட ஏதோ கேக்குமாப்போல கிடக்கு. நான் அவ என்னைப் பாக்காத மாதிரி சுத்திறன். சுத்தி சுத்தி அழுகிறன். அவவும் சுத்திறா. கடைசீல என்ர சுத்து அவக்கு விளங்கீட்டுது. ம்...தம்பியர் இவ்வளவுக்கு வந்திட்டார். ம்...ஞானமக்கா சொல்றமாரிக் கிடக்கு. பிறகு ஆளைக காணேல்ல.

ராமசாமி மாஸ்ரர் வந்தார் அவருக்கு கனசோலி ‘நாளைக்கு கொப்பரக் கூட்டியா’ எண்டு போட்டு போட்டார்.
நான் முகத்தையெல்லாம் துடைச்சுப்போட்டு வகுப்புக்கு போனன். வீட்ட போறதா அல்லாட்டி போறதில்லயா எண்டது என்ரயோசின. எல்லாப்பக்கத்தால யோசிச்சாலும் அழுகஅழுகயா வருகுது. நேரா ராவத்த வயிரவரிட்ட போனன். கோயிலுக்கு உள்ளயே போனன்.
கோயிலுக்க ஒருத்தரும் இல்ல. அதுகும் எனக்கு நல்ல வசதியாய் போச்சு. ‘வயிரவரே ஏன் இப்படி என்னைச் சோதிக்கிறாய். நான் உனக்கு என்ன கெடுதல் செய்தன்’ நெஞ்சுருகி வேண்டினன். கோயில சுத்திச்சுத்தியெல்லாம் கும்பிட்டன்.

வெளில வந்தன். கிணறு. என்ர சிநேகிதன்ர அம்மா விழுந்து செத்த கிணறு. ஒருதரும் பாவியாத கிணறு. கிட்டப்போனன் முதல்முறையா கிணத்துக்கட்டத்தொட்டுப்பாத்தன். இதில விழுந்து செத்தா என்னா!
எல்லாம் கணப்பொழுதில, மூள குறுக்கும் மறுக்கும் ஓடுது. அரும்பொட்டில் விலத்திக்கொண்டன்.

வீட்ட போயாச்சு. என்ன எப்படியும் வயிரவர்தான் காப்பாத்தி ஆகவேணும். வேறவழிஇல்ல. வயிரவருக்கு அரிச்சினை செய்யிறது பற்றியும் வயிரவற்ற பெருமையள் பற்றியும் கதைச்சுக்கொண்டு ......... இல்ல புலம்பிக்கொண்டிருந்தன். எல்லாரும் தங்களுக்க சிரிக்குமாப்போல இருந்தது. கடசியா அம்மம்மா என்னைத்தடவிக்கொண்டு ‘ஓம்ராசா ஒண்டுக்கும் யோசியாதையண வாறவெள்ளிக்கிழம அரிச்சின செய்விப்பம்.’ எண்டா. அவ என்னத்தடவேக்க அவவின்ர கண்ணும் கலங்கிப்போயிருந்தது.
அப்பா ‘ வெளிக்கிடு ராமசாமிமாஸ்ரர் வீட்ட போவம்’ எண்டார். நான் குனிஞ்சபடி போய் சைக்கிளில் ஏறினன்.

- புவனன்



மகாஜனாவின்
கல்லூரிக்கீதம்,
கொடிக்கீதம்
இயற்றிய
புலவர்
நா. சிவபாதசுந்தரனார்





படிப்பகம்

www.padippakam.com





# குழப்படிகாரன்

- பாலசூரியன்
(1973-1980)

நான் படித்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் அற்புதமான கலவன் பாடசாலையாகத் திகழ்ந்த மகாஜனாக்கல்லூரி 2010 ஆண்டாகிய இந்த ஆண்டு நூற்றாண்டுவிழா கொண்டாடுகின்றது. 1910ம் ஆண்டு காலத்து மகாஜனாக்கல்லூரியை என்னால் திரும்பிப்பார்க்க முடியாவிடினும், 1973ம் ஆண்டு தை மாதத்தில் மகாஜனாக்கல்லூரியில் நான் முதன்முதலாக காலடி வைத்தபோது 2010ம் ஆண்டு எப்படியிருக்கும் என்றும் எனக்குத் தெரியாது. (2000 ஆண்டு உலகம் அழிந்து போகுமென்று அப்போதும் கதையிருந்தது என்பது எல்லோரும் அறிந்ததே.) குறிப்பாக 2010ம் ஆண்டு மகாஜனாக்கல்லூரியின் நூற்றாண்டுவிழா, மகாஜனாக்கல்லூரியில் மாத்திரமின்றி உலகின் பல பாகங்களில் கொண்டாடப்படுமென்று நான் கற்பனை செய்துகூட பார்த்ததில்லை. எட்டு முழுமையான வருடங்களே எனக்கு மகாஜனாவின் கல்லூரி வாழ்க்கையை அனுபவிக்கக்கிடைத்தது. சிறுவனாயிருந்து இளைஞனாக முகிழ்த்த, அந்த எட்டு வருடங்களில் ஒவ்வொரு வருடங்களிலும் ஏராளமான பசுமையான நினைவுகள் என் நினைவில் உள்ளன. எனது எட்டு வருட பள்ளி வாழ்வு, வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியதால், மகாஜனா எனது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து கிடக்கின்றது.

எனக்கு தெரிந்தவரை எனது அயலான அளவெட்டியின் வடபுற எல்லையில் வசித்த பெரும்பாலானவர்கள், அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையிலும் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியிலும் மாத்திரமே படித்தவர்களாக இருக்கிறார்கள். நான் ஆறாம் வகுப்பு மாணவனாக 1973 ஆண்டில் மகாஜனாக்கல்லூரியில் நுழைய முன்னரே, எனது இரண்டு அக்காமார் மகாஜனாக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தனர். மகாஜனாக்கல்லூரி விளையாட்டு போட்டியையும், நிறுவியவர் நினைவுநாள் விழாவினையும் கண்டு கழிப்பதற்கு அக்காமாருடன் சில தடவைகள் மகாஜனாக்கல்லூரிக்கு வந்திருக்கிறேன். எனவே மகாஜனாபற்றிய எனது நினைவுகள், 1973 ஆண்டிற்கு முன்னரே ஆரம்பிக்கின்றன. 1968 ஆண்டில் அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையில் ஆரம்பித்து 1980 ஆண்டில் (மீட்டல் உயர்தர வகுப்பையும் சேர்த்தால் 1981 ஆண்டையும் சேர்க்கலாம்) தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் முடிவடைந்த எனது பள்ளி அனுபவங்களை நினைவுகூர்ந்து தொகுப்பதென்பது அவ்வளவு எளிதான காரியமாக இல்லாவிடினும், மகிழ்ச்சியான விடயம்தான். ஆனால் அந்த அனுபவங்கள் மிகவும் நீண்டன, எழுத, எழுத எழுதிக்கொண்டே போகலாம், மகாஜனாக்கல்லூரியின் நூற்றாண்டு மலரில் வெளியிடுவதற்கு பொருத்தமற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு என்பது விவசாயம், மீன்பிடி, சீமெந்து உற்பத்தி, கல்வி, அரசியல், கலை, இலக்கியம், இசை, விளையாட்டு, சைவசமயம் போன்ற பல துறைகளிலும் முன்னணி வகிக்கும் ஒரு பகுதியாகும். இந்த வலிகாமம் வடக்கின் தலையாக மகாஜனாக்கல்லூரி பிரதேசம் உள்ளடங்கிலான காங்கேசன்துறை வட்டாரம் விளங்குகின்றது. இந்த வட்டாரத்தை ஒட்டிய மக்களுடனும் சூழலுடனுமான எங்கள் காலத்து (யுத்தத்திற்கு முந்தைய) அனுபவங்கள் இக்கால சந்ததியினருக்கு அதிகம் தெரியாது. அவைகள் பதியப்பட வேண்டும். அப்போதுதான் இன்று மீள்குடியேற்றம் செய்யப்பட்டும், இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாமலும் இருக்கும் வலிகாமம் வடக்கின் தற்போதைய மக்களுக்கு எங்கள் காலத்து கதைகள் தெரிய வாய்ப்பிருக்கும்.

தெல்லிப்பழை சந்தியிலிருந்து மூளாய் - பொன்னாலைக்கு செல்லும் பிரதான வீதி அளவெட்டியின் வடபுற எல்லையை தொட்டுச் செல்கின்றது. தெல்லிப்பழை சந்திக்கும் அளவெட்டி வடபுற எல்லைக்கும் நடுவே, அம்பனைச்சந்திக்கு மிக அருகாக மகாஜனாக்கல்லூரி அமைந்திருந்தது. அளவெட்டி வடபுற எல்லை – தெல்லிப்பழை பிரதான வீதியில் கிழக்குப்புறமாக நாங்கள் மகாஜனாக்கல்லூரியை நோக்கி நடந்தால், எங்களுக்கு பின்னேயும் ஏராளமான மாணவர்கள் நடந்தும் சைக்கிளிலும் வருவார்கள். இதமான காலைச்சூரியனின் கதிர்கள் முகத்தில் பரவ நாங்கள் மகாஜனாவை நோக்கி கொஞ்ச தூரம் அடி எடுத்து வைத்தால், பிரதான வீதியில் வந்து இணையும் ஒழுங்கைகளிலிருந்தும் மாணவர்கள் சிறிது சிறிதாக மகாஜனா நோக்கிய



படிப்பகம்

www.padippakam.com

எங்கள் அணிவகுப்பில் இணைந்து கொள்வார்கள். கூத்தஞ்சீமா தெரு கழிந்து நடந்தால், மலைவேம்பினதும் அரச மரத்தினதும் நிழல்கள் எங்களை ஆசுவாசப்படுத்தும். அதன் பின்னர் இருமருங்கிலும் பனைகளும் அதன் அப்பால் நீளும் வயல்களுமான வீதியோரம் நடந்து கொண்டிருந்தால், அளவெட்டி வடக்கு – அம்பனை புதுரோட்டுச்சந்தி வழியாகவும், பன்னாலை – அம்பனைச்சந்தி வழியாகவும் கொல்லங்கலட்டி - அம்பனைச்சந்தி வழியாகவும் இன்னுமொரு தொகை மாணவ அணிவகுப்புகள் எங்களோடு இணைந்து கொள்வார்கள். இதைவிட, மகாஜனாவை நோக்கி ஆசிரியர்களதும், உயர்தர வகுப்பு மாணவர்களினதும், தூர இடங்களிலிருந்து வருகைதரும் மாணவர்களினதும் சைக்கிள்களும், கார்களும் பஸ்களும் எங்களுக்கு அருகாகவும் நடுவீதியிலும் நகர்ந்து கொண்டிருக்கும். இதனால் அம்பனைச்சந்திக்கும் மகாஜனாவிற்குமிடையிலான அந்த குறுகிய தூரத்தில் அந்த காலை நேரத்தில் யாருமே விலத்த முடியாத அளவிற்கு நெருக்கடி நிறைந்ததாக இருக்கும். இதே கதைதான் மாலையிலும் எதிர்த்திசையில் நிகழும். பாடசாலைவிட்ட பின்னர் மகாஜனாவிற்கு அருகில் நெரிசலாக ஆரம்பிக்கும் எங்கள் அணிவகுப்பு, கொஞ்சம் கொஞ்சமாக சிறுகச்சிறுக, மாலைச்சூரியனின் கதிர்களை எதிர்த்து நாங்கள் வீடுகள் நோக்கி போவோம்.

மகாஜனாக்கல்லூரியின் மூன்றாம் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையிலான ஆரம்பப்பாடசாலை, இரண்டு பிரிவுகளை (பின்னர் முதலாம், இரண்டாம் வகுப்புகளும் சேர்க்கப்பட்டது.) கொண்டதாகவே இருந்தது. ஆறாம் வகுப்பிலிருந்தே மாணவர் தொகை இரட்டிப்பாகி, நான்கு பிரிவுகளை கொண்டதாக மாற்றமடையும். புதிதாக தொடங்கும் இரண்டு பிரிவுகளுக்கும் காங்கேசன்துறை வட்டார பாடசாலைகளின் ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடையே நடாத்தப்படும் போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலமாகவே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். (இப்போது நாடு தழுவி நடாத்தப்படும் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சையின் புள்ளிகள், இப்போட்டிப் பரீட்சையை பதிலீடு செய்கின்றதென அறிகின்றேன்.) மகாஜனாவை ஒட்டியிருக்கும் அயற்கிராமங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர பாடசாலைகளிலுள்ள ஐந்தாம் வகுப்பு மாணவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் இப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றுவார்கள். இப்போட்டிப் பரீட்சைக்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினாலும் (பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை எனக்கு சரியாக தெரியாது. சிலவேளை இருநூற்றுக்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம்) மகாஜனாக்கல்லூரியின் ஆறாம் வகுப்பின் இரண்டு புதிய பிரிவுகளுக்காக ஏறத்தாழ எண்பது மாணவர்களே தெரிவு செய்யப்படுவார்கள்.

வடக்கு வாசலைக் கொண்ட மகாஜனாக்கல்லூரியின் நடராசர் ஆலயத்தின் வலப்புறமாக ஒட்டியிருந்த கட்டிடத்தை நான்கு வகுப்பு அறைகளாக பிரிக்கலாம். 1973 ஆண்டு அந்த நான்கு வகுப்பு அறைகளில் ஆறாம் வகுப்பின் 'ஏ' இலிருந்து 'டி' வரையிலான பிரிவுகள் அமைந்திருந்தன. எமது வகுப்பான 'டி' பிரிவு தென்மேற்கு மூலையில் அமைந்திருந்தது. எமது வகுப்பறையான 'டி' பிரிவு மற்றும் எமது வகுப்பறைக்கு அருகே அமைந்திருந்த 'ஏ' பிரிவையும் மகாஜனாக்கல்லூரியின் மாணவர் விடுதியையும், அரைச்சுவரும் அதன் மேலிருந்த துருப்பிடித்துப்போன சதுர வடிவிலான கம்பி வலையையும் பிரித்தது. எமது வகுப்பறையிலிருந்து சதுரக்கம்பி வலையினூடே பார்த்தால் மகாஜனாக்கல்லூரியின் மாணவர் விடுதியின் குளியல் தொட்டிலும் அதற்கப்பாலுள்ள மாணவர் விடுதியின் உணவகமும் நன்கு தெரியும்.

1972 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் இரண்டாம் வருடத்து மாணவர்களைக் கொண்டதாக எமது ஆறாம் வகுப்பு இருந்தது. புதிய பாடத்திட்டத்தின்படி ஒன்பதாம் வகுப்பில் தேசிய கல்விப் பொதுத்தராதரப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்களாக இருந்தோம். எமது ஆறாம் வகுப்பு ஆசிரியராக விநாயகரத்தினம் மாஸ்ரர் இருந்தார். இவர்தான் எங்களுக்கு தமிழ்ப்பாடமும் கற்பித்தவர். மேலும் நடராஜா மாஸ்ரர் விஞ்ஞானமும், ரோகிணி ரீச்சர் கணிதமும், துரைராஜா ரீச்சர் ஆங்கிலமும், முத்தையா ரீச்சர் சமூகக்கல்வியும், ஆறுமுகம் மாஸ்ரர் சமயமும், அமுதநாயகம் ரீச்சர் சுகாதாரமும், சுந்தரமூர்த்தி மாஸ்ரர் சித்திரமும் கற்பித்தார்கள்.

நாங்கள் ஆறாம் வகுப்பில் இருக்கும்போது பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலிருந்து வருகை தந்திருந்த முசாதிக் மாஸ்ரரும் எங்களுக்கு கணிதம் கற்பித்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் கல்வி கற்கும் ஆசிரியர்கள் மகாஜனாக்கல்லூரிக்கு கற்பித்தல் பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள். அவ்வாறு கணிதம் கற்பிக்க வந்த முசாதிக் மாஸ்ரர் எமது வகுப்பின் அனைத்து மாணவர்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டுவிட்டார் என்றே கூறவேண்டும். தனது பயிற்சிக்காலம் முடிந்து எங்கள் வகுப்பு மாணவர்களிடம் பிரியாவிடைக்கு முன் எடுத்த, நாற்பது நிமிடங்கள் நீடித்த அந்த இறுதி பாடவேளை, முசாதிக் மாஸ்ரர் பேசிக்கொண்டிருந்ததை அனைத்து மாணவர்களும் வெதும்பிய வண்ணம் அமைதியாக உற்றுக்கேட்டுக் கொண்டிருந்ததை ஒருபோதும் மறக்க முடியாது. நாங்கள் அவரை பிரிய மனமின்றி தவித்த அந்த நாளைப்பற்றி மகாஜனாக்கல்லூரியில் கல்வி கற்ற காலம் முழுவதும் அசைபோட்டதும் இன்னமும் ஞாபகம் இருக்கின்றது.

ஆறாம் வகுப்பில் நாங்கள் சேர்ந்து ஒரு வாரம் இருக்கலாம் என்று நினைக்கிறேன். தமிழ்ப்பாட வேளையில், மகாஜனாக்கல்லூரியில் காலடி வைத்த எங்களது முதல் நாள் அனுபவத்தை விநாயகரத்தினம் மாஸ்ரர் கட்டுரையாக எழுதச்சொன்னார். இந்தமாதிரியான கட்டுரையை அந்த வயதில் எழுதுவதென்பது கொஞ்சம் கடுமையான பயிற்சியாகவே எங்களுக்குப்பட்டது. அதுவும் அவரின் கண்முன்னே பாடநேரத்தில் எதையோ எழுதித்தான் ஆகவேண்டும். தனது முதல் ஓரிரு தமிழ்ப்பாட வேளையில் விநாயகரத்தினம்



படிப்பகம்

www.padippakam.com

மாஸ்ரர் தமிழ் கற்பித்தலில் தனது முத்திரையை என்னுள் பதித்திருந்தார். ஆறாம் வகுப்பு தமிழ்ப்பாடம் என்பது ஐந்தாம் வகுப்பு தமிழ்ப்பாடத்திலிருந்து ஒரு பாய்ச்சலாகவே இருந்தது.

*

அப்பொழுதெல்லாம் மூன்றாம் தவணை பாடசாலை லீவு மார்கழி மாதத்தில் ஆரம்பித்து தைப்பொங்கல்வரை நீடிக்கும். தைப்பொங்கல் முடிந்த பின்னர் வரும் முதல் திங்கள் கிழமையிலே பாடசாலையின் முதல் தவணை ஆரம்பமாகும். மகாஜனாக்கல்லூரிக்கு ஆறாம் வகுப்புக்கு போகும்பொழுது பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு புதிதாக சூட்கேஸ் வாங்கிக்கொடுப்பார்கள். எனக்கு கருஞ்சிவப்பு நிறத்தில், மொத்தமான கறுப்பு சதுரக்கோடிட்ட சூட்கேஸ் வாங்கித்தரப்பட்டது.

அளவெட்டி அம்பாள் கோவிலுக்கு அருகாக நீளும் பிரதான வீதியின் கோவில் மடத்தோடு ஒட்டிய வளைவில், தெற்கு புறமாக செங்குத்தாக கீழிறங்கும் ஒழுங்கையில் அமைந்திருக்கும் எனது வீட்டிலிருந்து, எந்த பரபரப்பும் இல்லாமல், மகாஜனாக்கல்லூரியை நோக்கிய எனது முதல் நாள் பயணம் ஆரம்பமாகியது. அப்போது நானும் எனது பெரியக்காவும் சின்னக்காவும் மாத்திரமே மகாஜனாக்கல்லூரியில் படிக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்திற்காக எமது பெற்றோரையும் தம்பி, தங்கைகளையும் பிரிந்து அளவெட்டியில் வாழ்ந்தோம். (பாடசாலை ஆசிரியர்களாக இருந்த எனது அப்பாவும் அம்மாவும் அப்போது முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரத்தில் பணிபுரிந்ததார்கள்.) தை மாதம் குளிர் அதிகம் விலகாத ஒரு காலை நேரம். பெரியக்கா கொஞ்சம் வளர்ந்தவளாக இருந்தபடியால் அவள் தனது சிநேகிதிகளுடன் முன்னே நடந்து போய்விட்டாள். எனது வீட்டிலிருந்து மகாஜனாக்கல்லூரி ஒரு கிலோ மீட்டருக்கு சற்று அதிகமாக இருக்கலாம். சாதாரணமாக பதினைந்து நிமிடத்திற்குள் நடந்து போய்விடலாம். சின்னக்கா என்னோடு என்னருகே மகாஜனாக்கல்லூரிவரை நடந்து வந்தாள். தனது தம்பியை மகாஜனாக்கல்லூரியில் முதல் நாள் சேர்க்கும் பொறுப்பு தன்னிடம் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருப்பதாக என்று உணர்ந்தவளாக என்னவோ, மிகவும் கண்ணியமாக சின்னக்கா என்னோடு நடந்து வந்து, என்னை கல்லூரியின் அலுவலகங்கள் அமைந்திருந்த முகப்பில் கொண்டு வந்து நிறுத்தினாள்.

என்னைப்போலவே ஆறாம் வகுப்பில் புதிதாக சேரும் பல மாணவர்கள் அந்த அலுவலக முகப்பில் வரிசையாக நின்றிருந்தனர். என்னை சேர்ப்பதற்கு சின்னக்கா அழைத்து வந்ததைப்போல அவர்களையும் பெற்றோர்கள் அல்லது மகாஜனாக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மூத்தவர்கள் அழைத்து வந்திருந்தார்கள். நாங்களும் அந்த வரிசையில் சேர்ந்து கொண்டோம். அந்த வரிசை இடுப்பளவிலான உயரங்கொண்ட சுவரின் மேலே அகலமாக திறந்திருந்த கதவுகள்வரை நீண்டிருந்தது. அதுதான் கிளார்க்கற்றை அறையென்று அகலமாக திறந்திருந்த கதவுகளை நோக்கியும் அதுதான் பிறின்சிபலின் அறையென்று நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு நேரே இருந்த அறையையும் சின்னக்கா சுட்டிக்காட்டினாள். கிளார்க்கரிடம் பிறப்புச்சாட்சி பத்திரம், விடுகைப்பத்திரம் போன்றவற்றை கையளித்து, முதல் தவணைக்கான வசதிக்கட்டணத்தையும் செலுத்த வேண்டும் அல்லது வசதிக்கட்டண சலுகையை உறுதிப்படுத்த வேண்டும். (ஒரு குடும்பத்தில் இருவருக்கு மேல் மகாஜனாக்கல்லூரியில் படித்தால் மூன்றாமவரிலிருந்து வசதிக்கட்டண விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.) அதன் பின்னர் ஆறாம் வகுப்பின் எந்த பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம் எனபதை கிளார்க்கர் கூறுவார். இதுதான் புதிதாக சேரும் மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் ஆற்றவேண்டிய கருமம்.

வரிசை மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. வரிசையில் எங்களுக்கு பின்னாலும் பல மாணவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். வரிசையில் நின்று கொண்டிருந்த சில மாணவர்களுடனும் அவர்களை சேர்க்க வந்தவர்களுடனும் சில ஆசிரியர்கள் உரையாடினார்கள். கிளார்க்கரிடம் பதிந்து முடிந்த மாணவர்கள் 'என்னை 'சி' டிவிஷனில் விட்டிருக்கிறார்கள் அல்லது 'டி' டிவிஷனில் விட்டிருக்கிறார்கள்' என்று கொஞ்சம் உரக்கக் கூவிக்கொண்டு அலுவலகப்பகுதியைவிட்டு அகன்று கொண்டிருந்தார்கள். நான் வரிசையில் நிற்பவர்களையும் அகன்று செல்பவர்களையும் இவர்களில் யாரோ என்னுடன் ஒரே வகுப்பில் அமரப்போகின்றார்களே என்று எண்ணியவாறு பார்த்துக்கொண்டிருந்தேன்.

வரிசையில் சேர்ந்து ஏறத்தாள பத்து அல்லது பதினைந்து நிமிடங்களின் பின்னர், மாணவர்களிடம் பத்திரங்களை வாங்குவதும், வசதிக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை வழங்குவதும், எந்த டிவிஷனில் அனுமதிக்கப்பட்டுள்ளீர் என்று சொல்வதுமாக இருந்த கண்ணாடி போட்ட கிளார்க்கரை நேருக்கு நேர் பார்க்கக்கூடிய தூரத்திற்கு வந்துவிட்டிருந்தேன். எனக்கு முன்னால் இரண்டு மூன்று மாணவர்கள் நின்று கொண்டிருந்தனர். கிளார்க்கரின் அறைக்குள் வேறும் சிலர் வேலை செய்வதும், ஆசிரியர்கள் வந்து போவதுமாக இருப்பதையும் நன்கு பார்க்கக்கூடியதாக இருந்தது.

'சிவலிங்கம், இந்த மாணவன் ஆறாம் வகுப்பில் புதிசாய் சேர வந்திருக்கிறான். ஒருக்கா கெதியாக பதிஞ்சு எந்த டிவிஷனெண்டு சொல்ல முடியுமே' என்று கூறியவாறு கிளார்க்கரின் அறைக்குள் ஓர் ஆசிரியை (உண்மையில் அந்த ஆசிரியையின் பெயர் இப்போதும் எனக்கு தெரியாது.) பத்திரங்களை கிளார்க்கரின் முன்னால் நீட்டியவாறு நிற்பது எனக்கு தெரிந்தது. கிளார்க்கர் என் முன்னால் நின்ற மாணவர்களையும் அவர்களை சேர்க்க வந்தவர்களையும் எங்களையையும் சாதாரணமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்த ஆசிரியையின் கையிலிருந்த பத்திரங்களை வாங்கி பதிய ஆரம்பித்தார். இது உண்மையிலே எனக்கு



படிப்பகம்

www.padippakam.com

மிகுந்த எரிச்சலை ஊட்டியது. நான் எனக்கு பக்கத்தில் நின்றிருந்த அக்காவை பார்த்தேன். இந்தமாதியான அலுவலக நடைமுறையை ஏற்றுக்கொள்பவள்போல் அக்கா சர்வசாதாரணமாக இருந்தாள். அந்த ஆசிரியைக்கும் கிளார்க்கருக்கும் பணிவாக மாணவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகவே அக்கா பேசாமல் இருக்கிறாளென நான் அப்போது நினைத்தேன்.

'இப்படி எல்லாரும் இடையில் வந்து பதிந்தால் நாங்கள் எப்ப வகுப்புக்கு போறது' என்றேன் நான் சினங்கொப்பளிக்க அக்காவைப்பார்த்து.

என்னைப்பார்த்து முறைத்த அக்கா கிளார்க்கரையும் கடைக்கண்ணால் பார்த்தாள். நானும் கிளார்க்கரை பார்த்தேன். கிளார்க்கர் தனது உள்ளங்கைகளை மேசையில் வைத்து, தலையை கொஞ்சம் முன்னே நீட்டியும் சரிந்தும் மூக்குக்கண்ணாடிக்கால் என்னைப்பார்த்த பார்வையிலிருந்தே நான் சொன்னது கிளார்க்கருக்கு கேட்டுவிட்டது என்பது நன்கு புரிந்தது.

அப்படியே என்னை கொஞ்ச நேரம் கண்வெட்டாமல் பார்த்த கிளார்க்கர் 'வந்தும் வராததுமாய் குழப்படி செய்ய தொடங்கியாச்சே' என்றார். என் முன்னால் நின்றவர்கள் என்னை திரும்பிப்பார்த்தனர். நான் பேசாமல் நின்றேன்.

பிறகு என்முன்னால் நின்ற மாணவர்கள் அகன்று, என்னை 'டி' டிவிஷனில் விட்டிருக்கிறது என்று கிளார்க்கர் சொல்லும்வரை அங்கே ஏதோவித அமைதி நிலவியதாகவே எனக்கு தோன்றியது.

*

'டேய் நான் இரண்டு மூண்டு தரம் வந்து உன்ர கொப்பியை பார்த்திட்டன் நீ ஒண்டுமே எழுதாமல் இருக்கிறாய்' என்று விநாயகரத்தினம் மாஸ்ரர் கேட்டபோதுதான், நான் மகாஜனாக்கல்லூரியின் முதல் நாள் காலை நிகழ்வில் ஒன்றிப்போயிருந்தது எனக்கு தெரிந்தது.



'சேர், என்ர முதல்நாள் அனுபவத்தை எழுதுவது கொஞ்சம் கஷ்டம்' என்றேன் அவரைப்பார்த்து.

'ஏன் என்னடா என்ன கஷ்டம்? மேல் வகுப்புகளுக்கு போனால் இன்னும் பெரிய கட்டுரைகள், கட்டுரைகளின் சுருக்கம் என்றெல்லாம் எழுத வேண்டிவரும்' என்றார் அவர்.

'என்ர முதல்நாள் அனுபவத்தை எழுதலாம், ஆனால் நீங்கள் என்ன நினைப்பியளோ தெரியாது' என்று நான் இழுத்தேன்.

'நான் என்னத்தையடா நினைக்கிறது. என்ன நீ என்னைப்பற்றியே எழுதப்போறாய்' என்று அவர் இடைமறித்து கொஞ்சம் கோபமாகவே கேட்டார்.

'சீச்சீ இல்லை சேர்' என்று தொடங்கிய நான், எனது முதல் நாள் காலை நிகழ்வை சொல்லத்தொடங்கினேன்.

பாலசூரியன், நெதர்லாந்து
31-10-2010



மகாஜனா ஆசிரியர் குழாம் 1930



படிப்பகம்

www.padippakam.com



சேர் யோன் ராபாற் வெற்றிக்கேடயத்துக்கான
அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கப்போட்டி
முதற்பிரிவு வெற்றிவீரர் - 1971



முதற்பிரிவு வெற்றிவீரர் - 1981



படிப்பகம்

www.padippakam.com

# நினைவு கூர்வதில் பெருமைகொள்கிறேன்

எனது ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தர கல்விவரை என்வீட்டு எல்லையோடு இருக்கும் எனது கல்லூரியாம் மகாஜனாவிலே கல்விகற்று விளையாட்டுத்துறையிலே பாண்டித்தியம் பெற்று இத்துறையினூடாக பல சாதனைகளையும் வெற்றிகளையும் கல்லூரிக்காக அர்ப்பணித்தவன் என்ற ரீதியில் இச்சிறுகுறிப்பினை எழுதுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மகாஜனக் கல்லூரி கல்வித்துறையிலே எவ்வளவு தூரம் முதன்மை வாய்ந்திருந்ததோ அதற்கு நிகராகவே விளையாட்டுத்துறையும் அதிமுதன்மை வாய்ந்ததாகவே காணப்பட்டது. குறிப்பாக மாவட்ட பாடசாலைகள் தழுவியதாக இருந்தாலும் சரி, தேசிய பாடசாலைகள் தழுவியதாக இருந்தாலும் சரி போட்டிகள் என வரும்போது மகாஜனாகல்லூரி இலங்கையின் விளையாட்டுத்துறை வரலாற்றிலே தனக்கென்றொரு முத்திரையைப் பதித்து முன்னணி வகித்த கல்லூரிகளில் ஒன்றாகவே மதிக்கப்பட்டிருந்தது.

கல்லூரியின் விளையாட்டுத்துறை வரலாற்றில் ஆரம்பத்தில் தொடக்கப்பட்ட விளையாட்டுக்களாக உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், இல்லங்களிற்கிடையிலான சுவட்டு மைதான போட்டி, கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இத்துறை சார்ந்த விளையாட்டுக்களும் எல்லா வயதினர்களையும் உள்ளடக்கியதாகவோ அல்லது வயதெல்லை நிர்ணயிக்கப்பட்ட பிரிவுகளாகவோ அமைந்திருக்கவில்லை. உதாரணமாக 1951ம் ஆண்டு உதைபந்தாட்டம் முதன்முறையாக இரண்டாம் பிரிவிலே ஆரம்பிக்கப்பட்டு இப்பிரிவினர் முதன்முதலாக யாழ்.பா.உ. சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலே முதலாம் இடம்பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துக்கொண்டார்கள்.


பாடசாலையிலே கற்பித்து விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக கடமையாற்றிய ஆசிரியர்கள், ஆசிரியைகள் , சக ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் (Coach) எல்லோரது ஒத்துழைப்பும் விடாமுயற்சியும் தான் இத்துறையிலே கல்லாரி ஓங்கி புகழ்பெற சாதகமாக அமைந்திருந்தது. மிக முக்கியமாக மறைந்த முன்னைநாள் எங்கள் அதிபர் அமரர் தெ. து. ஜெயரத்தினம் அவர்களது பணியும் சேவையும் விளையாட்டுத்துறையிலே அவர் காட்டிய ஒத்துழைப்பும் என்றென்றும் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். முக்கியமாக மலையகத்திலே இருந்து கல்விகற்க வந்த மாணவர்களின் வருகைக்குப் பின்தான் கல்லூரி மேலும் விளையாட்டுத்துறையிலே உயர்ச்சியும் வளர்ச்சியும் பெற்றிருந்தது. இவ்வீரர்களினூடாகவே கல்லூரியில் முதன் முதலாக கொக்கி என்ற விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது.

நான் கல்லூரிக்காக விளையாடிய காலங்களிலே உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், மெய்வல்லுனர் போட்டி, கரபந்தாட்டம் ஆகிய துறைகளிலே என்னைப் போல அறிந்தவர்கள் (Out Standing Perforemance) பலர் மகாஜனாவில் விளையாட்டுத்துறை வரலாற்றிலே என்றென்றும் பதிக்கப்படவேண்டியவர்கள். அந்த அடிப்படையிலே நான் சிலரை நினைவு கூர்வதை பெருமையாகக் கருதுகின்றேன்.

S. Thurairajah(Outstanding Sportsman), K. Vinayagamoorthy(Outstanding Sportsman), R. Thavarajah(Outstanding Sportsman), S. Sriskantharajah(Outstanding Sportsman)(Late), N. Sivapathasundaram(Outstanding Sportsman)

K. Sathiyanathan(Outstanding Sportsman), A.C.S. Ismail (Outstanding Sportsman), M. Kylasaratnam, Vadiveswaran, Sribalagengatharan

K. Mohanram, P. Rajakanthan, S. Srikantha, S. Chandralingam, S. Jeyarajah, S. Sripiragasam, R. Rohanrajasingam



இப்படியாக விளையாட்டுத்துறையிலே பல பல சாதனைகள் புரிந்து எமது கல்லூரி இன்றைய காலகட்டங்களிலே இத்துறையில் முன்னேற்றம் காணதது வியப்பான விடயமாகும். ஆகவே இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு பழைய மாணவர்கள், அனைத்துலக ப.மா. சங்கங்கள் தம்மாலான ஒத்துழைப்பையும் சேவைகளையும் வழங்கி இத்துறையை மேன்மேலும் புகழ்பெறச் செய்ய வேண்டுமென அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

- பொ. ராஜகாந்தன்.



படிப்பகம்

www.padippakam.com

V.P. வாசுகன்

# கரையும் நினைவுகள்

வர்ணங்களும் வாழ்வியலும் சலம்பகமாகவே நம்மோடு ஒட்டியுள்ளது, இவ்வுலகம் வர்ணங்கள் கரைந்த ஒரு வெளியாக இருப்பின் வாழ்வு குருடாகவே அமைந்துவிடும். கண்தெரியாதவன், வாழ்வியலிலும் பலவிதமான வர்ணங்கள் உண்டு. சமய, கலாச்சார, அரசியல், விளையாட்டு, போர்வீரர்கள், பாடசாலை, பாடசாலை இல்லங்கள் இவ்வாறு ஒவ்வொன்றிலும் வர்ணங்கள் முக்கியத்துவம் பெற்று தேர்ந்தெடுக்கப்படுகின்றன. காலங்கள் மாறி மாறி, மனித வரலாறு மாறும் போதும் வர்ண இயல்பு மாறுபடுவது கடினமாகவே அமைந்துவிடுகின்றது. மண்ணிற வாழ்வை ஒட்டி அமைந்ததாலோ என்னவோ மகாஜனக் கல்லூரியின் நிறமும் மண்சார்ந்த வண்ணமாகவே உள்ளது. நூறு வருடங்களைக் கடந்து நிற்கும் மகாஜனா வர்ணம், பல தடவைகளில் அதன் வர்ணத்தின் தன்மையை இழந்து விடுகின்றதோ என்றொரு ஏக்கம். சிலவேளைகளில் சிவப்பு சார்ந்தும் பல வேளைகளில் மண்ணிறம் சார்ந்தும் செல்கின்றது. புகலிட நாடுகளில் உள்ள பழைய மாணவர்களாகிய நாம் இதனை உற்று கவனிக்க வேண்டிய கடமை உள்ளது. அங்குள்ள ஏழை மாணவர்களின் வாழ்வியலை ஒட்டியும் வர்ணம் மாறுபடுகின்றது.

நன்றாக காய்ச்சி வெளுத்துக் கட்டும் களுத்துப்பட்டி, பாடசாலை இலட்சணை நிறத்தின் தன்மையை இழக்கின்றது. நன்னீரில் வீட்டில் சலவைசெய்யும் ஒருபகுதி வர்ணம் கூடிய வாழ்வை பெறுகின்றது. மகாஜனாவின் சின்னத்தில்அகல்விளக்கு, உனை நீ அறி என்ற குறியீடும் இவ்வாறான சலவையில் மங்கிப் போய் விடுகின்றன. சாரண மாணவர்கள் இடையேயும் இதே குழப்பத்தை எனது பாடசாலை காலங்களில் காணக்கூடியதாக இருந்தது.

ஒரு நாட்டினதோ, பாடசாலையினதோ கொடிகள் தூரத்தில் பறக்குமாயின் நாம் அதன் நிறமறிந்து வகை பிரித்து விடுகின்றோம். ஒழுங்கு வரிசையில் நீலம், வெள்ளை, சிவப்பு கொடியை தூரத்தில் கண்டதுமே பிரான்ஸ் நாட்டை அடையாளம் காண்கின்றோம். இதே போலவே மகாஜனா கொடியையும் நாம் இனங்காண வேண்டும். அங்குள்ள மாணவர்கள் இதனை உற்றுநோக்குவார்கள். பிரான்சின் பல பாகங்களிலும் உள்ள மாநகரசபை கட்டடம் இன்னும் முக்கிய இடங்களில் பறக்கும் கொடிகளின் நிறம்மங்கி இருப்பதை காண்பது அரிது. சாலைகள் நிறைந்த பிரான்ஸ் நாட்டின் கொடி, யன்னல்களில் தொங்கவிடப்பட்டுள்ள கொடிகள், வாகனங்களில், குடைகளில் கூட அதில் உள்ள வர்ணங்கள் என ஒரு ஓவியம், வர்ணங்கள் நிறைந்த கொடிகளாக குளுட் மொனே (Claude Monet 1840 - 1926) La Rue St Denis, Fete du 30 Juin 1878 என்ற ஓவியத்தில் பதிவு செய்துள்ளார்.

பாடசாலை விழாக்காலங்கள், முக்கிய தினங்களின் போது முக்கிய பிரமுகர்கள், அதிபருடன் வரும்போது நான் சாரண மாணவர்களுடன் வரிசையில் நிற்கும்போது பல தடவைகள் முன்னாலே நிற்கும் சாரண மாணவிகள், உயர்தர மாணவர்களின் பாடசாலை இலட்சணை, களுத்துப்பட்டி போன்றன வற்றில் இக்குறையை கண்டுள்ளேன். சரியான வரிசையில் தெளிவான தூய வெண்ணிற ஆடை அணிந்திருப்போம். இருந்தும் ஏதோ வர்ணங்கள் மாறுபடுகின்றதோ என்றொரு ஏக்கம்.

மகாஜனா ஓவிய ஆசிரியரான திரு தியாகராஜா மாஸ்ரரின் ஓவியவகுப்புக்காலங்களில் வர்ணங்களின் தன்மைகள் பற்றி அறிந்திருந்தேன். மேலும் கொழும்பில் கல்விகற்ற காலங்களில் திரு. தயாபரன் மாஸ்ரர், திருமதி லலிதா நடராஜா ஆசிரியை, சைப்ரஸில் ஓவிய உயர்தர கல்வியின்போது கிளின் கியூஸ் (Glyn Hughes - 1931)போன்றவர்களின் மூலம் எனது சிறுவயதில் வர்ணங்களின் மேலிருந்த மனக்குழப்பங்கள் மென்மையாகவும் ஆழமாகவும் அறிய வாய்ப்புக் கிடைத்தது.

கிளின் கியூஸ் உடன் படித்த, அவருடன் அவரது பட்டறையில் ஓவிய வேலைகளில் இயங்கிய காலங்கள் பொன்னானவை. அக் காலங்கள் வர்ணங்கள் நிறைந்த காலங்கள். அவர் ஆங்கில நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும் இலங்கை பற்றிக் (batic) முறை நன்கு தெரிந்திருந்தார். அவரது எண்பது வருட காலங்கள் மேலைத்தேய நாடுகளிலேயே ஓடியும் அவரது ஏக்கங்களும்,



படிப்பகம்

www.padippakam.com

வர்ணங்களும் கீழைத்தேய நாடான இந்தியா, இலங்கை மீதே வெறித்தோடியிருந்தது. அதோடு நானும் ஓவியத்தின் மீதான ஈர்ப்பில் பிரான்ஸ் வந்தபின்பும் ஓவியக்கண்காட்சிகளை நடாத்தும் வாய்ப்புக்கள் தொடர்ந்து கிடைத்தபோதெல்லாம் அவரும் சைப்பிரசில் இருந்து வந்து திறப்புவிழாவிற்கு சமூகமளிக்க தவறவில்லை.

அவர் ஒரு ஓவியத்தை தீட்டி முடியும் கட்டத்தில் இருப்பினும் ஒரு புள்ளிக்கு சரியான அவர் கனவு கண்ட நிறம் கிடைக்காமலோ அல்லது நிறகலவைகளின் ஆராய்ச்சி தோல்வி பெற்றாலோ கூட அவர் ஓவியம், பட்டறையில் ஒதுங்கி பலகாலம் வாழ்ந்துவிடும். பின் அவ்வர்ணம் கிடைத்தபின்பே அது கண்காட்சி மண்டபத்திற்கு வரும். எனது ஓவியத்தின் மீதுள்ள வர்ணங்களின் தேர்வுகளில் அவர் சொக்கிப்போய் என்னிடம் நன்றாக வர்ணத் தேர்வுகளை உபயோகித்துள்ளாய் என்று பாராட்டுவது மட்டுமல்ல. இன்றும் அவர், மாணவனாகவே அவரை நினைப்பது உண்டு. எனக்கு அது இன்றும் அதிர்ச்சியை கொட்டி வருகின்றது.

ஈழத்தமிழ்மக்களின் அவலத்தைக் கூட தனது ஓவியங்களில் பதிவு செய்துள்ளார். வரலாறுகள் மறக்கப் போவதில்லை. கலைஞன் இறந்தபின்பும் வாழ்கின்றான்.
தற்போது St. Ouen மாநகரசபையால் ஒழுங்குசெய்யப்பட்டு Maison de Quartier du Landy இல் நடைபெறும் எனது புதிய படைப்புக்களோடு வரும் ஏழாவது ஓவியக்கண்காட்சி கூட «La Couleur de l'Exil» (புகலிட வர்ணங்கள்) என்றே தலைப்பிட்டுள்ளேன். சிறுவயதின் ஏக்கங்கள் கூட ஒரு காரணமாக இருக்கலாம். "புகலிட மனிதன் தனது தாய்நாட்டை விட்டு நடக்கும் போது தலைநிறைந்த ஏக்கங்களுடன் செல்கின்றான்."

○



# ஆசை

சிறப்புமிகு தெல்லிப்பழை கிராமமதில்
மண்வாசனையோடு விளைந்து பரந்த
அழகிய அம்பனை வயல் பரப்பில்
இளம் தென்றல்காற்று தாலாட்ட
வெள்ளையுடை உடுத்தி தோழியர் கூடி
கதைகள் பல பேசி மெல்ல நடை பயின்று
மகாஜனஅன்னை மடியமர்ந்து
கல்வி பயின்ற காலம் வாழ்வின் வசந்தம்.
எண்ணும்கால் எத்துணை இன்பம்
மீண்டுவரும் நினைவலையில்
இளசாய் பறக்கின்றேன்!

வருமா வாழ்வில் மீண்டும் இளவசந்தம்?
நீண்டநெடுதூரம்! நெஞ்சு கனக்கின்றது.

தூரங்கள் தொலைந்து!
காலங்கள் கரைந்து!
கோலங்கள் மறைந்து!
அம்மாவின் கைபிடித்து மீண்டும்
மகாஜனஅன்னை மடியமர்ந்து
ஆசான் கதிரேசர் தெள்ளுதமிழ்
படிக்க ஆசை!

— யோகினி கருணைவேல்



படிப்பகம்

www.padippakam.com



நா. சண்முகலிங்கன்

பதினான்கு வயதுச் சிறுவனாக நான் இருந்தபோது எனது இலக்கியத்துறை ஈடுபாடு தீவிரம் பெற்றது. அப்போது நான் எஸ்.எஸ்.சி (பழைய காலத்தின் O/L) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் தமிழ்பாடம் நடந்து கொண்டிருந்தபொழுது எனது புத்தகக்கட்டுக்குள் மஹாகவியின் வள்ளி தொகுதி இருந்ததை ஆசிரியர் கதிரேசப்பிள்ளை கண்டுவிட்டார். பாராட்டும் புன்சிரிப்புடன் என்னைப் பார்த்து இதைக்கொடு இன்று இதிலுள்ள கவிதைகளை சொல்லித்தருகின்றேன் என்று வகுப்பில் மற்ற மாணவர்களுக்கும் படித்துக் காட்டினார். எச்.எஸ்.சி வகுப்புக்கு வந்ததும் என் வாசிப்பு பல்துறை சார்ந்து கிளைத்தது. இருப்பினும் இலக்கியமே என் முழுமையான கவனத்தை ஈர்த்தது. மணிக்கொடி என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகையையும் அப்போது நண்பர்களுடன் சேர்ந்து நடத்தினேன். கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தில் சொற்பொழிவுக்காக டொமினிக் ஜீவா, கனகசெந்தில்நாதன், மாதகல் வ. கந்தசாமி ஆகியவர்களை நாம் அழைத்து வந்தோம். என்னோடு அப்போது சேர்ந்து செயற்பட்டவர்களில் தினக்குரல் ஆசிரியர் ஆ.சி. செல்வன் முக்கியமான நண்பர்.

மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களான க. நாகலிங்கம், புலவர் சிவபாதசுந்தரனார், செ. கதிரேசர்பிள்ளை, த. சண்முகசுந்தரம் ஆகியோர் என்னில் வெளிப்பட்ட ஆர்வத்தை தூண்டிச் சுடர்விடச்செய்தனர்.

## வடக்குகிழக்கு மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விப்பிரச்சினைகள்

கல்விப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் போது பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல், A/L பரீட்சைப் பெறுபேறுகள் போன்ற விடயங்களே யாவரது கவனத்தையும் ஈர்க்கும் பிரச்சினைகளாக உள்ளன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் வடக்கு கிழக்கு மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கள் வசதிகள் பற்றிய பிரச்சினை முக்கிய கவனத்துக்குரியதாக உள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள 2000 வரையான பாடசாலைகளில் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி பயில்கிறார்கள். இவர்களில் ஏறக்குறைய 50 ஆயிரம் பேர்வரைதான் A/L வகுப்புக்களில் கற்பவர்கள். இது மொத்த மாணவர்களில் 8 வீதத்திற்கு உட்பட்ட தொகையாக உள்ளது. பெரும்பான்மையினரான மாணவர்களின் பிரச்சினை ஆரம்பக் கல்வியையும் O/L வரையான இரண்டாம் நிலைக் கல்வியையும் சார்ந்ததாக உள்ளது. பாடசாலைக்கே செல்லாது விடுதல், 5ம் 6ம் தரங்களுக்கு முன்னரே இடைவிலகல், O/L தரத்தில் பெறுபேறுகளில் வீழ்ச்சி போன்ற பகுதிகளிற்கும் ஒருவர் சென்றுபார்த்தால் ஆரம்பக்கல்வி தொடர்பாக நாம் எதிர்நோக்கும் பிரச்சினையின் பரிமாணம் துலக்கமாகும். அடிப்படை வசதிகளான வகுப்பறை கட்டிடங்கள், தளபாடங்கள், மலசல கூட வசதிகள், குடிநீர் போன்ற பௌதீக வளங்களின் ஒறுப்பு பின்தங்கிய பகுதிகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களை அதிக அளவில் பாதிக்கின்றது. இதற்கு மேலாக ஆசிரியர் பற்றாக்குறை மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் 4500 வரையான ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இது மொத்த ஆசிரியர் தேவையின் 12 வீதமாக உள்ளது. ஆசிரியர்கள் பின்தங்கிய பகுதிகளை விட்டு நகர்ப்புறங்களுக்கு இடமாற்றம் பெறுவதாலும் கடந்த பல ஆண்டுகளாகப் பின்தங்கிய பகுதிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படாததாலும் சில பிரதேசங்களில் ஆசிரியர் வெற்றிடம் 40 - 45 வீதமாக உள்ளது. பௌதீக வளங்கள் இன்மை, ஆசிரியர் பற்றாக்குறை என்ற இரு பிரச்சினைகளின் தாக்கம் சிறிய பாடசாலைகளை அழுத்திக்கொண்டிருக்கின்றது. இதனால் பல்கலைக்கழக அனுமதி, உயர்கல்வி தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசும் பொழுது ஒருவகைக் குற்றஉணர்வு என் மனத்தை உறுத்துவதை உணர்கின்றேன். இவையாவும் மத்தியதர வகுப்புப் பெற்றோர்களின் அக்கறைகள். இதைப்பற்றியே கவனம் செலுத்துவது பெரும்பான்மை மக்களின் அடிப்படைக் கல்வியைப் புறக்கணிப்பதாக முடியும். இருபது வருடங்களாக தொடர்ந்த யுத்தம் கல்வியை சீரழித்துள்ளது.

## வடக்கு கிழக்கு மாணவர்களின் சாதனைகள்

சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன என்பது உண்மைதான். மாணவர்களின் விடாமுயற்சியும் ஊக்கமும் வடக்கிலும் கிழக்கிலும் இன்று வெளிப்படையாகத் தெரியும் ஒரு இயல்பு. சாதாரணமாக ஒரு மாணவனிடம் உறைந்திருக்கும் சக்தியின் 15 - 20 வீதம் தான் கல்வி செயற்பாட்டில் வெளிப்படும் என்பர். வடக்கு கிழக்கு பிரபல கல்லூரிகளில் மாணவர்களின் சக்தி வெளிப்பாட்டின் அளவு 80 -90 வீதம் வரை உயர்ந்துள்ளது என்றால் மிகையாகாது. சொல்லொணா கஷ்டங்களின் மத்தியிலும் கல்விக்காக பெற்றோர் செய்யும் தியாகம் மலைப்பைத் தருகின்றது. சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமன் செய்யும் கருவி என்ற வகையிலும் கல்வி சமூக மாறுதலுக்கான ஊக்குசக்தியாகச் செயற்படுகின்றது. பெற்றோரின் தியாகம் தொடர்பான ஒரு பொருளியல் உண்மையையும் நாம் மறக்கக் கூடாது. உயர்கல்வியைத் தம் பிள்ளைக்கு பெற்று கொடுக்க அவாவும் பெற்றோருக்கு அதன் பயன் நிச்சயமாக கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் உண்டு. தமது தியாகம் வீண்போகாது என்ற உறுதி தியாகத்தை செய்வதற்கான மனநிலையை உண்டாக்குகின்றது. ஆரம்பக் கல்வியின் பயன் நீண்டகாலத்தின் பின் கிடைப்பது. வடக்கில் வன்னிப் பகுதிகளிலும் கிழக்கின் படுவான் கரையிலும் ஏழைப்பெற்றோர் கல்விக்காக அதுவும் ஆரம்பக் கல்விக்காக தியாகம் செய்யத் தயாராகஉள்ளனர் என்று கருதுவதோ பிள்ளைகள் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் கல்வியில் ஈடுபடுகின்றனர் எனக் கூறுவதோ உண்மைக்குப் புறம்பானது. சாதனைகள் நகரமயப் பண்பாட்டுச் சூழல் உடைய பகுதிகளில் நிகழும் ஒன்றுதான். வடக்கு கிழக்கின்



படிப்பகம்

www.padippakam.com

பொதுவான கல்வி நிலையும் அதிலும் குறிப்பாக பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பக் கல்வியும் பின்னடைவை கண்டுள்ளது.

## கல்வித்துறை அபிவிருத்தியில் சமூகப்பங்கேற்பும் மக்கள் ஈடுபாடும்

எமது நாட்டில் கல்வித்துறை தனிநபர்களினதும் சமூகத்தினதும் பங்கேற்பு மூலம்தான் 1960 வரை நடைபெற்றது. அந்த முறையில் பல குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் சமூகப் பங்கேற்பு அன்றிருந்தது. உதாரணத்திற்கு நான் கல்வி கற்ற மகாஜனாக் கல்லூரி தனியார் கல்லூரியாக இருந்தது. அக்கல்லூரியின் பெரிய கட்டடங்கள் யாவும் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதிமூலம் கட்டப்பட்டன. இப்பொழுது எந்தப் பாடசாலையிலும் மக்கள் பங்கேற்புடன் ஒரு காரியத்தைத் தானும் நிறைவேற்ற முடியாது. A/L பரீட்சை 3 மாதங்களின் பின் நடைபெறவுள்ளதெனக் கொள்வோம். பிரபல கல்லூரி ஒன்றில் உயிரியல் பாடத்தை A/L வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தனிப்பட்ட அலுவல் காரணமாக வெளிநாடு போய்விடுகின்றார். அவரின் இடத்துக்கு தகுதியான ஒருவரை நியமிப்பதற்கும் அவருக்கு தகுந்த சன்மானம் வழங்கிக் கல்வியைத் தொடர்வதற்கும் எமது பாடசாலை அமைப்பில் வழி இல்லை. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமூகப் பங்கேற்பு எள்ளவும் கிடையாது.

வடக்கு கிழக்கில் கல்வித்துறையின் பணித்துறை ஆட்சி 25000 ஆளணியைக் கொண்டதாக உள்ளது. 2000 பாடசாலைகள் உள்ளன. இந்த நிருவாக இயந்திரத்தின் உறுப்பினராக அங்கமாக விளங்கும் ஆசிரியர் ஒருவர் தான் பணியாற்றும் கல்வி நிறுவனத்தின் அர்ப்பணிப்புள்ள சேவகராக தன்னை அடையாளம் காண்பதில் பல சிக்கல்கள் தோன்றிவிட்டன. அந்நியமாதல் செயல்முறை நாம் இங்கு தெளிவாகக் காணலாம்.

வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தத்தின் பின்னணியில் ஒரு விசித்திரமான சூழ்நிலை உள்ளது. இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் கல்வித்துறை நடவடிக்கைகள் பூரணமாக மக்கள் பங்கேற்புடன் நடைபெறுகின்றது. ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றார்கள். ஏனைய பகுதிகளில் கல்வி அமைச்சு என்ன செய்கின்றது? என்று கேட்பதன் மூலம் தங்கள் தார்மீகக் கோபத்தை வெளியிடுகிறார்களே அன்றி மக்கள் முன்வந்து எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுவது கிடையாது. பழைய மாணவர் சங்கங்கள் கூட அரசின் வளப்பங்கீட்டில் தமது கல்லூரிக்கு என்ன பங்கு கிடைக்கும் என்பதை தீர்மானிக்கும் அமுக்க குழுக்களாக இயங்குகின்றனவே அன்றி கல்லூரிகளின் வளர்ச்சியில் பங்காளிகளாக இல்லை.

## ஈழத்தில் வாசிப்பு ஆர்வம்

கல்விமுறையில் புகுந்துள்ள போட்டி, ரீயூசன் முறை ஆகியன வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடிக்கின்றன. நுண்ணறிவுமிக்க மாணவர் இயல்பாகவே விடுப்பு ஆர்வம் உடையவர்கள். புத்தகங்களை நுணுகி ஆராயும் இயல்பு அவர்களிடம் இயல்பாகவே எழும். நமது கல்விமுறை அதனை மழுங்கடிக்கின்றது. ஆங்கில அறிவு அருகிக்கொண்டு போவதாலும் வாசிப்பு தடைப்படுகின்றது. தரம் 10இல் படிக்கும் மாணவன் சமூகக்கல்வி அல்லது விஞ்ஞானத்தைப் படிப்பதற்கு ஒரேயொரு புத்தகத்தை பயன்படுத்துகின்றான். நாடு முழுவதிலுமுள்ள மாணவர்கள் யாவரும் ஒரே புத்தகத்தைத் தான் படிக்கின்றனர். இப்புத்தகத்தை விளக்கும் சுருக்கக் குறிப்பாகத்தான் வியாபாரத்திற்காக எழுதப்படும் வினா - விடைகள் துணை நூல்கள் அமைகின்றன. பல்வகைப் பாடநூல்(Multiple text) - ஒரே பாடவிதானம் என்ற முறை முன்பிருந்தது. அப்போது புகழ்பூத்த பாடநூல் எழுத்தாளர்கள் இருந்தார்கள். ஒரே பாடநூல் முறையில் பயிலும் மாணவன் பல்கலைக்கழகம் போனபின்பும் திருந்துவதில்லை. உயர் கல்வித்துறையின் இன்றைய ஆசிரியர் பரம்பரை, பல்வகைப் பாடநூல்கள் ஒரு துறையில் பெருகுதல் தம் இருப்பிற்கே ஆபத்தானது என்று உணர்கிறார்கள்.

---

மூன்றாவது மனிதன் இதழ் 14 (2002) இல் வெளிவந்த மகாஜனன் நா. சண்முகலிங்கன் அவர்களின் நேர்காணலிலிருந்து தொகுக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# மகாஜனாவும் எனது நினைவுகளும்

1970ம் ஆண்டு தொடக்கம் 1982 ம் ஆண்டு வரை மகாஜனாவில் எனது கல்வியைத்தொடர்ந்தேன். இன்று ஒரு நல்ல நிலையில் நான் இருப்பதற்கு மகாஜனாக்கல்லூரியில் நான் கற்றுக்கொண்ட கல்வி தான் காரணம் என அடிக்கடி நினைத்துக்கொள்வேன். இந்த வருடம் மகாஜனாக்கல்லூரி தனது 100 வது ஆண்டுவிழாவை கொண்டாடுகிறது. முதலில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு எனது நினைவுகளை பின்நோக்கி பார்க்கிறேன்.



எமது மண்ணில் கொடிய யுத்தம் ஒன்று உருவாகிக்கொண்டிருந்த காலம் அது. எனினும் எனது கல்லூரி வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க முடிந்தது. எனது தந்தையார்(தம்பிராஜா) இடமாற்றம் பெற்று மகாஜனாக்கல்லூரிக்கு வந்தபோது அவருடன் நானும் மகாஜனாக்கல்லூரிக்கு காலடி எடுத்து வைத்தேன். முத்தையா ரீச்சர் எனது வகுப்பாசரியர். மறக்கமுடியாத நினைவுகள் அன்பின் வடிவமாக ஆசரியை. 2002 ம் ஆண்டு இலங்கை சென்றிருந்தபோது அவரை சந்தித்து உரையாடினேன். அவரைத்தொடாந்து 3ம் வகுப்பு தொடக்கம் 10 ம் வகுப்பு வரை பல ஆசிரியர்கள் வகுப்பாசிரயர்களாக வந்து சென்றார்கள். தம்பு ரீச்சர், தனபாலசிங்கம் மாஸ்ரர், விநாயகரட்ணம் மாஸ்ரர், துரைச்சாமி ரீச்சர், காளிதாசன் மாஸ்ரர், கெங்காதரன் ரீச்சர், செல்லப்பா ரீச்சர், அமுதநாயகம் ரீச்சர், பற்றி ரீச்சர், யோகநாதன் ரீச்சர்,அம்பலப்பிள்ளை மாஸ்ரர், புவனச்சந்திரன் மாஸ்ரர், பாலசுப்பிரமணியம் (பி ரி) ரீச்சர் என்பவர்களிடம் எனது கல்விச்செல்வத்தினை பெற்றுக்கொண்டேன். பாடசாலைக்கு உற்சாகத்துடன் சென்று வருவதற்கு இந்த ஆசிரயர்கள் தான் காரணமாக இருந்தார்கள். அதைவிடவும் மிகவும் உற்சாகமான பள்ளித்தோளிகள். சௌமினி, சௌமியா, வாசுகி, சாந்தி, கீதா, கமலினி என நெருங்கிய தோழிகளுடன் 10 வகுப்பு வரை படித்தகாலங்கள் இன்னமும் நினைவில் நிற்கிறது. கிரிஜா, அனுசா, சியாமா, கௌரி, ஜெயமலர், மீரா, ஜெயந்தி என இன்னும் பலதோழிகள் இவர்களுடன் 6ம் வகுப்பிலிருந்து 9ம் வகுப்புவரை ஒன்றாகப்படித்தேன். 10 ம் வகுப்பில் வகுப்பு பிரிக்கப்ட்டபோது நானும் வாசுகியும் கமலினியும் 10 இ வகுப்பில் இருந்தோம். பற்றி ரீச்சர் எமது வகுப்பாசிரியர். புவனச்சந்திரன் மாஸ்ரர் கணக்கு பாடமும் காளிதாசன் மாஸ்ரர் விஞ்ஞானப்பாடமும், பற்றி ரீச்சர் சமூகக்கல்வியும், கெங்காதரன்



தம்பிராஜா மாஸ்ரர்

## வல்லிபுரம் தம்பிராஜா (1920-1986)

### எனது தந்தையார் பற்றிய சில நினைவுக்குறிப்புகள்

எனக்கு 6 வயதாக இருந்தபோது எனது தந்தையாருக்கு மகாஜனக்கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. நானும் அப்பாவும் வீட்டிலிருந்து நடந்து பாடசாலைக்கு சென்றது இன்னமும் ஞாபகத்தில் உள்ளது. தெருவில் நடக்கும் போது எனது கையை இறுகப்பற்றி பிடித்திருப்பார். பெரிய வாகனங்கள் வரும் போது என்னை தெருவின் ஒரத்தில் நன்றாக தள்ளி விட்டு என் பக்கத்தில் நின்றதும் நன்றாக ஞாபகம் உள்ளது. தெருவில் செல்பவர்கள் எனது அப்பாவின் செய்கையை பார்த்து சிரிப்பதும் உண்டு. 1971ம ஆண்டு நான் இரண்டாம் வகுப்பில் மகாஜனக்கல்லூரியில் எனது கல்வியை ஆரம்பிக்கும் போது அப்பாவும் தனது சேவையை ஆரம்பித்தார்

எனது தந்தையார் தமிழ் சமயம் ஆகிய பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர். என்னவொரு விடயத்தை அவரிடம் கேட்டால் பாட்டுடனும் பொருளுடனும் அதனை புரியவைக்கும் வல்லமை பெற்றவர். பாடசாலையில் மாணவர்களுக்கு நல்ல அடியும் போடுவதாக பலர் கூறியதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பா மிகவும் கண்டிப்பானவர். விடியற்காலை நான்கு மணிக்கு



படிப்பகம்

www.padippakam.com



றீச்சர் தமிழும் படிப்பித்தது இன்னமும் ஞாபகம் இருக்கிறது. அந்த வகுப்பில் எப்பொழுதும் ஒரு கலகலப்பு இருந்து கொண்டுதான் இருந்தது. மறக்கமுடியாத ஒரு காலம். ஆதன் பின்னர் க.பொ.த சாதாரணவகுப்பு பரீட்சை நடந்தது. ஒவ்வொருவரும் தமக்கு உகந்த பாடநெறிகளை கற்க அவரவர் துறைக்கு சென்றனர். நானும் அனுசாவும்,கமலினியும் கலைவர்த்தக பிரிவிற்கு வந்தோம். புதிதாக பகீரதி, இராஜலக்சுமி, இந்துமதி சுசீலா (மல்லாகம்) சுசீலா(கொல்லன்கலட்டி), அமுதா, அகிலேஸ், யோகேஸ் என பலமாணவிகள். இரண்டு வருடகாலம் படிப்பின் சுமைகள் ஒரு புறம், பல்கலைக்கழகம் போக வேண்டுமென்ற இலக்கு மறுபுறம் அதுமட்டுமா இல்லை பாடசாலையின் விளையாட்டுப்போட்டிகள், நாடகப்போட்டிகள்,பேச்சு போட்டிகள் என பல விடயங்களிலும் ஆர்வமாக ஈடுபட்ட காலம் அது. காலம் சென்ற சரவணபவன் மாஸ்ரர் எனக்கு பொருளியல் கற்பித்தார். அந்த பாடத்தில் ஒரு பிரியத்தை உருவாக்கியவர் அவர். கணக்கியல் பாடத்தினை புஸ்பராசா மாஸ்ரர் கற்பித்தார் நல்ல பகிடிகளும் விட்டு அவர் பாடத்தை கற்பிப்பார். இராஜகுலேந்திரன் மாஸ்ரர் தமிழை கற்பித்தார் யோகநாதன் றீச்சர் இந்துநாகரீகம் எனக்கு கற்றுத் தந்தார். உண்மையில் இவர்கள் தந்த கல்வி இன்றும் கூட எனக்கு பயனைத்தருகிறது. இந்த ஆசிரியமணிகளுக்கு இந்த மலரின் ஊடாக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

க.பொ.த.உயர்தரவகுப்பு படிக்கும் போது மாணவதலைவியாகவும், துரையப்பா இல்லத்தலைவியாகவும் இருந்த அந்தக்காலங்கள் அனுபவம் நிறைந்த காலங்கள். அன்னக்கிளி றீச்சருடன் எடுத்த புகைப்படம் ஒன்று இன்னமும் என்னிடம் உள்ளது. போரினால் எத்தனையோ விடயங்களை இழந்து விட்டோம் இருந்தாலும் நான் படித்த பாடசாலையை இன்றும் நினைவுகூர்ந்து பார்க்க கொஞ்ச சின்னங்கள் இன்னமும் வைத்துள்ளேன். எனது வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்பட்ட காலமும் இந்த காலம் தான். காதல்வயப்பட்ட காலம் எனது கணவர் பாலசூரியனை சந்தித்தகாலம். நாங்கள் இருவரும் எமது பாடசாலை நாட்களைப்பற்றி அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு. அவருக்கு தெரிந்தவர்களை எனக்கு தெரியும் எனக்கு தெரிந்தவர்களை அவருக்கு தெரியும்.
2002 ம் ஆண்டு எமது குழந்தைகளுடன் பாடசாலை சென்றபோது ராஜகுலேந்திரன் மாஸ்ரரை மட்டும் சந்திக்க முடிந்தது. பாடசாலையில் எனக்கு கல்வி தந்த ஆசிரியர்களை விசாரித்த போது அனைவரும் ஓய்வு பெற்றதாக கூறினார்கள். காலங்கள் விரைவாக கடந்து விட்டது ஆனால் பாடசாலைக்குள் காலடி எடுத்து வைத்ததும் நான் சிறுமியாகிவிட்டதாக ஒரு உணர்வு வந்ததை அன்று என்னால் உணரமுடிந்தது. எமது கல்லூரி இன்னும் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வளரவேண்டும் என வாழ்த்துகிறேன்.
சிவானந்தவல்லி ( ஆனந்தி) பாலசூரியன்.



படிப்பதற்காக எனது தூக்கத்தினை கலைப்பார். விடிய விடிய அப்பா எனக்கு கந்தபுராணம், மகாபாரதம், திருக்குறள் என பல நல்ல விடயங்களை சொல்லித்தந்திருக்கிறார். இளமையிற்கல்வி சிலையில் எழுத்து எனக்கூறியே இவற்றினை எனக்கு சொல்லித்தந்தார். அவர் கூறியது மாதிரி அவரிடம் படித்த பல விடயங்கள் எனது மனதில் இன்றும் நிலையாக இருக்கின்றது. இன்று நான் அப்பாவிடம் கற்ற விடயங்களை எனது அடுத்த சந்ததிக்கு சொல்லிக்கொடுக்கவும் உதவியாக உள்ளது. அந்த நேரங்களில் எல்லாம் அப்பாவின் நினைவு வந்து போகும். மகாஜனாவில் படித்தபோது ஒரு தடவை நான் 3ம் வகுப்பு படித்தபோது கணக்கு பாடறீச்சர் வராததினால் அப்பாவிடம் கணக்கு பாடம் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
எனது தந்தையார் கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் மகாஜனக்கல்லூரியில் தமிழ் சமயம் ஆகிய பாடங்களை 6ம் வகுப்பு தொடக்கம் 10 வகுப்பு வரைக்கும் கற்பித்தவர். தமிழ் மொழி மீது மிகவும் பிரியம் கொண்டவர். எதைக்கேட்டாலும் நாலடியாரில் இருந்து ஒரு பாடலையோ அல்லது திருக்குறளில் இருந்து ஒரு குறளை உதாரணமாக எடுத்து கேட்டவிடயத்தை விளங்கவைப்பார். எனது தந்தையார் சிறுவனாக இருந்தபோது சத்தியவான் சாவித்திரி நாடகம் ஒன்றில் தான் சாவித்திரியாக நடித்தாகவும் அதில் அவர் பாடிய பாட்டினை அடிக்கடி எனக்கு பாடிக்காட்டுவார். பெண்பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும் எனக்கூறுவார். இந்த சிறுகுறிப்பினை எழுதுவதன் மூலம் எனது தந்தையாரை நினைவுகூருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

- ஆனந்தி பாலசூரியன், நெதர்லாந்து



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்



Mohan jewellery mart

மோகன் ஜுவலரி மாட்

Tél.: 01 42 05 65 26
201, rue du Fg. St. Denis - 75010 Paris
M : La Chapelle / Gare du Nord

E-mail : mohanjm@hotmail.fr www.mohanjewellerymart.fr

மகாஜனா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம்

MUSIC INDIEN

தென்னிந்திய இசைதட்டுக்களின் சாம்ராஜ்ஜியம்



தமிழ் - ஹிந்தி
திரைப்படங்கள் - திரைப்படப்பாடல்கள்
DVD - VCD - CD
Audio & Video Cassette
போன்றன தரமானதாகவும், மலிவு விலையில் பெற
நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்
MUSIC INDIEN

Contact : 06 64 15 89 62



தமிழ் சின்னத்திரை தொடர் நாடகங்கள் எம்மிடம் DVD யில் கிடைக்கும்

222, Rue du Fbg. Saint Denis - 75010 PARIS
Tél.: 01 40 05 18 22 - Fax: 01 42 09 29 09
(M°: La Chapelle ou Gare du Nord)




படிப்பகம்

# சுமங்கலி பரடைஸ்

ஆடவர், நங்கையர், சிறுவர், சிறுமியர்களுக்கான
நவநாகரீக ஆடைத் தினுசுகள், கைக்கடிகாரங்கள்,
அலங்காரப் பொருட்கள் அனைத்தையும்
உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்ய என்றும்
தவறாது விஜயம் செய்யுங்கள்!

சாறி பிளவுஸ் உடனடியாக நமது கடையில் தைத்துக் கொடுக்கப்படும்
மற்றும் உங்கள் அனைத்து தையல் வேலைகளுக்கும்
தவறாது விஜயம் செய்யுங்கள்



Pro. S. Raj - Cell : 06 68 98 61 61
8, Rue Cail - 75010 Paris

Tél.: 01 40 38 00 38 Fax : 09 65 03 32 31
E - mail: sumangaliparadizes@orange.fr
Web: www.sumangaliparatizes.com


மகாஜனா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம்




## S.P.RAJU JEWELLERY



13 Rue Cail
75010 Paris
Tél. : 01 46 07 43 42

199 Rue du fbg St Denis
75010 Paris
Tél. : 01 58 20 17 33

M° : La Chappelle ou Gare du Nord

## கிருஷ்ணபவன்

100 % சைவ உணவகம்

உங்கள் நாவிற்கு நற்சுவைதரும் தரமான உடலுக்குடன் தயாரித்த தாயக சைவ உணவு வகைகளையும், குடும்பத்துடன் வந்து சுவைத்து மகிழ்ந்திட பாரிஸில் ஒரே ஒரு சைவ உணவகம்.



Tél.:
01 42 05 78 43

Krishna Bhavan
21-24 rue Cail - 75010 Paris
*M° : La Chapelle ou Gare du Nord*



## அறிவாலயம் புத்தகசாலை

புத்தகங்களின் சங்கமம்

அனைத்து வகையான புத்தகங்கள், பத்திரிகைகள்
வாழ்த்து அட்டைகள், மற்றும் உங்கள் வீட்டு
கொண்டாட்டங்களுக்கு தேவையான சோடனை
பொருட்கள், பரிசுப்பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்

தமிழ் பிரெஞ்சு ஆங்கிலம்
மொழிகளில் அனைத்து
பயனுள்ள புத்தகங்களையும்
வாங்கிப் பயனடையலாம்



Tél.: 01 44 72 05 34 - Fax : 01 44 72 05 35
PARIS ARIVAALAYAM
7, RUE PERDONNET - 75010 PARIS
M° : La Chapelle / Gare du Nord Email : arivaalaya@aol.com

## KANNIMAARAA

*Restaurant indien*
Spécialité du sud de l'inde

**3 rue du Moulin des Prés, 75013 PARIS**
M° - Place d'Italie
**Tél.: 01 45 81 53 09**
Ouvert tous les jours Sauf le dimanche
De 12h00 à 14h30 et de 19h00 à 23h30

www.padippakam.com




மகாஜனா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம்






படிப்பகம்

VS·CO
Cash & Carry

**Epicerie fine exotique**
197 rue du Fbg St.Denis - 210 rue du Fbg St.Denis
75010 Paris - 01 40 34 71 65 - vsco@mti.fr



மகாஜனா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம்


Du Nouveau
CHENNAI CAFÉ
Restaurant Indien
Végétarien et Non Végétarien

Tél.: 09 52 14 56 21
Ouvert tous les jours

176 Rue du Faubourg St.Denis - 75010 Paris
*E-mail : Chennaibhavan@gmail.com*
Métro : Gare du Nord

www.padippakam.com




மகாஜனா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம்






படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்